# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள்

சமரசிங்க குணசேகர



கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள்

சமரசிங்க குணசேகர

கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Laws On Children's Rights
by
Samarasinghe Gunasekara.

Publisher
© Department of Education Management Development.
National Institute of Education.
Maharagama - Sri Lanka.

Sponsor
Education for Conflict Resolution Project
UNICEF - 1995.

For free distribution to schools in Sri Lanka to promote Children's Rights to principals and teachers.
1995 - First Publication : (Sinhala) 8000 copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள்

**சமரசிங்க குணசேகர**
B. A. (Peradeniya) Dip. in. Ed (Vidyodaya) M. Ed. (Colombo)
PGDE in. Psy. Asst (Colombo) M. Sc (Ed. Mgt) (U.K)
PGDE in Ed-Mgt( U.K.)

தமிழாக்கம்: **ஆர்தர் ஜோன்ஸ் பெர்னான்டோ**

பதிப்பாசிரியர்: **தை. தனராஜ்** M.Ed., Dip. in Ed., Dip in Ed.Mgt..
செயற்றிட்ட அலுவலர். தே. க. நி.

உதவி
ஐக்கியநாடுகள் குழந்தைகள் நிதியம்
(யுனிசெப்)

**கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மகரகம**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAWS ON CHILDREN'S RIGHTS


| | | |
|---|---|---|
| Author | : | Samarasinghe Gunasekara |
| Translator | : | Arthur Jones Fernando |
| Editor | : | T. Thanaraj |
| Project Co-ordinator | : | A. S. Balasuriya |
| Sponsor | : | Education for Conflict Resolution Project<br>UNICEF 1996 |
| Publisher | : | Department of Education Management<br>Development, National Institute of<br>Education, Maharagama, Sri Lanka. |

For free distribution to schools in Sri Lanka to promote children's rights among principals and teachers. First publication (Tamil) 1998 - 5000 Copies

---

பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய அறிவை அதிபர், ஆசிரியர் மத்தியில் மேம்படுத்துவதற்காக இலங்கைப் பாடசாலைகளில் இந்நூல் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. முதற்பதிப்பு (தமிழ்) 1996 – 5000 பிரதிகள்

| | | |
|---|---|---|
| மேலட்டை | : | ஹேமஜித் மகிந்தரத்ன |
| சித்திரம் | : | நெவில் பெரேரா |
| அச்சுப்பதிப்பு | : | |
| விநியோகம் | : | வெளியீட்டுத்துறை, தே. க. நி. மகரகம. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தம்மிடம் பொறுப்பளிக்கப்படும் பிள்ளைகளது நலன் தொடர்பாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள பொறுப்புகள் பல உள்ளன. இக் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டுப் பிள்ளைகள் தொடர்பாக அதிபர் களும் ஆசிரியர்களும் தாம் உரித்தாக்கிக் கொண்டுள்ள அதிகாரங்களும் பல உள்ளன. இப் பொறுப்புகளும் அதிகாரங்களும் வெறுமனே விழுமியஞ் சார்ந் தவை மாத்திரமல்ல என்பது பல்வேறு சட்டங்களின் மூலம் தெளிவாக் கப்பட்டுள்ளது.

தம் பிள்ளைகள் மீது இயற்கைப் பெற்றார் கொண்டுள்ள பெற்றார் அதிகாரத் துக்குச் (Patria Potestas) சமமான சட்டபூர்வமான அதிகாரத்தைத் தம்மிடம் பொறுப்பளிக்கப்படும் பிள்ளைகள் தொடர்பாக அதிபர்களும் ஆசிரியர்களும் உரித்தாக்கிக் கொண்டுள்ளார்கள் எனச் சட்டம் குறிப்பிடுகிறது. Loco Parentis என்ற லத்தீன் தொடர்மூலம் குறிப்பிடப்படும் அவ்வதிகாரத்தை விபரிக்கப் பெற்றார் போன்று என்ற தமிழ்த் தொடரை பிரயோக்கிக்கலாம். தம் கண் காணிப்பிலே விடப்படும் பிள்ளைகளது நலன் கருதி பெற்றோர் போன்று செயற்படச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பற்றிய விளக்கத்தை அதிபர் கொண்டிருத்தல் அவசியம். பிள்ளைகளது நன்மைக்காக தம் பணிகளை நிறைவேற்றிக் கல்வியின் உயர் நோக்கங்களை அடைவதற்கு அவ்வறிவு மிக அவசியமேயாகும்.

**திரு. சமரசிங்க குணசேகரவின் "பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள்"** என்ற இந்நூல், அத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கொண்ட ஒரு முயற்சியேயாகும். ஆசிரியராகவும் கல்வி அதிகாரியாகவும் கல்வி முகாமைத்துவ ஆலோசகராகவும், பணியாற்றி பெற்றுக் கொண்ட கல்வித்துறை பற்றிய அவரது அனுபவங்களையும் சட்டப் படிப்பின் மூலம் அவர் பெற்றுக்கொண்ட சட்ட முறை பற்றிய அவரது அறிவையும் இந்நூலில் காணலாம்.

காலத்தின் தேவை உணர்ந்து இந்த நூலை ஆக்கியமைக்காக நூலாசிரியர் திரு சமரசிங்க குணசேகர அவர்களுக்கும், நூலை வெளிக் கொணர்ந்த ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்துக்கும், அதன் சமாதானக் கல்விச் செயற்றிட்டத்தின் இணைப்பாளர் திரு. ஏ. எஸ். பாலசூரிய அவர்களுக்கும் இந்நூலைத் தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ள திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ அவர்களுக்கும் தமிழில் பதிப்பித்த எமது துறையைச் சார்ந்த செயற்றிட்ட அலுவலர் திரு. தை. தனராஜ் அவர்களுக்கும் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறையினதும் தேசிய கல்வி நிறுவகத்தினதும் நன்றியும் பாராட்டுகளும் உரித்தாகும்.

க. மு. அ. துறை
தே. க. நிறுவகம்
மகரகம

**ஈ. எஸ். லியனகே**
உதவிப் பணிப்பாளர் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

இலங்கைச் சிறார்களது உரிமைகள் தொடர்பான சட்டங்கள் பற்றிய ஓர் அடிப்படையிலான ஆய்வு இந் நூலிலே இடம்பெறுகிறது. ஒரு சட்ட நூலில் காணப்படுவதைப்போல நீதிமன்றத் தீர்ப்புகள் போன்ற மூலாதாரங்களைக் கையாண்டு அவ்வாறான சட்டங்களை விபரமாக ஆய்வுக்கு உட்படுத்துவதை விடுத்து இந்நூலில் அச் சட்டங்கள் தொடர்பான ஓர் அடிப்படையான அறிமுகத்தைச் செய்யவே நாம் முயன்றுள்ளோம்.

இந் நூலை ஆக்கும்போது நாம் உசாத்துணையாகக் கொண்ட சட்ட நூல்களும் வேறு மூலாதாரங்கள் ஏராளமாகும். மேலும் தகவல்களை வழங்கி பலர் எமக்குத் துணை புரிந்தனர். அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூற நாம் கடமைப் பட்டுள்ளோம்.

கல்விச் சட்டம் என்பது கல்விக் கட்டளைகள், விதிகள், சுற்றுநிருபங்கள் என்பனவற்றோடு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு துறையே என்ற கருத்து நிறுவப்பட்டிருந்த ஒரு கால கட்டத்தில் அத்துறையைப் புதிய ஒரு கண் ணோட்டத்தோடு ஆய்வு செய்ய நாம் இதற்கு முன்னர் ஆக்கிய "இலங்கையில் கல்வி தொடர்பான சட்டங்கள்" என்ற நூல் வாயிலாக முனைந்தோம். இந்நூல் அம் முயற்சியின் மற்றுமொரு படியேயாகும்.

புதுப் புது முயற்சிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்படுவது சகஜமாகும். எனவே இந்நூலிலும், பல தவறுகள் குறைகள் ஏற்பட்டிருக்கலாம். தங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள், வழிகாட்டல்கள் மூலம் அத்தவறுகளையும் குறைகளையும் எதிர்காலத்தில் களைந்து எம்முயற்சியில் வெற்றிபெற முடியும்.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்துதவிய திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னான்டோ அவர்களுக்கும் தமிழில் சிறப்பாக பதிப்பித்த எனது நண்பரும் செயற்றிட்ட அலுவலருமான திரு. தை. தனராஜ் அவர்களுக்கும் நூலை வெளிக் கொணர்ந்த எனது நண்பரும் யுனிசெப் சமாதானக் கல்விச் செயற்றிட்ட இணைப்பாளருமான திரு. ஏ. எஸ். பாலசூரிய அவர்களுக்கும் என்றும் எனது நன்றிகள் உரித்தாகும்.

க. மு. அ. துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

**சமரசிங்க குணசேகர**
பிரதம செயற்றிட்ட அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கல்வித்துறை சார்ந்த ஆளணியினரின் நடத்தையினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றார் நீதி கேட்டு நீதி மன்றங்களை நாடும் நிகழ்வுகள் இன்று நமது நாட்டில் அதிகரித்து வருகின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் இத்தகைய நிகழ்வுகளை நாம் மிக அரிதாகவே கேள்விப்பட்டிருக்க முடியும். அதிபர் - ஆசிரியர் - மாணவர் உறவு நிலையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இப்புதிய போக்கின் காரணத்தை ஆய்வது காலத்தின் தேவையாகும்.

மாணவர்கள் பாடசாலையின் விதிமுறைகளுக்கும் மரபுகளுக்கும் கட்டுப்பட்டு ஒழுகுவது எவ்வளவு முக்கியமானதோ அதே அளவுக்கு மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவற்றைப் பேணுவதும் அதிபர் ஆசிரியர்களின் தவிர்க்க முடியாத கடமையும் பொறுப்புமாகும். இக் கடமையும் பொறுப்பும் விழுமியஞ் சார்ந்த அல்லது அறநெறி சார்ந்த ஒன்று என பலர் நினைக்கின்றரே தவிர இந்நாட்டின் அரசியல் யாப்பிலும் சட்டமுறைமையிலும் அவை விதிக்கப்பட்டுள்ளன என்பதை மிகச் சிலரே அறிந்துள்ளனர். கல்வித்துறை சார்ந்த அனைவரும் நமது அரசியல் யாப்பிலும் நாட்டின் சட்டங்களிலும் மற்றும் கல்வியமைச்சின் சுற்று நிருபங்களிலும் மாணவர்களின் உரிமைகள் பற்றியும் மாணவர்கள் தொடர்பாக தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார எல்லைகள் பற்றியும் தெளிவாக அறிந்திருப்பது இன்று மிகவும் அவசியமானதாகும். ஆனால் அவற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்புகளும் தமது சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளும் வழிவகைகளும் மிகவும் அரிதாகவே உள்ளன என்பதும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய உண்மையாகும்.

திரு. சமரசிங்க குணசேகரவினால் சிங்களத்தில் எழுதப்பட்டுத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள இந்நூல் மேற்குறிப்பிட்ட குறைபாட்டினை நீக்கி கல்விசார் ஆளணியினர் மாணவர்களின் உரிமைகள் பற்றியும் தமக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள சட்ட பூர்வமான அதிகாரங்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஓரளவேனும் துணைபுரியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்நூலினைத் தமிழாக்கம் செய்வதற்கு அனுமதி அளித்த மூலநூலாசிரியர் அவர்களுக்கும் நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாஸ உடகம அவர்களுக்கும் உதவிப் பணிப்பாளர் நாயகம் திரு. ஈ. எஸ். லியனகே அவர்களுக்கும் தெளிவான தமிழில் மொழிபெயர்த்த ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகும்.

புத்தம் புதிதாகத் தோன்றி வளர்ச்சி பெறும் கல்விசார்ந்த எண்ணக்கருக்களை தமிழ் மட்டுமே அறிந்த வாசகர்கள் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இந்நாட்டில் வேதனை தரும் அளவுக்கு குறைவாகும். இதனை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதற்கு சிங்களத்தில் எழுதப்படும் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க பொருளுதவி செய்துவரும் யுனிசெப் நிறுவனத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் இணைப்பாளரும் தேசிய கல்வி நிறுவக செயற்றிட்ட அலுவலருமான திரு. ஏ. எஸ். பாலசூரிய அவர்களுக்கும் எமது விசேட நன்றி உரியது.

தமிழில் கலைச்சொல்லாக்கம் ஒருமுகப்படுத்தப்படாத நிலையில் இவைபோன்ற நூல்களைத் தமிழாக்கம் செய்வதில் பல்வேறு இடர்களும் தடைகளும் ஏற்படுகின்றன. இந்நூலின் தமிழாக்கத்திலும் பதிப்பித்தலிலுமுள்ள குறைகளை எமக்கு அறியத் தருவதன் மூலம் எமது எதிர்காலப் பணியினை இன்னும் திருத்தமாகச் செய்வதற்கு உதவுமாறு வாசகர்களை பணிவன்புடன் வேண்டுகிறோம்.

**தை. தனராஜ்.**
பதிப்பாசிரியர்

க. மு. அ. துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உரிமைகளை இழந்த பிள்ளைகள் | 01 |
| 2. | பிள்ளைகளால் இழக்கப்பட்ட உரிமைகள் | 09 |
| 3. | பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தலும் ஆசிரியர்களது பொறுப்புகளும் | 15 |
| 4. | பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் | 20 |
| 5. | பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான இலங்கைச் சட்டங்கள் | 24 |
| 6. | பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரசியல் யாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் | 27 |
| 7. | பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்கள் | 30 |
| 8. | பிள்ளைகளின் உரிமைகளும் குற்றவியற் சட்டமும் | 41 |
| 9. | பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான சட்டங்கள் | 50 |
| 10. | பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய தீங்கியல் சட்டம் | 58 |
| 11. | குடும்பச் சட்டமும் வேறு சட்டங்களும். | 67 |
| 12. | பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்களை அமுலாக்கல் | 72 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 1

# உரிமைகளை இழந்த பிள்ளைகள்

பிள்ளைப் பருவமானது மானிட வாழ்வின் ஒரு முக்கிய காலகட்டமாகும். எனவே ஒரு பிள்ளை அப்பருவத்திலே தான் அனுபவிக்க உரித்துடைய அனைத்து உரிமைகளையும் உரியவாறு அனுபவிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறது. மேலும் பிள்ளைப் பருவத்துக்கு உரிய உடல், உள முதிர்ச்சி இன்மை காரணமாக ஒரு பிள்ளையின் பிறப்புக்கு முன்பும் பின்பும் வளர்ந்தோர் பிள்ளையின் மீது விசேட கண்காணிப்புச் செலுத்த வேண்டும் என்பது ஏற்கப்பட்ட ஒரு நியதியாகும். இந்த நியதி ஏற்றுக் கொள்ளப்டுவதன் காரணமாக வளர்ந்தோரால் பிள்ளைகளின் மீது நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகள் பல உண்டு. இப்பொறுப்புகளின் அடிப்படையில் பிள்ளைகள் கொண்டுள்ள உரிமைகளும் பல உள்ளன.

இவ்வாறாக ஒரு பிள்ளையின் அல்லது அதன் பெற்றாரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் இனம், மதம், மொழி, பால், சமூகநிலை, அரசியல் கொள்கை மற்றும் வேறு எத்தகைய வேறுபாடுகளையும் கவனத்திற்கொள்ளாது ஒரு பிள்ளையானது தான் அனுபவிக்க உரித்துடைய சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு.

எனினும் இவ் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களோ எண்ணிலடங்கா. பிள்ளை களின் உரிமைகளை அவர்களிடத்தேயிருந்து பறித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் பலவாகும். அவ்வாறு நடந்துகொள்வோர் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப் பதற்கான பொறுப்பைத் தம் கடமையாகக் கொண்டிருப்பவரே ஆவார் என்பது மிகவும் துரதிஷ்டமான விடயமாகும்.

பிள்ளைகளது உரிமைகளை அவர்களிடத்தேயிருந்து பறித்துக் கொள்வோர் அல்லது பிள்ளைகள் தொடர்பான உரிமைகளை மீறுவோர் அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதில் பொறுப்பாளிகளான வளர்ந்தோரேயாவர். அவர்கள் வீட்டில் பாதையில் பாடசாலையில் வேலைத் தலத்தில், மற்றும் பல்வேறு இடங்களில் பிள்ளைகளின் உரிமைகளை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்கிறார்கள். பெற்றார், மூத்த சகோதர, சகோதரியர், உறவினர், ஆசிரியர்கள் ஆகியோர் அத்தகைய வளர்ந்தோர் ஆவர். இவ்விதமாக அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பிள்ளைகளது உரிமைகளை மீறுவதனால் பிள்ளைகள் பலவாறான உள, உடல் சார்ந்த இன்னல்களுக்கு ஆளா கின்றனர்.

வயதுவந்தோர் பிள்ளைகளின் உரிமைகளை எவ்வாறு மீறுகின்றனர்? அல்லாதுவிடின் பிள்ளைகளின் உரிமைகளை எவ்வாறு அபகரித்துக் கொள்கின்றனர்? இவ் வினாவுக்குரிய விடையைப் பெற்றுக் கொள்வதற்கான மிகச் சிறந்த முறையாக விளங்குவது தம் உரிமைகள் இழக்கப்பட்டதன் காரணமாக வேதனைக்கும் நிர்க்கதியான நிலைமைக்கும் உள்ளான பிள்ளைகளின் கதைகளை விளங்குவதாகும்.

இந்நூலின் முதலாம் ஆய்வுப் பொருள் பிள்ளைப் பருவத்திலே தாம் அனுபவிக்க உரித்துடைய உரிமைகள் இழக்கப்பட்டமையால் பலவாறான வேதனைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகி அனாதையரான ஆயிரக் கணக்கிலான பிள்ளைகளில் ஒருசிலர் பற்றிய உருக்கமான கதைகளே இங்கு இடம் பெறுகின்றன. இக்கதைகளில் குறிப்பிடப்படும் நபர்களின் பெயர்கள் உண்மையில்லாவிடினும் அவற்றில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள் முற்றிலும் உண்மையே.

பிள்ளைகளது உரிமைகள் என்பன எவை? பிள்ளைகள் அவற்றை எவ்வாறு இழக்கிறார்கள்? பிள்ளைகளது உரிமைகளை அவர்களிடமிருந்து அபகரிப்போர் யார்? போன்ற விடயங்களை ஆராய முன்னர் அடுத்து வரும் கதைகளை கவனமாக வாசியுங்கள்.

## வீட்டிலேயே சித்திரவதைக்கு உள்ளான குசுமாவினதும் சோமபாலாவினதும் கதை.

குசுமா, சோமபாலா ஆகிய இரு பிள்ளைகள் பற்றிய கதை பிள்ளைகளைத் தவறான வழியில் ஈடுபடுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் வாயிலாகப் புலனான உண்மைச் சம்பவமேயாகும். இந்த ஆய்வினை நிகழ்த்திய ஆய்வாளரான கலாநிதி திருமதி விமலா டி சில்வா, இலங்கையில் பிள்ளைகள் தவறான வழிகளில் ஈடுபடுத்தப்படல் தொடர்பான பல சம்பவங்களைத் தம் ஆய்வுகளின் வாயிலாக வெளியிடுகிறார். பிள்ளகளைத் தவறான வழியில் ஈடுபடுத்தல் என்ற தலைப்பில் 1990 ஒக்டோபர் மாதம் பொருளியல் நோக்கு சஞ்சிகையில் வெளியான திருமதி சில்வாவின் கட்டுரையில் இடம்பெற்ற செய்தி கீழே காணப்படுகிறது.

மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற இராணியின் தீர்மானத்தை அவளது உறவினர் எவருமே எதிர்க்கவில்லை. அவளது கணவனான ஜினதாச கூட அத் தீர்மானத்துக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவள் தனது இள வயதினரான மூன்று பிள்ளைகளையும் விட்டு விட்டு வெளிநாடு சென்று விட்டாள். எனினும் பதின்மூன்று வயதுடைய சிறுமியான குசுமாவினால் தாயில்லாத வீட்டில் சமையல் வேலையில் ஈடுபடவும் 4 வயதுடைய தனது தம்பி சமீரவைப் பார்த்துக் கொள்ளவும் முடிந்தது. பதினொரு வயது நிரம்பிய சோமபாலா தனது அக்காவுக்குக் கூடமாட ஒத்தாசைகள் செய்யக்கூடியவனாக இருந்தான்.

பிள்ளைகளின் தந்தையோ இடையிடையே எதாவதொரு வேலையைச் செய்து கொண்டிருந்தார். அத்துடன் தினமும் குடிப்பதில் அளவில்லா ஆர்வம் கொண்டிருந்தார். பொறுப்பற்ற நபராக இருந்தபோதிலும் மனைவியின் வெளிநாட்டுப் பயணத்தின் பின்பு தன்னை மாற்றிக் கொள்வார் என அனைவரும் நம்பினர். மேலும் அவருடைய தாயார் அவரது வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு சில வீடுகளுக்கு அப்பால் குடியிருந்தபடியால் அவரைக் கண்காணிக்கவும் முடிந்தது.

அத்தகைய நிலைமை அக் குடும்பத்தில் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தவதாக அமைந்தது. இராணியின் பணத்தினால் இக் குடிசைக்குப் பதில் ஒரு புது வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும். குசுமாவுக்குத் தங்க நகைகள் கிடைக்கும் சோமபாலா உரிய பருவத்தை அடைந்ததும் வாணிக முயற்சியொன்றில் ஈடுபடுவான். மேலும் இரண்டு வருடங்களே னும் இராணி தன் கணவனது துன்புறுத்தல்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

இவ்விதம் பல எதிர்பார்ப்புகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் இராணி புறப்பிட்டுச் சென்றாள்.

குசுமா பகல் உணவைச் சமைத்து வைத்து தன் தம்பியைப் பாட்டியின் வீட்டுக்கு அனுப்பி அதன் பின்னர் நேரத்தோடு பாடசாலைக்குச் சென்றுவிடுவாள். குசுமா தன் நம்பிக்கையான தோழியிடம் பின்வருமாறு இரகசியமாகக் கூறியதாகப் பாடசாலையில் ஒரு வதந்தி பரவியிருந்தது. "எனது அப்பா அம்மாவோடு செய்வதை என்னோடும் செய்கிறார்" ஆரம்பத்தில் பாட்டியார் இதனை நம்பாவிடினும் தொடர்ந்து துருவித் துருவி விசாரிக்கையில் தந்தை கடுமையான போதைக்கு ஆளாகிய சந்தர்ப்பங்களில் அச் சிறுமியைத் தனது பாலியல் இச்சைக்கு பயன்படுத்திக் கொண்டதாகவும் எவ்வாறிருப்பினும் சிறுமியின் கன்னிமையில் பங்கம் விளையவில்லை எனவும் தெரிய வந்தது. பாட்டியார் உடனே குசுமாவையும் அவளது இளைய தம்பி சமீரவையும் தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டார். எனினும் அந்த அசிங்கமான வதந்தி காரணமாக அச் சிறுமியைப் பாடசாலையில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் பாட்டியாருக்கு ஏற்பட்டது.



இதனால் ஆத்திரமடைந்த ஜினசேன பழிதீர்த்துக் கொள்ளும் நோக்குடன் வீட்டு வேலைகளைச் செய்து கொள்ளவும் தனது வியாபார நடவடிக்கைகளுக்கு தனக்கு உதவி தேவை எனவும் காரணம் கூறி சோமபாலாவைப் பாடசாலையில் இருந்து விலக்கிக் கொண்டார்.

ஒரு நாள் தன் தந்தையின் கட்டளைப்படி தோட்ட வேலையில் ஈடுபட வேண்டிய சோமபாலா அதனைச் செய்யாது அதற்குப் பதிலாகத் தன் தந்தையின் சட்டைப்பையிலி ருந்து பணத்தைத் திருடி, நண்பர்களோடு படம் பார்க்கச் சென்றான். அவன் மீண்டும் வீடு வந்து சேர்ந்தபோது அவனது தந்தை அவனைப் பிடித்து ஒரு மரத்திலே கட்டிவைத்து நையப்புடைத்தார். சோமபலா கதறியபோதும் எவருமே உதவிக்கு வரவில்லை. தந்தையின் செயல் கீழ்ப்படிவில்லாத ஒரு மகனை நல்வழிப்படுத்தும் நோக்கில் பெற்றாருக்குள்ள உரிமையை நடைமுறைப்படுத்தியது மட்டுமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சென்ற பின்பு தான் பிணைக்கப்பட்டிருந்த கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு சோமபாலா தன் மாமாவிடம் ஓடிச் சென்றான். தனது மைத்துனனின் நச்சரிப்பைச் சகிக்கவியலாத மாமா சோமபாலாவைக் கிராமத்து விகாரையின் தலைமைப் பிக்குவிடம் ஒப்படைத்தார். சிறுவன் காலக்கிரமத்தில் பிக்குவாக்கப்படுவான் என்ற நம்பிக்கையை மாமா கொண்டிருந்தார்.

## கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளான சாந்தியின் கதை

அனாதைப் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் ஒரு சிறுவர் இல்லத்தில் வாழும் ஒரு சிறுமியே சாந்தி. அவள் பால்யப் பருவத்திலிருந்தே ஒரு துரையின் பங்களாவில் வேலைக்காரியாக அடிமைச் சீவியம் நடத்த நேரிட்டது. அதிகாலையில் விழித்தெழுந்து நடுநிசியை அண்மிக்கும் வரை தினந்தோறும் அவளது பருவத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையால் தாங்கிக் கொள்ள முடியாதளவு வேலைப் பளுவை அவள் சுமக்க வேண்டியிருந்தது. மேலும் அவள் சொல்லொணாத உடலளவிலான தண்டனைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக நேரிட்டது. வீட்டுத் தலைவியின் கொடூரமான சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்ளவியலாத அவள் பங்களாவில் இருந்து தப்பித்துச் செய்கையில் பொலீசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டாள். நீதிமன்றத்தால் இந்த அனாதை இல்லத்துக்கு அனுப்பப்பட்டதாக அவள் பற்றிய அறிக்கைகளில் காணப்படுகின்றன. அடுத்து நாம் சாந்தியின் கதையைக் கேட்போம்.

எனது பெயர் சாந்தி. எனக்கு வயது 13. நீதிமன்றத்தால் அனாதை இல்லத்துக்கு அனுப்பப்பட முன்னர் நான் ஒரு பங்களாவில் வேலை செய்தேன். என்னை அந்த பங்களாவில் ஒப்படைத்தவர் எனது தந்தையாரே. உண்மையைக் கூறுவதாயின் எனது தந்தை என்னை அந்த பங்களாவுக்கு விற்றுவிட்டார் என்றே கூற வேண்டும். எமது தாயார் எம் தந்தையைக் கைவிட்டுச் சென்ற பின்பு தந்தையார் என் பெரிய தம்பியை வேறொரு பங்களாவுக்குக் கொடுத்து விட்டார்.

"நாங்கள் உங்களது பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவோரும், நன்கு கவனிப்போம். சின்ன பேபியோடு விளையாடுவதை விட வேறு ஒரு வேலையும் இல்லை." என்னை பங்களாவில் ஏற்றுக் கொள்ளும்போது நோனா அப்படித்தான் கூறினார்.

அப்போது எனக்கு 6 வயதுதான். கிராமத்துப் பாடசாலையில் முதலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். நோனா அன்று அப்படிக் கூறிய போதும் அதன் பின்னர் ஒருபோதும் நான் பாடசாலைக்குச் செல்லவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு எனது தந்தை என்னைப் பார்க்க வரவில்லை. என்னில் அக்கறை கொள்ள வேறொருவர் இருக்கவும் இல்லை.

பங்களாவை அடைந்த முதல் நாளில் இருந்தே நான் வேலை செய்ய நேரிட்டது. 6 வயதில் இருந்து 13 வயதில் பருவமடையும் வரை நான் ஓர் அடிமையைப் போன்று வேலை செய்தேன்.



குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளல், வீட்டைக் கூட்டித் துப்புரவு செய்தல், உடுப்புகளைத் துவைத்தல், கடைக்குச் செல்லல், காரைக் கழுவுதல், நாய்களைக் குளிப்பாட்டுதல், தோட்டத்தில் வேலை செய்தல் என்பன நான் சிறு வயது முதல் செய்துவந்த வேலைகள்.

வளர வளரப் பெரிய வேலைகளைச் செய்ய வேண்டி நேரிட்டது. சமையல் வேலை, உடுப்புகளை அழுத்துதல், வீட்டை ஒழுங்குபடுத்துதல், சட்டி பானைகள் பீங்கான்களைக் கழுவுதல் முதலிய வேலைகளையும் சேர்த்து செய்ய வேண்டியிருந்தது. பேபிமார்களுக்கு எனது வயதுதான். ஆனால் அவர்கள் பள்ளிக் கூடம் போகிறார்கள். புத்தகங்கள் வாசிக்கிறார்கள்; விளையாடுகிறார்கள். நான் பள்ளிக்கூடம் போவதுமில்லை புத்தகம் வாசிப்பதுமில்லை. இப்போது எனக்கு எழுத்துகளும் ஞாபகத்தில் இல்லை.

என்னுடைய மடைத்தனத்தினால் நான் பல பிழைகளைச் செய்வதாகக் கூறி நோனா என்னை அடிக்கடி அடிக்கிறார்; திட்டுகிறார். நோனா மட்டுமல்ல துரையும் பொல்லாதவர். பேபிமார் அதைவிடப் பொல்லாதவர்கள்.

நோனாவும் துரையும் பேபிமாரும் கையால் மட்டுமன்றிக் காலாலும் என்னைத் தாக்கி என்னைத் துன்புறுத்துகிறார்கள். சில வேளைகளில் பிரம்பினாலும் அடிக்கிறார்கள். சில பிழைகளுக்காகச் சாப்பாடு தராமல் என்னை அறையில் பூட்டி வைப்பார்கள். என் உடம்பு பூராவும் புண்கள்; தடியால் அடித்த தழும்புகள்; தீயினால் சுட்ட வடுக்கள்.

நோனாவுக்குக் கடுமையாக ஆத்திரம் வந்தால் கரண்டியைச் சூடாக்கி என் முதுகில் சூடு வைப்பார். நான் கதறினால் நோனா எனக்கு அடிப்பார். அப்போது துரையும் அடிப்பார். தாங்கிக் கொள்ள முடியாமல் நான் பங்களாவில் இருந்து தப்பிச் சென்றேன். கால் போன போக்கில் எங்கேயாவது செல்லும் நோக்கததோடு வீதியை அடைந்தேன். இருப்பினும் எங்கே செல்வேன்? எனது தாயைப் பற்றியோ தந்தையைப் பற்றியோ எனக்கு ஒன்றுமே தெரியாதே. அவர்கள் ஒருவரும் என்னைப் பார்க்க வரவேயில்லை. எனக்குப் போய்ச் சேர எந்த வீடும் இல்லை. நான் வீதியில் கால் போன போக்கில் செல்லும் போதுதான் பொலீசார் என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீசார் என்னை நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள். நீதி மன்றம் எனது புண்களுக்கு மருந்திட என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தது. அதன் பின்னர் பிள்ளைகளுக்கான இந்த அனாதை இல்லத்துக்கு வந்தேன். என்னைப் போன்று அனாதையான பிள்ளைகள் தான் இங்கே இருக்கிறார்கள். சிலர் தாயில்லாத பிள்ளைகள். வேறுஞ் சிலர் தந்தையில்லாதவர்கள்.பங்களாவை விட ஆயிரம் மடங்கு நல்ல இடம் இது. இருந்தாலும் அம்மாவிடம் செல்ல எனக்கு விருப்பம். பெரிய தம்பியைப் பார்க்க எனக்கு மிகுந்த ஆசை. எனது தந்தையார் வறுமை காரணமாக என்னை விற்றபோதும் நான் அவரில் அன்பு செலுத்துகிறேன். அப்பா என்று அழைக்க நான் ஆசைப்படுகிறேன். இது நல்ல இடம். சாப்பாடு கிடைக்கிறது. எந்தத் தொல்லையும் இல்லை. என்றாலும் பாடசாலைக்குப் போக முடியவில்லை. என்னைப் போன்ற எழுத்தறிவில்லாத ஒரு பெரிய பிள்ளையை முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப் பாடசாலையால் முடியாதாம். ஆகையால் நான் இந்த இல்லத்தில் புத்தகங்களை வாசிக்கிறேன்; எழுதுகிறேன்

## பள்ளிக்கூடத்தைச் சித்திரவதைக் கூடமாகக் கருதிய சிரிகுமாரவின் கதை.

சிரிகுமார மோட்டார் வண்டிகளைப் பழுதுபார்க்கும் ஒரு கராஜில் வேலை செய்யும் 12 வயதுடைய ஒரு சிறுவன். காலையில் 7.00 மணிக்கு காரஜுக்கு வந்து சேரும் அவன் இரவு வரை தொடர்ந்து வேலை செய்கிறான். சில சமயம் நடுநிசி வரை வேலை செய்யும் சிரிகுமார கராஜிலேயே தூங்குவதும் உண்டு. அடுத்த நாள் மீண்டும் வேலையில் ஈடுபடுவான். கராஜ் சொந்தக் காரன் அவனுக்குச் சம்பளம் எதுவும் கொடுப்பதில்லை. "பையன் வேலை பழகுகிறான்." என அவன் கூறுகிறான். வேலையில் சேர்ந்து இப்போது 3 வருடங்கள் ஆகின்றன. சம்பளம் எதுவுமில்லை. எப்போதாவது மெக்கானிக் சந்தோஷமாக ஏதாவது பணத்தைக் கொடுப்பார். உணவு, உடை அவ்வளவுதான்" சிரிகுமார கூறுவதுண்டு. இப்போது நாம் சிறுவனுக்குச் செவிசாய்ப்போம்.

எனது பெயர் சிரா. அனைவரும் இந்தப் பெயரால்தான் என்னை அழைக்கிறார்கள். அமல் சிரிகுமார ஜயநெத்தி என்பது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உள்ள எனது பெயராகும். மெக்கானிக் அது மிக நீளமான பெயர் எனவும் ஆகையால் "சிரா" என்பது மிகவும் நல்லதெனவும் கூறுகிறார்;. எனது வயது 12. எனது தாயார் என்னை இந்த கராஜில் ஒப்படைக்கும்போது எனக்கு வயது 9. இங்கு வருமுன்பு நான் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்தேன். பாடசாலையில் 4ம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தேன். பாடசாலைக்குப் போகமுடியாதென நானாகத் தான் வீட்டில் நின்றேன். படிப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு விருப்பம். இருப்பினும் பாடசாலைக்குச் செல்வதில் எனக்கு விருப்பம் இல்லை. அந்தப் பாடசாலையின் பெரிய சேர் மிகப் பொல்லாதவர். ஆசிரியர்களிலும் சிலர் மிகப் பொல்லாதவர்கள். சிறியதொரு தவறுக்காகப் பிடிபட்டால் பெரிய சேரும் அடிப்பார். ஏனைய ஆசிரியர்களும் அடிப்பார்கள். ஏசுவார்கள். பெரிய சேர் பிரம்பால் அடிப்பார். ஏனைய ஆசிரியர்களும் அடிப்பார்கள், ஏசுவார்கள். பிரம்பால் அடிப்பார்கள். வாங்கின் மேல் ஏற்றுவார்கள். முழங்காலில் நிற்கச் செய்வார்கள். கருணையுள்ள ஆசிரியர்களும் இருந்தார்கள்தான். அவர்கள் எங்களைக் கருணையோடு கவனித்தார்கள். எங்கள் மீது அன்பு செலுத்தினார்கள். நாங்களும் அவர்களிடத்தில் அன்பாய் இருந்தோம். எனினும் அத்தகையோர் சொற்பப் பேர்தான் இருந்தார்கள்.

பெரிய சேரும் இரண்டாம் சேரும் மிகப் பொல்லாதவர்கள். அப்படியான ஆசிரியர்கள் இன்னுஞ் சிலர் இருந்தார்கள். ஏதேனும் ஒரு தவறு செய்து அகப்பட்டுக் கொண்டால் தாங்க முடியாத பிரம்படிதான். இப்போதும் எனக்குப் பாடசாலை என்றதும் சித்திரவதை செய்யும் ஓர் இடம் போலத்தான் ஞாபகத்தில் வரும். அந்தப் பாடசாலையில் மாணவர்கள் அதிகமாக இருந்தபோதும் ஆசிரியர்கள் குறைவாகவே இருந்தார்கள். சில ஆசிரியர்கள் அடிக்கடி லீவெடுப்பார்கள். இதனால் எங்கள் வகுப்புகளில் வேலை மிகவும் குறைவு. எனவே நாங்கள் சத்தம் போடுவோம். விளையாடுவோம். பாடசாலையில் ஒரு விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. எனவே எங்களுக்கு விளையாடுவதற்கு ஓர் இடம் இருக்கவில்லை. இதனால் ஒரு சிறிய ஓய்வு கிடைத்தவுடனேயே நாங்கள் வகுப்பிலேயே விளையாடுவோம். ஓடுவோம், துள்ளுவோம். கூக்குரலிடுவோம். அப்போது பெரிய சேருக்குச் சரியான ஆத்திரம் வரும். பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள முடியாததுதான் காரணம். அப்போது அவர் பிரம்பையும் எடுத்துக் கொண்டு பாடசாலையைச் சுற்றி வலம் வருவார். இனி என்ன? பிரப்பம் பழந்தான்.

"சிரிகுமார இங்கே வா, நீதான் குழப்படியை ஆரம்பிக்கிறவன். திருவாலிப் பயல்"

பிரம்படிகள் முதுகில் இரண்டு, கையில் இரண்டு, பாடசாலை விடும் வரை வெளியில் நின்ற நிலையில் நிற்க வேண்டும்.

அடுத்த வகுப்புப் பெண் பிள்ளைகளுக்கு ஒரே சிரிப்பு. "இன்றைக்கும் நீ அகப்பட்டுக் கொண்டாய்" என் பக்கமாகச் செல்லும் ஓர் ஆசிரியர் ஏளனமாகக் கூறுகிறார். சிலவேளைகளிலோ வேறு தவறுகளுக்காகவும் நான் அடிவாங்குவதுண்டு. பாடசாலைக்குத் தாமதித்து வந்தால் கையில் இரண்டு, முதுகில் இரண்டு.

கடையப்பம் செய்துதான் நாங்கள் சீவியம் நடத்தினோம். எனது சிறு வயதிலே என் தந்தையார் இறந்தபடியால் என் தாயார் அப்பம் இடியப்பம் செய்து கடைகளுக்கு விற்றுத்தான் நாங்கள் வாழ்க்கை நடத்தினோம். நான் அதிகாலையில் எழுந்து கடைகளுக்குக் கடையப்பம் கொண்டு போவேன். அப்படியான சில நாட்களில் பாடசாலைக்குத் தாமதித்துச் செல்வேன்.

"சிரிகுமார, கள்ளப் பயலே, நீ இன்றைக்கும் பிந்தினாய் என்ன?" பெரிய சேர் பிரம்பால் ஓங்கி விளாசுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்படியே வகுப்புக்குப் போனால் அங்கே சேர் தலையில் ஒரு குட்டுக் குட்டுவார்.

"கழுதை, எப்போதும் பிந்தித் தான் வருகிறாய்." சேர் ஆவேசமாகக் கூறுவார்.

ஏனைய பிள்ளைகள் சிரிப்பார்கள்.

சில வேளைகளில் புத்தகங்கள் இல்லாதபடியாலும் நான் அடி வாங்குவதுண்டு. அரசாங்கப் புத்தகங்கள் கிடைத்தாலும் எழுதத் தேவையான பயிற்சிப் புத்தகங்களை நாங்கள் கடையில் தான் வாங்குகிறோம். அம்மாவிடம் காசு இல்லாவிட்டால் பயிற்சி புத்தகங்கள் வாங்க முடியாமல் போகும். மேலும் பேனை, பென்சில்களும் வாங்குவது கஷ்டமாக இருக்கும். இருந்தாலும் இதையெல்லாம் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள மாட்டார்கள்.

"மடையா நேரத்துக்குப் பள்ளிக்கூடம் வரமுடியாவிட்டால் வீட்டில் நிற்க வேண்டியது தானே" ஆத்திரத்தில் சில ஆசிரியர்கள் இப்படி ஏசுவதுண்டு.

நான் கடைசியில் வீட்டில் நின்றேன். பின்பு அம்மா மெக்கானிக் ஜயசேனவிடம் கெஞ்சி என்னை இந்த கராஜில் சேர்த்துவிட்டார். பள்ளிக் கூடம் போவதென்றால் எனக்கு இப்போதும் விருப்பந்தான். இருந்தாலும் அந்தப் பழைய பள்ளிக்கூடத்துக்கு அல்ல".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 2

# பிள்ளைகள் தாம் இழந்த உரிமைகள்

பெற்றாரது அன்பையும் பாதுகாப்பையும் இழந்தமையினால் வீட்டில், பாடசாலையில் வேலைத் தலத்தில் மற்றும் பல்வேறு இடங்களில் வயது வந்தோரால் உளத் தாக்கங்களுக்கும் அநியாயங்களுக்கும் ஆளாதல், கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற குழந்தைகளுக்கு உரித்தான அடிப்படை உரிமைகளை இழத்தல். சுரண்டலுக்கு ஆளாதல் எனப் பலவாறாகத் தம் உரிமைகளை இழந்த பிள்ளைகள் சிலரது பரிதாபமான அனுபவங்களை கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.

இவ்வாறான நிகழ்வுகள் காரணமாக பிள்ளைகளின் உடல், உள, ஒழுக்கவியல், மதம் சார்ந்த மற்றும் சமூகஞ் சார்ந்த பூரணத்துவமான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டும் சுரண்டல், அநியாயங்கள் என்பன பிள்ளைகள் மீது இழைக்கப்படாது அவர்களைக் காக்கும் பொருட்டும் இலங்கை உட்பட ஏனைய உலக நாடுகள் இணைந்து ஓர் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன.

மேலும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். என்ற கோட்பாடு, அதாவது சமூகத்தின் வளங்கள் முதலாவதாகப் பிள்ளைகளது உடல், உள விருத்தியைக் காக்கும் பொருட்டே செலவிடப்பட வேண்டும் என்பது இலங்கை உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு விழுமியமாகும்.

எனினும் கடந்த அத்தியாயத்தில் இடம்பெற்ற சம்பவங்களை ஒத்த அல்லது அவற்றிலும் மோசமாக உரிமைகள் மறுக்கப்பட்டதன் காரணமாக இன்னலுக்கு ஆளான பிள்ளைகள் பற்றிய செய்திகள் பொதுவாக உலக நாடுகளிலும் இலங்கையிலும் அடிக்கடி கேட்கவும் காணவும் தக்கதாக இருக்கின்றன. அவ்வாறாகப் பிள்ளைகளது உரிமைகள் மீறப்படுவதன் காரணமாக இன்னலுக்கு ஆளான பிள்ளைகள் பற்றிய சில விபரங்கள் அடுத்து விபரிக்கப்படுகின்றன. இலங்;கையில் பிள்ளைகளது உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் நிழற்படுத்தப்பட்ட கூட்டுக்குள் விபரிக்கப்பட்டுள்ளன.

## வாழும் உரிமையை இழந்த பிள்ளைகள்

தினந்தோறும் பல நாடுகளிலும் நிகழும் சட்டவிரோதமான கருச்சிதைவுகளின் எண்ணிக்கை 100,000 ஐத் தாண்டுவதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் கூறுகிறது. அவ்வறிக்கைகளின்படி ஒவ்வொரு வாரத்திலும் கால் மில்லியன் சிசுக்கள் மரிக்கின்றார்கள். இன்னும் எத்தனையோ மில்லியன்கள் போஷாக்கின்மையோடும் தொடர்ந்து உபாதை தரும் நோய்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 1984ம் ஆண்டில் மரணித்த பிள்ளைகளின் எண்ணிக்கை ஒரு கோடி ஐம்பது இலட்சத்தைத் தாண்டுகிறது. இத் தொகை அமெரிக்க ஐக்கிய நாட்டின் 5 வயதுக்குக் குறைந்த மொத்தப் பிள்ளைகளின் தொகைக்குச் சமமாகும். இவ்வாறு ஒரு குழந்தை மரிக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒரு குழந்தை குருடாக, ஊமையாக வலது குறைவாக, உளப் பின்னடைவாக மாறும் நிலை உருவாகிறது.

பல்வேறு இம்சைகளைப் புரிந்து தம் குழந்தையைக் கொலை புரிந்த குற்றச் சாட்டின் பேரில் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்ட தம்பதிகளுக்குக் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதியவர்களால் சமீபத்தில்;தண்டனை விதிக்கப்பட்டது. இறந்த குழந்தையின் உடலில் 30 காயங்கள் வரை இருந்ததாகவும் நீதிமன்ற விசாரணையின்போது தெரியவந்தது. எமது நாட்டில் சில பெற்றார் தம் இரத்தத்தில் உதித்த பிள்ளைகள் தமக்குப் பெரும் தொல்லையாக அல்லதுஇடைஞ்சலாக இருக்கிறார்கள் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாக இச் சம்பவங்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கிறது. தமது சொந்தக் குழந்தைகளை நிராகரித்துக் கொன்றுவிட முடிவு செய்யும் பெற்றோர் சிலர் எம்மிடையே இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும். (தெசதிய: 1993 நவம்பர் 10-15)

## வழி தவறிய, வேதனைக்கு ஆளான பிள்ளைகள்

தம்மைக் கடந்து செல்வோரை ஈக்கள் கூட்டத்தைப் போன்று ஒருங்கு சேர்ந்து கையேந்தி யாசிக்கும் தெருவோரப் பிள்ளைகள் ஆயிரக் கணக்கில் உலகின் பல நகரங்களில் உள்ளனர். ஆனால் இதைப் பற்றி அலட்டிக் கொள்ளாதவர்கள் நம்மிடைய எண்ணற்றோர் உள்ளனர் என யுனெஸ்கோ கூறுகிறது. இப் பிள்ளைகள் காலணிகளைப் பழுதுபார்த்து அவற்றைப் பொலிஷ் செய்பவர்களாக அல்லது நாளிதழ்களை விற்பனை செய்பவர்களாகத்தான் வீதியை வந்தடைகிறார்கள். காந்தத்தினால் ஈர்க்கப்படுபவர்களைப் போன்று நடைபாதையை நாடிய இவர்கள் பின்னர் அவற்றைக் கைவிட்டுத் தம் இல்லங்களை நோக்கிச் செல்வதற்குப் பதிலாகத் தொடர்ந்தும் அங்கேயே தங்கியிருக்கிறார்கள். உண்மையில் அவர்களில் பெரும்பாலானோருக்குச் செல்வதற்கு இடமேயில்லை. அவர்கள் அனைவரும் உடைந்து நொறுங்கிய குடும்பங்களின் உறுப்பினர்கள் என்பது அவர்களது விசேட இயல்பாகக் காணப்பட்டது. அவர்களுள் ஒரு சாரார் விவாகமாகாத தாய்மாரது பிள்ளைகள். மறுசாரார் கொடூரமாக மனைவிமாரை இம்சிக்கும் தந்தைமாரைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அத்தகைய பிள்ளைகளுக்கு வீடு நரகமாகவே அமைகிறது. உணவின் பொருட்டு மிகச் சொற்ப பணமும் பாடசாலை உபகரணங்களை வாங்குவதற்கு அல்லது பஸ்கட்டணத்தைச் செலுத்துவதற்கு அதனிலும் குறைந்த பணமும் மட்டுமே உள்ளபடியால் எல்லையில்லா அல்லல்கள் நிறைந்த இடமே அவர்களது இல்லம்.

வீட்டுப் பணிகளையும் பிள்ளைகளது அலுவல்களையும் செய்துகொண்டு மிகுந்த களைப்புக்கு ஆளாகுந் தாய்மார் தம் குழந்தைகளைப் போஷிக்கக் கடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் ஈடுபட வேண்டி உள்ளது. எனவே பிள்ளைகள் வீதியை நாடிச் செல்லும் போது அதனைத் திராணியற்று நோக்குவதைத் தவிர வேறு எதனையும் அவர்களால் செய்யவியலாது. தந்தைமாரால் வீட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. என்றே கூற வேண்டும். மிகச் சொற்ப வேதனத்துக்காக மிகக் கடுமையாக உழைக்குந் தந்தைமார் அதனால் உண்டான ஆத்திரம் காரணமாக அவர்கள் வீட்டிலே செலுத்தும் ஆதிக்கம் மிகக் கொடூரமாகவே இருக்கும். கைவிடப்பட்ட பிள்ளைகள் பிறப்பிலேயே வறுமையைத் தாங்கிக் கொண்டுவந்த பிள்ளைகளே எனலாம். குழந்தைகளைக் கவனிக்க வழியில்லாத வறிய மக்கள் தமது குழந்தைகளை வீதிகளில் தங்க விடுகின்றனர். இது தொடர்பான கவலைக்குரிய விடயம் யாதெனில் அபிவிருத்தி யடைந்துவரும் மிக வறிய நாடுகளில் காணப்படும் ஏனைய பாரிய பிரச்சினைகள் காரணமாக அந்நாடுகளில் பிள்ளைகளைக் கவனிப்பதற்கான கால அவகாசமோ மார்க்கங்களோ காணப்படாமையேயாகும்.

வாழ்வின் முதலாவது வசந்தத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் திடீரென உலகத்தை விட்டுச் செல்வதற்கான காரணம் அவர்களால் ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள இயலாமையேயாகும். இலங்கையில் பிள்ளைகளது தற்கொலைகள் கணிசமான அளவில் இடம்பெறுவதாக வெளியாகும் அறிக்கைகள் கவனத்தில் கொள்ளத் தக்கனவல்ல என நிராகரித்துவிட முடியாது. 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளது தற்கொலைகளுக்குப் பெரும்பாலும் ஏதுவாக அமைவன உளவியற் காரணிகளேயெனப் பொலிஸ் தரவுகள் காட்டுகின்றன. வறுமை, தொழில்வாய்ப்பின்மை, பரீட்சையில் சித்தி பெறாமை என்பவற்றை விடப் பெற்றாரதும் ஆசிரியர்களினதும் எச்சரிக்கைகள் என்பனவும் பிள்ளைகளின் தற்கொலைகளுக்குக் காரணிகளாக இருப்பதைத் தெளிவுபடுத்து கின்றன.

(தெசதிய: 1990 ஜனவரி 15.)

## பிள்ளைகளுக்கு எதிராகப் போர் தொடுக்கின்றனர்.

கடந்த தசாப்பதத்தில் யுத்தங்கள் காரணமாக 1 1/2 மில்லியன் பிள்ளைகள் இறந்துள்ளார் கள் என ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் எடுத்துக் காட்டுகிறது. குண்டு வீச்சு, கண்ணி வெடி, துப்பாக்கிகள், சித்திரவதைகள் காரணமாகக் கை கால்களை இழத்தலாலும் மூளைக் கோளாறு ஏற்பட்டதனாலும் குருடு செவிடு ஆனமையாலும் 4 மில்லியன்களிலும் கூடுதலான பிள்ளைகள் வலது குறைந்தோராயினர். 5 மில்லியன் வரையிலான பிள்ளைகள் அனாதை முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் 12 மில்லியன் வரையிலான பிள்ளைகள் தங்க இடமின்றித் தவிக்கிறார்கள். உலகில் ஆங்காங்கே 40க்கும் மேற்பட்ட யுத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கு எதிராக நடைபெற்றுக் கொணடிருக்கும் இந்த யுத்தங்கள் 20ம் நூற்றாண்டின் விளைவுகளாகும். யுத்தத்தின் போது பெரிதும் துன்புறுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் பிள்ளைகளுமே ஆவர்.

இலங்கையில் 1983ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட மோதல்களினால் கூடுதலாகப் பாதிக்கப்படுவோர் பிள்ளைகளும் பெண்களும் ஆவர். சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அடைந்த சமூக பொருளியல் அடைவுகளில் பெரும்பாலானவை பின்னோக்கிச் செலுத்தப்பட ஏதுவாக உள்ளதோடு சில கிராமங்கள் முற்றாகவே வறுமைக்கு இரையாகி உள்ளதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் அறிக்கைகள் கூறுகின்றன. யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி, அம்;பாறை, மட்டக்களப்பு ஆகிய வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் 1991ன் மதிப்பீட்டின் படி சனத்தொகையில் 45.8% மானோர் யுத்தத்தினால் அனாதைகளாக உள்ளனர். 1988/89 வருடங்களில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்ட காலம் 6-9 மாதங்கள் வரையிலாகும். மோதல்கள் காரணமாகப் பாடசாலைக் கட்டிடங்களும் உபகரணங்களும் நாசமடைந்தன. ஆசிரியர்கள் ஓடிவிட்டனர். பிள்ளைகள் உயிர் தப்புவதற்காக அங்குமிங்குமாக ஓடிச் சென்றனர். சில பிள்ளைகள் கண்ணிவெடிகளில் மாட்டிக் கொண்டதோடு வேறு சில பிள்ளைகள் அனாதை முகாம்களில் அனாதைகளாகப் போய்ச் சேர்ந்துள்ளனர். அவர்களது கல்வி சீர்குலைந்தது. ஓர் அறிக்கையின்படி பயங்கரவாதம் காரணமாக மட்டும் அனாதையரான பிள்ளைகளின் எண்ணிக்கை 50,000 வரையாகும். மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நலன் காக்கும் நிலையங்களில் மட்டும் அனாதையரான (பெற்றாரை இழந்து அதன் காரணமாக இருப்பிடத்தையும் இழந்த) 5 வயதிலும் குறைந்த சிறாரது எண்ணிக்கை 4428 ஆகும். 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டோரது எண்ணிக்கை 5144 ஆகும். தாயை அல்லது தந்தையை அல்லது இருவரையும் மரணம் காரணமாக பறிகொடுத்து அனாதைகளாக அகதி முகாம்களில் புகலிடம் பெற்றுள்ள பிள்ளைகளின் தொகை எண்ணிலடங்காது. திருகோணமலை மாவட்டத்தில் 23 நிலையங்களில் மட்டும் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடையே உள்ள பிள்ளைகளில் 450 பேருடைய பெற்றோர் பயங்கரவாதிகளால் இறந்துள்ளனர்.

## உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகும் பிள்ளைகள்

இலங்கையில் மட்டுமன்றி உலகின் நாலா பக்கங்களிலும் பிள்ளைகளது உழைப்பைச் சுரண்டுதல் பற்றிய முறைப்பாடுகளைக் கேட்கலாம் என ஒரு சஞ்சிகை கூறுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் உழைப்பாளர் படையில் 8 வயது தொடக்கம் 18 வயது வரை 75 மில்லியன் பிள்ளைகள் உள்ளனர் என சர்வதேச தொழில் நிறுவனத்தின் அறிக்கை வாயிலாக அறிந்து கொள்ளலாம். வறுமை காரணமாகத் தம் பெற்றாருக்கு உதவும் நோக்கில் வாழ்க்கையின் வனப்பான நாட்களை அர்ப்பணித்த 10 வயதுக்குக் குறைந்த இலங்கைப் பிள்ளைகளின் எண்ணிக்கை 1973 இல் அண்ணளவாக 200,000 ஆகும். 1979ல் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய 5-14 வயதுக்குட்பட்ட சுமார் 50,000 பிள்ளைகள் தமது உழைப்பை விற்பதற்காகத் தூண்டப்பட்டனர் என அறிக்கையொன்றில் கூறப்படுகிறது. 1980ன் புள்ளி விபரப்படி 10-14 வயதிற்கிடைப்பட்ட தொழில் புரியும் பிள்ளைகளது மொத்த எண்ணிக்கை 75,746 ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் அனுசரணையோடு கலாநிதி ஏ. ஈ. வீரமுண்ட மேற்கொண்ட "பிள்ளைகளது உழைப்பை முறை கேடாகக் கையாளல் அல்லது சுரண்டல்" என்ற தலைப்பிலான ஆய்வு முக்கியமான பல விடயங்களை அறியத் தருகிறது. சமூகத்தில் அபிவிருத்தியைத் தீர்மானிக்கையில் பிள்ளைகள் முதலாவது இடத்துக்கு வர வேண்டியதேன் என்ற வினாவுக்கு அளிக்கப்படும் விடையை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளது உழைப்பைச் சுரண்டுவதற்குக் காரணமாக அமையும் முக்கியமான இரண்டு காரணிகள் புலனாவதாக அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. பிள்ளைகளை மிக எளிதாக எந்தவொரு விடயத்துக்காகவும் ஈடுபடுத்திக் கொள்ள இயலுமாகையால் வயது வந்தோர் தமது எந்தவொரு தேவையையும் அவர்களைக் கொண்டு செய்வித்துக் கொள்ள முடியும் என்பது முதலாவது விடயமாகும். வயது வந்தோர் ஒருவரைக் கொண்டு யாதேனும் ஒன்றைச் செய்வித்துக் கொள்ளும் போது செலுத்தப்படும் பணத்தை விட மிகக் குறைந்தளவு பணத்தைச் செலுத்தி ஒரு பிள்ளையைக் கொண்டு ஒரு வேலையைச் செய்வித்துக் கொள்ளலாம் என்பது அடுத்த விடயமாகும். வீரமுண்டவின் ஆய்வினால் தோற்றம் பெற்ற மூன்றாம் விடயம் மிகக் கவர்ச்சிகரமானது.

வயது வந்தோருக்கு வேலை வாய்ப்புகள் குறைவாக உள்ள அல்லது வேலை வாய்ப்புகள் அற்ற அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டில் பிள்ளைகள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியமாகிறது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகளில் 77% வீதமானோர் தம் பெற்றாரோடு வாழ்பவர்கள். இதன் வாயிலாக அத்தகைய பிள்ளைகளில் பெரும் பாலானோர் தம் குடும்ப வருமானத்துக்கு கணிசமான பங்களிப்பைச் செய்வதற்காக அத் தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதேயாகும். ஏனைய 23% மானோர் தமது பெற்றாரை, உறவினரை விட்டுப் பிரிந்து தனித்து வாழ்பவர்கள். அவர்களுள் பெரும்பாலானோர் அண்ணளவாக அரைப் பங்கினர் தலைநகருக்கு அண்மையில் உள்ள வீடுகளில் பணியாளர்களாக வேலையில் ஈடுபட்டுள்ளனர். பொதுவாக எடுத்து நோக்கும்போது பிள்ளைகளின் உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுக்கப்படு வதில்லை என்பது ஆய்வின்போது தெரிய வந்துள்ளது. 44% மான பிள்ளைகள் தம் உழைப்புக்கு ஈடாக உணவை மட்டுமே பெற்றுக் கொள்கிறார்கள். ஆய்வின்போது சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளில் மிக முக்கியமான விடயமாவது 8.5% மான பிள்ளைகள் தம் பெற்றாரின் தூண்டுதல் காரணமாகவே வேலை வாய்ப்புகளை நாடி வந்தமையாகும்;. அதாவது பெற்றார் இப்பிள்ளைகளை வேலை தேடிச் செல்ல ஊக்குவிக்கிறார்கள் என்பதாகும். இத்தகைய நிலைமைக்குக் காரணமாக அமைவது குடும்ப வருமானம் குறைவாக இருப்பதேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி தொடர்பாக பிள்ளைகளுக்குள்ள உரிமைகளை நிராகரிக்கின்றனர்.

உலகில் உள்ள பிள்ளைகள் ஆறு பேரில் ஐந்து பேர் அநேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதாவது வறிய நாடுகளில் பிறப்பவர்கள் எனலாம்;. பெரும்பாலான விஞ்ஞானிகள் கூறுவதன்படி மானிட விவேகத்தின் இயல்பு இன ரீதியிலான அல்லது பூகோள ரீதியிலான ஏதுக்களுக்கு அப்பாற்பட்டதென்பதை நாம் ஏற்போமாயின் மானிட வர்க்கத்தின் விவேகிகளின் ஆறில் ஐந்து பங்கினர் எதிர்காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தோன்றுவார்கள் என்பதையும் மறுக்க முடியாது. எதிர்காலத்தில் நியூட்டன்மார் அல்லது ஐன்ஸ்டைன்மார் ஆறுபேரில் ஐந்து பேர் உலகில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே உதிக்கவிருக்கிறார்கள் எனினும் ஒரு முதலாளித்துவ நாட்டில் பிறக்கும் நியூட்டன் அல்லது ஐன்ஸ்டைன் மரிக்காமல் இருக்கவும் உரிய கல்வியையும் பயிற்சியையும் பெற்றுத் தம் திறமைகளை வெளிக் காட்டவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. எனினும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அத்தகையோர் தம் திறமைகளை வெளிக்காட்ட எவ்வித வாய்ப்புகளும் இல்லையென்றே கூற வேண்டும். சில பிள்ளைகள் அகாலத்திலே மரணமடையலாம்;. அவ்வாறு அல்லாவிடின் ஆரம்பக் கட்டத்திலேயே போஷாக்கின்மையால் அல்லது நோயினால் விவேக வளர்ச்சி குன்றிவிடலாம்;. அவ்வாறு சம்பவிக்குமாயின் நல்லாசிரியர் களின் கீழ் கற்பதற்காகப் பாடசாலை செல்லும் வாய்ப்பினைப் பெறமாட்டார்கள். அவர்கள் வாழும் சுற்றாடலில் அவர்களது இயற்கையான திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளவே முடியாதவர் களாவார்கள்.

உழைப்பு வலு தொடர்பான 1985/86 சமூக பொருளியல் ஆய்வு அறிக்கைகளின்படி 5-9 வயதுகளுக்கிடையிலான பிள்ளைகளளில் 21% மான சிறுவர்களும் 22%மான சிறுமிகளும் ஒருபோதும் பாடசாலைக்குச் சமூகமளித்ததில்லை. சிறுவர் தொழிலாளர் எண்ணிக்கையில் துரித வளர்ச்சியேற்பட்டது. 10-14 வயதுகளுக்கிடைப்பட்ட பிள்ளைகளது பொருளியல் நடடிக்கைகளின் அளவு 1991ம் ஆண்டிலே சிறுமியரின் பங்கு 3.4% மாகவும் சிறுவரின் பங்கு 5.6% மாகவும் நிலையான ரீதியில் வீழ்ச்சியடைந்ததோடு 1985/86 ஆகிய வருடங்களில் 4.2% சிறுமியராலும் 6.8% சிறுவராலும் அதிகரிக்கப்பட்டது.

1984ல் கொழும்பு நகரிலே சேரிகள் பற்றிக் கல்வி அமைச்சு மேற்கொண்ட ஆய்வின்படி 8 வயதினையுடைய பிள்ளைகளில் 20% வீதமானோர் பாட சாலைக்குச் செல்லாதவர்கள். 22% வீதமானோர் பாடசாலையை விட்டு விலகியவர்கள். அனுராதபுரப் பிரதேசக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 9-14 வயதுகளுக்கிடைப்பட்ட பிள்ளைகளில் 20% வீதமானோர் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில்லை. கால நிலை மாற்றங் களுக்கேற்ப விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாகச் சிறிய பாடசாலைகளில் மாணவர் வரவு 50% -70% வரையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 3

# பிள்ளைகளின் உரிமைகளைக் காத்தலும் ஆசிரியர்களது பொறுப்புகளும்

அநேக நாடுகளில் நடைபெறுவதைப் போன்று இலங்கையிலும் பிள்ளைகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அச்சுறுத்தல்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பது கடந்த அத்தியாயங்களில் இடம்பெற்ற உதாரணங்கள் மூலம் தெளிவானது. விசேடமாக இலங்கை ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் தீர்வு காணப்படாது நிலவும் வறுமை, மோசமான வருமான ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சினைகளாலும் பல்வேறு உள்நாட்டுப் பிரச்சினைகளாலும் கூடுதலாகப் பாதிக்கப்படுவோர் பிள்ளைகளே என்பது அவ்வுதாரணங்கள் மூலம் தெளிவாகிறது.

ஒரு நாட்டுக்குச் சொந்தமான மிகப் பெறுமதியான வளம் அந் நாட்டின் பிள்ளைகளேயாவர். இக்கருத்தை நிறுவ மீண்டும் மீண்டும் விடயங்களைச் சமர்ப்பித்தல் அவசியமில்லை. பிள்ளைகள் என்போர் நிகழ்காலமாகும்; நாட்டின் எதிர்காலமாகும். என்ற தொடரால் வலியுறுத்தப்படுவதன்படி ஒரு நாட்டின் நிகழ்கால இயைவையும் எதிர்கால நிலைப்பாட்டையும் தீர்மானிக்கும் சக்தி பிள்ளைகளே என்பதில் எந்த ஐயமுமில்லை.

எனவே பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு ஏதுவாகும் எந்தவொரு முயற்சியாயினும் அது நாட்டின் நிலைப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் அர்த்தமுள்ள பங்களிப்பாக அமையும். நாட்டினது நிலைப்பாட்டின் மட்டில் அக்கறை கொண்ட ஒவ்வொரு பிரஜையும் அந்நாட்டினது பிள்ளைகள் தலைமுறையினரின் முன்னேற்றத்தில் பங்குதாரராதல் அவசியம். பிள்ளைகளில் உள ரீதியாக அல்லது உடல் ரீதியாக ஏற்படுத்தக்கூடிய அனைத்து இன்னல்களையும் ஒழித்துக் கட்டக் கூடியவாறு எல்லா வழிகளாலும் பிள்ளைகளின் நன்மை தொடர்பாக ஒருவர் தம் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றல் வேண்டும். மிகத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதாயின் ஒரு நாட்டின் நிலைப்பாட்டையும் அபிவிருத்தியையும் மனதார விரும்பும் அனைத்துப் பிரஜைகளும் பிள்ளைகளது உரிமைகளைக் காப்பதன் மட்டில் தம் கடமைகளையும் பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்றல் அவசியம். அத்துடன் பிறரைக் கொண்டும் அக் கடமைகளையும் பொறுப்புகளையும் உரியவாறு நிறைவேற்ற ஆவன செய்தல் வேண்டும்.

**பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்போர் யார்?**

பிள்ளைகளது உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான கடமைகளையும் பொறுப்பு களையும் கொண்டிருப்போர் யார் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

"பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மிகப் பிரதான பொறுப்பினை உடையோர் பிள்ளைகளது பெற்றார் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரே என்பதில் எத்தகைய ஐயமுமில்லை. அவர்கள் பிள்ளைகளது இயற்கையான பாதுகாவலர் களேயாவர். தார்மீக ரீதியாகவும் சட்டரீதியாகவும் பிள்ளைகள் மீது பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள அதிகாரம், சட்டத்தால் **'பெற்றாரது அதிகாரம்'** எனக் குறிப்பிடப்படுகிறது.

பெற்றாரது இவ்வதிகாரம் காரணமாகப் பிள்ளைகள் மீது அவர்களது பெற்றார் பல உரிமைகளைக் கொண்டுள்ளார்கள். பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஏதுவாகும் பல பொறுப்புகள் பெற்றாரிடம் சுமத்தப்படுகின்றன.

திருமண பந்தத்தினால் பிறக்கும் பிள்ளைகளின் அல்லது வேறு விதமாகக் கூறுவதாயின் திருமணம் காரணமாகப் பிள்ளைகளின் மட்டில் பெற்றார் சட்டப்படி பெற்றுக்கொள்ளும் உரிமைகள், திருமணத்தால் பெறப்படும் பிரதானமான பெறுபேறாகும். இது 'பெற்றார் அதிகாரம்' என அழைக்கப்படுகிறது. பிள்ளைகளது பாதுகாப்பு (Custody) தொடர்பாகப் பெற்றார் கொண்டுள்ள உரிமைகள் பெற்றாரது அதிகாரத்தின் மட்டில் மிகப் பிரதான மான ஓர் அம்சமாகக் கருதப்படுகிறது. ஒரு குழந்தையின் உடல் நலம், அன்றாட வாழ்வோடு தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் கல்வி ஆகிய விடயங்களைக் கட்டுப் படுத்துதல் பாதுகாப்பு எனப்படுகிறது. குழந்தைகளது பாதுகாப்பைப் போலவே ஆதனங் களைக் கட்டுப்படுத்துதல் விவாகத்துக்கு அனுமதி வழங்குதல் வயதுக்கு வராத பிள்ளைகளுக்காக பாதுகாவலரை நியமித்தல், எளிய தண்டனைகளை வழங்குதல், பிள்ளைகளுக்குப் பெயரிடல் மற்றும் அவர்களைப் பிரதிநித்துவம் செய்தல் போன்ற பல்வேறு விடயங்களைில் பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றாருக்கு சட்டத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வயதுக்கு வராத பிள்ளைகள் எனக் கருதப்படும் வயதினையுடைய பிள்ளைகளின் விவாகத்தின்மட்டில் பெற்றார் கொண்டுள்ள அதிகாரம் விவாக கட்டளைச் சட்டத்தில் திட்டவட்டமாகக் கூறப்படுகிறது. பிள்ளை களது சமயக் கல்வி தொடர்பான விடயங்களில் முடிவுகளை மேற்கொள்ளும் உரிமை தந்தைக்கே உள்ளதாக 1939ம் ஆண்டின் கல்வி கட்டளைச் சட்டம் விதித்திருக்கிறது.

இவ்வாறு பிள்ளைகள் மட்டில் பெற்றாருக்குள்ள உரிமைகள் காரணமாகவும் பிள்ளைகளது உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றன. மேலும் பிள்ளைகளின் உரிமைகள் மீது நேரடியாகத் தொடர்புபட்டதும்; சட்டபூர்வமாக பெற்றாரில் சுமத்தப்படுவதுமான ஒரு தொகுதிப் பொறுப்புகளும் உண்டு. பின்வருவன அத்தகைய சட்டபூர்வமான பொறுப்புகளைத் திட்டவட்டமாகக் காட்டும் சில சட்ட மூலாதாரங்களாகும்.

1. ஒரு குழந்தையின், பிறப்புக்கு முன்னர் அக்குழந்தை உயிரோடு பிறப்பதைத் தடுத்தால் அல்லது அக்குழந்தையின் பிறப்புக்குப் பின்னர் அக்குழந்தையைக் கொலை செய்யும் நோக்கில் ஒருவர் யாதேனும் ஒரு செயலைச் செய்வதால் அச் செயல் குழந்தை உயிரோடு பிறப்பதைத் தடுத்தால் அல்லது குழந்தையின் பிறப்புக்குப் பின்னர் அதனை மரணமடையச் செய்தால் அதன் காரணமாகக் குற்றவாளியாகும் ஒருவரை 10 வருடக் கடூழிச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது அவ்விரு தண்டனைகள் மூலம் தண்டிக்க முடியும் **எனக் குற்றவியற் சட்டக் கோவையின் 30ம் உறுப்புரை பிரமாணம் விதிக்கிறது.**

2. ஒருவர் 12 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையின் தந்தையாக அல்லது தாயாக அல்லது பாதுகாவலராக இருக்கும் பட்சத்தில் அப் பிள்ளளயை முழுமையாகக் கைவிட்டுச் செல்லும் நோக்குடன் யாதேனும் ஓர் இடத்தில் விட்டுச் விட்டுச் சென்றால் அல்லது அப்பால் சென்றால் அவருக்கு 7 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது அவ்விரு தண்டனைகளையும் அளிக்க முடியும் **எனக் குற்றவியற் சட்டக் கோவையின் 307 ம் உறுப்புரை விதிக்கிறது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தம் பிள்ளைகளைப் போஷிக்கத் தக்க சக்தியுள்ள ஒரு தந்தை, தம் பிள்ளைகளைப் போஷிப்பதற்குத் தான் கொண்டுள்ள பொறுப்பில் இருந்து நழுவிக் கொண்டால் அல்லது மறுப்புத் தெரிவித்தால் பிள்ளையைப் போஷிப்பதன் பொருட்டு மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தைச் செலுத்தும்படி ஆணை பிறப்பிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டென 1898 **ஜீவனாம்சக் கட்டளைச் சட்டத்தில்** விதிக் கப்பட்டுள்ளது. இக்கட்டளைச் சட்டத்தில் 1972 ல் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத் தத்தின்படி அத்தகைய தந்தையொருவர் பிள்ளையின் நிமித்தம் மாதந்தோறும் செலுத்த வேண்டிய பணத்தொகை பிள்ளையின் சமூக அந்தஸ்த்து மற்றும் பெற்றாரது வருமானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கும் அதிகாரத்தை நீதி மன்றம் கொண்டிருக்கிறது.

## பிள்ளைகளது உரிமைகளும் ஆசிரியர்களது பொறுப்புகளும்

பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் பிள்ளைகளது பெற்றோரும் சட்டபூர்வமான பாதுகாவலர்களும் சட்டரீதியாகப் பெற்றுக் கொண்டுள்ள சில உரிமைகளையும் பொறுப்புகளையும் முன்னர் விபரித்தோம்.

இவர்களைப் போலவே பிள்ளைகளைப் பொறுத்தவரையில் முக்கியமான மற்றுமொரு குழுவினர் உள்ளனர். அவர்கள் பிள்ளைகளது கல்வியோடு தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த குழுவினரேயாவர். அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் ஆகிய பல்வேறு நபர்களைக் கொண்ட இக் கூட்டத்தாரை அழைக்க இனிமேல் ஒரு பதத்தை மட்டுமே கையாளுவோம். அப் பதம் "ஆசிரியர்" என்பதாகும்.

பிள்ளைகளின் பெற்றாரை அடுத்ததாக முக்கியத்துவம் பெறும் தொகுதியினர் ஆசிரியர்களே ஆவார்கள். ஒரு பிள்ளையை உலகில் தோற்றுவித்து உடல் ரீதியாக அவனை வளர்த்து ஆளாக்கும் தாயை அல்லது தந்தையைப் போன்றே ஆசிரியர்களும் பிள்ளைகளை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் வளர்த்து ஆளாக்குபவர்களும் கண்காணிப்பவர்களுமாவார்கள். பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்கள் கொண்டுள்ள இம் மகத்துவமான பொறுப்பைக் குறிப்பிட (Loco - Parentis) என்ற லத்தீன் சொல் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் அதன் பொருள் 'பெற்றாரைப் போன்ற' என்பதேயாகும். இச் சொல்லால் வலியுறுத்தப்பட்டுவதன்படி பிள்ளைகள் மட்டில் 'பெற்றாரைப் போன்ற' ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் பல உண்டென்பதைச் சட்டம் ஏற்றுக் கொள்கிறது. இத்தகைய பொறுப்புகள் காரணமாகப் பிள்ளைகள் மட்டில் பெற்றாருக்குச் சமமான உரிமைகள் பல ஆசிரியர் வசம் உண்டென்பதையும் சட்டம் ஏற்றுக் கொள்கிறது. இப் பொறுப்புகளும் உரிமைகளும் தார்மீகம் சார்ந்த பொறுப்புகள், உரிமைகள் மட்டுமன்றிச் சட்டபூர்வமான பொறுப்புகளாகவும் உரிமைகளாகவும் விளங்குதல் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்கள் தாம் கொண்டுள்ள சட்டபூர்வமான பொறுப்புக ளினதும் உரிமைகளினதும் தன்மையைக் கற்றறிந்த நீதிபதிகள் இவ்வாறு விபரிக்கிறார்கள்.

1. **அவதானமான ஒரு தந்தை தம் பிள்ளையைக் கண்காணிக்கையில் செலுத்தும் கவனத்தைப் போலவே ஓர் ஆசிரியரும் தம் பாடசாலை மாணவர்கள் மட்டில் கவனஞ் செலுத்தி அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பினைத் தாங்குபவரேயாவர். ஒரு ஆசிரியரது கடமைகளைப் பகுப்பாய்வு செய்ய அதற்கு ஈடான வேறு வரைவிலக்கணம் இல்லையெனலாம். ஆசிரியர் இத்தகைய பொறுப்பினைக் கொண்டுள்ளவராக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதன் காரணமாகப் பாடசாலை, மாணவர்களது தனித்துவ இ,யல்புகள் பற்றி உன்னிப்பாக இருத்தலவசியம். மாணவர்கள் அடிக்கடி குறும்புகளில்; ஈடுபடுபவர்கள் தம் கையில் அகப்படும் எதன் மீதும் ஆராயும் மனப்பாங்கைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். நீதிபதி ஈசர் பிரபு இங்கிலாந்தில் நடைபெற்ற வில்லியம் எதிர் ஈட் (1983) என்னும் வழக்கில் அளித்த தீர்ப்பு.

2. ஒரு தலைமையாசிரியர் தமது பாடசாலை மாணவர்கள் மட்டில் தாம் கொண்டுள்ள சட்ட பூர்வமான அவதானிக்கும் பொறுப்பு ஒரு தந்தை தம் பிள்ளையில் செலுத்தும் நம்பிக்கையான கவனத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போதும் ஆலோசனை வழங்கும்போதும் இதனை ஒத்த பொறுப்பினை அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதையும் அவர்கள் கட்டாயமாக தம் நினைவில் கொள்ளல் வேண்டும். நீதிபதி பேப்ரி வென் பியுமன்ட், எதிர் சரே (1968) என்ற இங்கிலாந்தில் நடைபெற்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பு)

3. மிக அண்மைக் காலத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட பின்வரும் வழக்கிலே பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்கள் தாம் கொண்டுள்ள கடமைகள், பெற்றார் கொண்டுள்ள சில கடமைகளையும் தாண்டிச் செல்லத் தக்கதாக விளங்குகின்றன என நீதிமன்றம் பகர்ந்தது. அத்தகைய முக்கியமான சட்டபூர்வமான கடமைகளை நீதிபதி ஜொன்சன் இவ்வாறு விபரிக்கிறார்

"ஒரு பாடசாலையானது மாணவர்கள் மட்டில் கொண்டிருக்க வேண்டிய மேற்பார்வைப் பொறுப்பு , சிந்திக்கும் திறன் படைத்த பெற்றார் தம் பிள்ளைகள் மீது செலுத்தும் கவனத்தை விடவும் முக்கியமானது. அப்பொறுப்புகளோ பெற்றாரது பொறுப்புகளையும் தாண்டிச் செல்லத்தக்க முக்கியத்துவம் கொண்டவை. அதற்கான காரணமாவது சில விடயங்கள் பற்றிப் பெற்றார் தம்மில் கொண்டிராத அல்லது பெறவியலாத விசேட அறிவைப் பாடசாலை கொண்டிருப்பதேயாகும். அசாதாரணமாகத் தோன்றக் கூடிய பக்க விளைவுகளை அல்லது ஆபத்துக்களைப் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளத்தக்க வாய்ப்புகள் பெரும்பாலும் சாதாரணப் பெற்றாருக்குக் கிடைப்பதில்லை. (நீதிபதி குரும் ஜொன்சன் வான் ஒபெக் எதிர் பெம்பர்ட் பொதுநல தாபனம் (1989) என்ற இங்கிலாந்தில் நடைபெற்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பு)

**ஒரு பிள்ளையை 'மனிதனாக' உருவாக்குபவர் ஆசிரியரே.**

ஒரு பிள்ளை தொடர்பாகப் பெற்றார் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டபூர்வமான பொறுப்புகளை ஒத்த ஒரு தொகுதிப் பொறுப்புகளை ஆசிரியர்கள் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளது எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் தீர்மானத்தை மேற்கொள்ளும்போது ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் பெற்றாரது பொறுப்புகளையும் தாண்டிச் செல்லத் தக்கவாறு பலம் பொருந்தியவை என்பது வொட்சன் போன்ற கல்வியியலாளர்கள் குறிப்பிட்ட கருத்துகளின் வாயிலாகப் புலனாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நன்கு வளர்ச்சியடைந்த ஒரு டசின் சிறார்களை எனக்களித்து நான் கூறும் விதமான ஒரு சமூகத்தில் அவர்களை வளர்க்க எனக்கு வாய்ப்பினை வழங்கவும். அவர்களில் எவ்விதத் தெரிவும் செய்யாது எந்தவொரு பிள்ளையையும் எந்தவொரு துறையிலும் ஒரு நிபுணராக உருவாக்குவேன் என நான் வாக்குறுதியளிக்கிறேன். ஒரு வைத்தியராக, சட்டத்தரணியாக, கலைஞராக தலைசிறந்த வாணிகராக அல்லது தேவைப்படின் ஒரு பிச்சைக் காரனாக, திருடனாக வேனும் உருவாக்க என்னால் முடியும். இவ்விடயம் தொடர்பாக தேர்ந்தெடுகப்பட்ட பிள்ளைகளது பரம்பரைக்குரியன எனக் கருதப்படும் விசேட திறன்கள், ஈடுபாடுகள், தொழில்கள், சாதிகள் என்பன எதுவும் எனக்கொரு பொருட்டல்ல (வொட்சன் ஜே. பி. 1924)

வொட்சன் போன்ற கல்வியியலாளர்களது கூற்றுக்களால் ஒரு பிள்ளையின் மீது ஒரு ஆசிரியர் கொண்டுள்ள ஆதிக்கம் எத்தனை பலமானது என்பது தெளிவாகின்றது. ஒரு தாய் ஒரு பிள்ளையைப் பிரசவித்த பின்னர் பெற்றார் இணைந்து அதனை வளர்த்து ஆளாக்குகின்றனர். ஆனால் அப்பிள்ளையை முழுமையான ஒரு மனிதனாக உலகிலே ஒருவாக்குபவர்கள் ஆசிரியர்களேயாவர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது வேறு ஏதேனும் ஒரு வகையில் பிள்ளையின் நலனுக்கு உகந்த ஒரு பணியொழுங்கினை வெற்றிகரமாக்கிக் கொள்ள ஆசிரியர்களது வழிகாட்டல் இன்றியமையாது. அவர்களது ஆக்கபூர்வமான பங்களிப்பு அவசியமேயாகும்.

அடுத்து ஒரு கோடி எழுபது இலட்சம் வரையான இலங்கைச் சனத் தொகையில் 6 மில்லியன் வரையானோர் பிள்ளைகள் எனக் குறிப்பிடப்படுகிறது. அப் பிள்ளைகளில் பெரும்பான்மையோர் பாடசாலை மாணவர்களேயாவர். புள்ளிவிபரப்படி குறிப்பிடுவதாயின் 1992ல் சுமார் 42, 89,334 பிள்ளைகள் பாடசாலைகளில் கற்றுக் கொண்டிருந்தார்கள்.

பாலர் பாடசாலைகள் எனப்படும் நிறுவனங்களில் உள்ள மாணவர்களின் தொகையும் அதிகளவே ஆகும். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் பிள்ளைகளது தொகை நான்கில் ஒரு பங்கிலும் கூடுதலாக உள்ளது இப்பிள்ளைகளது நலன் தொடர்பாக எடுக்கப்படும் எந்த நடவடிக்கையாக இருப்பினும் மிக முக்கியமாக விளங்கும் குழுவினர் அப்பிள்ளைகளது ஆசிரியர்களேயாவர். சட்டத்தின் வரைவிலக்கணப்படி அவ் வாசிரியர்கள் அம் மாணவர்களது பெற்றாரைப் போன்றவர்களேயாவர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையால் பிள்ளைகளது நலனுக்குக் காரணமாக அமையும் ஒரு பணியொழுங்கினை வெற்றிகரமாக்கிக் கொள்ளல் தொடர்பாக ஆசிரியர்களது வழிகாட்டல் அவசியமேயாகும். அவ்வாறே அவர்களது ஆக்கபூர்வமான பங்களிப்பு இது தொடர்பாக வேண்டப்படுகிறது.

எனவே இந்த நூலிலே அடுத்து வரவிருக்கும் அத்தியாயங்களில் விபரிக்கப்படும்;. இலங்கைப் பிள்ளைகளது உரிமைகளோடு தொடர்புபட்ட சட்டம் பற்றிய பகுப்பாய்வு, பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் கடப்பாடு கொண்ட ஆசிரியர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 4

# பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள்

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் அனைத்துலக ரீதியாகவும் உள்நாட்டிலும் எடுக்கப்படும் போது அம்முயற்சிகளை வெற்றிகரமாக்கிக் கொள்ள சட்ட ரீதியான ஒரு வலுவான அடித்தளத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் அவசியமாகும். பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் போன்ற சர்வதேச உடன்படிக்கைகளைப் போலவே உள்நாட்டில் விதிக்கப்படும் பல்வேறு சட்டங்களை அமுலாக்கும் நிறுவனங்கள் வாயிலாக இவ்வாறான சட்ட பூர்வமான அடித்தளம் தாபிக்கப்படுகிறது. இவ்வாய்வுப் பொருளின் கீழ் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தமும் அதை ஒட்டிய இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான பிரதான சட்ட மூலங்கள்

1989 நவம்பர் மாதம் 20ந் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் (Convention on the Rights of the Child) உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய முக்கியமான சட்ட மூலாதாரமாகும். இவ் வொப்பந்தம் அங்கீகரிக்கப்படும் முன்னர் பிள்ளைகளது உரிமைகளோடு தொடர்புபட்ட உலகளாவிய இரண்டு பிரகடனங்கள் 1924ல் நாடுகளின் சங்கத்தாலும் 1948ல் ஐக்கிய நாடுகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்டபோதும் அவை பிரகடனங்களேயன்றி (Declarations) ஒப்பந்தங்கள் (Conventions) அல்ல.

பிரகடனம் என்பது ஒரு விடயம் தொடர்புடைய ஒரு பொதுவான கொள்கையை வெளியிடுவதாகும். அதில் வெளியிடப்படும் பொதுவான கொள்கைகளோடு ஓர் அரசாங்கம் இணங்கினாலும் அக் கொள்கைகளை அமுலாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே பிரகடனம் என்பது ஒரு நெகிழ்ச்சியுள்ள மூலாதாரமேயாகும். முன்னர் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளின் உரிமை தொடர்பான பிரகடனங்களின் மட்டில் இணக்கம் தெரிவிக்கும் நாடுகள் அக் கொள்கைகளை அமுலாக்கும் நிரந்தரமான அடித்தளங்களைக் கொண்டிருக்கவில்லை.

எனினும் 1989 நவம்பர் மாதம் 20ந் திகதி ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய பிள்ளைகளது 'உரிமைகள் பற்றிய ஒப்பந்தம்' மிக ஆணித்தரமான ஒரு சட்ட மூலாதாரமாகும். பத்து வருடங்களாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டு அதன் பின்னர் 20 நாடுகள் உறுதிப்படுத்திய இச் சட்ட மூலாதாரம் 1990 செப்டம்பர் மாதம் 02ந் திகதி அமுலுக்கு வந்தது. 1993 மே மாதம் 18ந் திகதி வரை இவ்வொப்பந்தத்தில் 159 நாடுகள் கைச்சாத்து இட்டன. 1991 ஜூலை மாதம் 12ந் திகதி இலங்கையும் இவ் ஒப்பந்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காளியானது இவ்வாறு ஓர் அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை ஏற்பதன் காரணமாக அவ்வொப்பந்தம் அந்நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டங்களின் மூலங்களில் ஒன்றாக மாறுகிறது. இதன்படி தற்கால இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான முக்கியமான சட்ட மூலாதாரமாக விளங்குவது இந்த ஒப்பந்தமேயாகும். தற்போது இவ்வொப்பந்தத்தில் இடம் பெற்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் சமூக சேவை அமைச்சும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களமும் இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை (Children's Charter) வெளியிட்டுள்ளன.

## ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அம்சங்களுள் சட்ட அந்தஸ்துள்ள அம்சங்களுக்கு சட்ட அந்தஸ்தினைப் பெறும் விதம்.

ஒரு நாடு இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பின்பு அதில் அடங்கியுள்ள அம்சங்கள் அந்த நாட்டில் சட்டமாக அமுலுக்கு வரும். இச் சட்டங்களைச் செயற்படுத்த அந்த நாடு நடைமுறைப்படுத்தும் செயன்முறைகளை 10 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான தேசியக் கமிட்டியிடம் அறிக்கைப் படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அறிக்கையை கண்காணிக்கும் முகமாக அதன் தேசிய கமிட்டி குறிப்பிட்ட அந்த நாடுகளின் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பிரயாணங்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் வாயிலாகப் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆவன செய்யும்.

## ஒப்பந்தம் மூலம் உறுதிப்படுத்தப்படும் பிள்ளைகள் தொடர்பான உரிமைகள்.

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான இவ்வொப்பந்தம் முக்கியமான 4 விடயங் களோடு தொடர்புபட்ட பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்க உத்தேசிக்கிறது.

### வாழும் உரிமை - Survival Rights

ஒப்பந்தத்தின் வாயிலாக எதிர்பார்க்கப்படும் முதன்மையானதும் ஆணித்தரமானதுமான பிள்ளையின் உரிமையாக அமைவது உயிர்வாழ்வதற்காக அவர்கள் கொண்டுள்ள சட்டபூர்வமான உரிமையேயாகும். ஓர் அரசாங்கம் இயன்றவரை ஒரு பிள்ளையின் வாழ்வையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். (சுகாதார வசதிகள், சேவைகள், உணவு, சுத்தமான நீரும் வதிவிடமும் உட்படப் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உரித்தாக்கிக் கொள்ளும் உரிமை)

### அபிவிருத்தி உரிமை - Development Rights

தம் சொந்த முழுமையான திறன்களின்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் வாய்ப்பினை வழங்குதல், கல்வியைப் பெறல், ஓய்விலும், பொழுது போக்கிலும் கலாச்சார விவகாரங்களிலும் ஈடுபடுவதற்கான உரிமையை வழங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு உரிமை - **Protection Rights**

இவ்வுரிமை உடல் அல்லது உள ரீதியாக பாதிப்புற்ற குழந்தைகள், அனாதைக் குழந்தைகள், பெற்றாரைப் பிரிந்த பிள்ளைகள், வேலைக்காரப் பிள்ளைகள், பாலியல் ரீதியான இம்சைகளுக்கு ஆளான பிள்ளைகளைப் பாதுகாத்தல் ஆகும்.

## பங்கேற்பு உரிமை - **Participation Rights**

கருத்துக்களை வெளியிடல், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சிந்தித்தல், மனச்சாட்சியின்படி நடத்தல், மத நம்பிக்கைகளைக் கொண்டிருத்தல். சமூகத்தில் செயற்பாடான பொறுப்புகளை வகித்தல் போன்றவை தொடர்பாகப் பிள்ளைகளுக்குரிய உரிமைகள் இதன்மூலம் கருதப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட 4 விடயங்கள் தொடர்பாக பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு இந்த ஒப்பந்தத்தில் 54 பிரமாணங்கள் அடங்கியுள்ளன.

## இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்

1991 ஜூலை மாதம் 12ந் திகதி பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை, அதில் இடம்பெற்றுள்ள பிள்ளைகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நடவடிக்கையாக இலங்கையிலே பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பிரகடனத்தை வெளியிட்டது.

இப் பிள்ளைகளின் உரிமை பற்றிய ஒப்பந்தமானது 40 பிரமாணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

## இலங்கையில் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான உறுதிமொழிகளை நடை முறைப்படுத்துதல்

பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் என்பது, கொள்கைப் பிரகடனம் அல்ல எனவும் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய பணியொழுங்கோடு தொடர்புபட்ட சட்டபூர்வமான ஓர் உடன்படிக்கை எனவும் முன்னர் குறிப்பிடப்பட்டது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகள் வாக்குறுதி அளித்ததன்படி பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கின்றனவா என்பதை மீளாய்வு செய்வதன் பொருட்டுப் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான தேசியக் கமிட்டி செயலாற்றும் விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்தத்திலே கைச்சாத்திட்ட 2 வருடங்களின் பின்னர் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றிய ஒரு மீளாய்வினைச் செய்வதன் பொருட்டுப் பிள்ளைகளின் உரிமை கள் தொடர்பான தேசியக் கமிட்டி செயலாற்ற வேண்டிய விதம் குறிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 2 வருடங்களின் பின்னர் இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்ட விடயங்கள் பற்றிய ஒரு மீளாய்வு அறிக்கை அக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு அதனை அடுத்து ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு தடவையும் அத்தகைய ஒரு மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுறுதி மொழி தொடர்பான அனுமதி வழங்கப்பட முன்னரும் இலங்கை பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம், பிள்ளைகள் பற்றிய நீதிமன்றம் ஆகிய நிறுவனங்களைத் தாபித்துப் பிள்ளைகளின் நலனுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக செயலாற்றிய ஒரு நாடு என கூறலாம். பிள்ளைகளின் நலனுக்குக் காரணமாக அமையத்தக்க விதத்தில் அவர்களது கல்வி, சுகாதாரம் மற்றும் நலன் காக்கும் விடயங்களில் இலங்கை நடைமுறைப்படுத்திய திட்டங்கள் பலவாகும். இத்தகைய திட்டங்கள் காரணமாகச் சிசுக்களினதும் பிள்ளைகளிதும் மரண விகிதாசாரம் குறைதல், ஆயுட் காலம் அதிகரித்தல் கல்வியில் பங்கேற்பு அதிகரித்தல், எழுத்தறிவு அதிகரித்தல் என்பன நிகழ்ந்தன. அபிவிருத்தியடைந்துவரும் பெரும்பாலான நாடுகளில் உள்ள பிள்ளைகளின் பௌதீக வாழ்க்கை விருத்தியை எய்த இலங்கையால் முடிந்தது.

அரசாங்கம் ஒப்பந்தத்தை அங்கீகரித்த பின்பு பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான உறுதி மொழியைப் பிரகடனப்படுத்தியது. இதனடிப்படையில் பிள்ளைகளது விடயங்கள் தொடர்பாக ஒரு நிறுவனத்தை நிறுவுதல், தொழில் அமைச்சிலும் பொலிஸ் பகுதியிலும் பிள்ளைகளின் விடயங்கள் தொடர்பாக விசேட கூறுகளை நிறுவுதல் போன்ற திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இவ்வாறாகப் பிள்ளைகளின் உரிமைகளைக் காப்பதற்காக இதுவரை அமுல் படுத்தியுள்ள பணியொழுங்குகள் வாயிலாகப் பிள்ளைகளின் உரிமைகளைப் பாது காப்பதில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பினும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப் பதற்காக மேலும் பல விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் வாயிலாகக் கி. பி. 2000ம் ஆண்டளவில் எதிர்பார்க்கும் குறிக்கோள்களை எய்த இலங்கை தன் பிள்ளைகளில் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஆற்ற வேண்டிய விடயங்கள் மேலும் பல எஞ்சியிருக்கின்றன. இதனை ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் இலங்கையில் பெண்கள் மற்றும் பிள்ளைகள் பற்றிய நிலைமையை விபரிக்கும் ஓர் இலங்கை அறிக்கை வலியுறுத்துகிறது.

எனவே பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பூர்த்தியடையாத இப்பணியை நிறைவேற்றுவதற்காக மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அம்சங்கள் எவையென உசாவுதல் வேண்டும். அத்தகைய அம்சங்களை விருத்திசெய்ய அவசியமாகும் விடயங்களைத் தாமதமின்றி நிறைவேற்றல் வேண்டும்.

எனவே எதிர்வரும் அத்தியாயங்களில் இலங்கைப் பிள்ளைகளின் உரிமைகளைக் காப்பதற்காக மிகப் பலம் பொருந்தியதும் பல்வேறு பணிகளை நிறைவேற்ற ஆற்றல் மிக்கதுமான ஓர் அமைப்பின் மீது எமது கவனத்தைச் செலுத்துவோம். இலங்கைப் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டமே அத்தகைய அமைப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 5

# பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான இலங்கைச் சட்டங்கள்

பிள்ளைகள் தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்கும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட இரு ஒப்பந்தங்கள் பற்றி முன்னைய ஆய்வுப் பொருளில் விளக்கப்பட்டது. இலங்கைப் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரசின் கொள்கைகளை கொள்கைப் பிரகடனமாக அவ் வொப்பந்தத்தைக் குறிப்பிடலாம். பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான சட்ட வியாக்கியானத்தை உள்ளடக்கிய சட்டபூர்வமாக வெளியிடும் ஒரு மூலாதாரமாகவும் அவ் வொப்பந்தம் முக்கியத்துவம் பெறுகிறது. அரசியல் யாப்பு மற்றும் குற்றவியல் தண்டனைக் கோவை போன்ற சட்டவாக்கங்களால் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் மிக ஆணித்தரமாக விபரிக்கப்பட்டுள்ளன மீண்டும் அவ்வாறு ஆணித்தரமான சட்டங்களைத் ஏற்படுத்திக் கொள்வதன் பொருட்டு மூலாதாரமாகக் கொள்ளத் தக்க சாசனமாக இவ் வொப்பந்தம் பயன்படும்.

மேலும் பிள்ளைகளது உரிமைகள் என்பன வெறுமனே அனுதாபத்தை அல்லது தார்மீகத்தை அடிப்படையாகக் கொண்டவை மட்டுமல்ல; பிள்ளைகளின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கமும் பெற்றாரும் ஆசிரியர்களும் வேறு வயது வந்தோரும் நிறைவேற்றக் கடமைப்படுள்ள சட்டரீதியான பொறுப்புகள் உண்டென்பதை இவ்வொப்பந்தம் நிறுவுகிறது.

எனினும் இத்தகைய ஒப்பந்தங்கள் இருப்பதனால் மட்டும் பிள்ளைகள் தொடர்பான உரிமைகள் பாதுகாக்கப்படா என்பது தெளிவான விடயமேயாகும். இவ்வொப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னரும் பின்னரும் பிள்ளைகள் தொடர்பான உரிமை மீறல்கள் எண்ணிலடங்காதவாறு நடைபெற்றுள்ளன. கடந்த அத்தியாயங்களில் அவ்வாறான உரிமை மீறல்கள் பற்றிய சம்பவங்களுக்கான உதாரணங்கள் சில இடம் பெற்றன.

பிள்ளைகள் தாம் வாழும் உரிமையை இழத்தல், வாழும் வாய்ப்பினைப் பெற்றிருப்பினும் கொடூரமான சித்திரவதைகள், பாலியல், இம்சைகள், உழைப்புச் சுரண்டப்படல், பிள்ளைப் பராயத்தில் பெறவேண்டிய ஊட்டம், பாதுகாப்பு, கல்வி போன்ற அடிப்படை மானிட உரிமைகளை இழத்தல் என்றவாறாகப் பிள்ளைகளது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் ஏராளம்.

இத்தகைய சம்பவங்கள் நடைபெற ஏதுவாக அமையும் விடயங்கள் பலவாகும். எனவே பிள்ளைகளின் உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்த்துப் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளத் தக்கவையென எதிர்பார்க்கக்கூடிய நடவடிக்கைகள் பல்வேறு வகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் உரிமைகளும் சட்டங்களும்

இந்நூலின் வாயிலாக நாம் இத்தகைய ஒரு செயன்முறையீன் மூலம் மட்டும் ஆய்வினை மேற்கொள்வோம். அதாவது பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இலங்கையில் அமுலில் உள்ள சட்டங்களால் பெறத்தக்க நன்மை எதுவென ஓர் ஆய்வினை மேற்கொள்ளுவோம். இதன் பொருட்டுப் பிள்ளைகளின் உரிமைகளோடு தொடர்புபட்ட நிகழ்காலச் சட்டங்களை ஆய்வுக்கு உட்படுத்துதலும் அதில் அடங்கிய சட்டமுறை பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு காரணி என்ற வகையிலும் மேலும் எவ்விதம் வலுவாக அதனைப் பயன்படுத்திக் கொள்ள இயலுமெனவும் ஆய்வுசெய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 'பிள்ளை' - சட்ட ரீதியான வரைவிலக்கணம்

பிள்ளைகளது உரிமைகளைப் பற்றிய சட்ட வகைகளை விபரமாக ஆராய முன்னர் சட்டம், பிள்ளை என எவரைக் கருத்தில் கொள்கிறது? பிள்ளையின் உரிமைகளின் மட்டில் சட்டத்தின் பங்களிப்பு என்ன? என்பனவற்றை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

பிள்ளகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் அடிப்படையில் 'பிள்ளை' என்பது 18 வயதுக்குக் குறைந்த அனைத்து மனிதரையும் குறிக்கும்.

இவ்வொப்பந்தப்படி 18 வயதுக்குக் குறைந்த ஒருவர் பிள்ளையெனும் வரை விலக் கணத்துக்குள் அடங்குகிறார். பிள்ளைகளது உரிமைகள் பற்றிய இலங்கையின் சட்டப் பகுப்புகளில் குழந்தை, பிள்ளை, வாலிபன், பாலப் பருவத்தினன் போன்ற பல் வேறு பதங்களால் 'பிள்ளை' எனக் குறிப்பிடப்படும் பாலப் பருவத்தினர் அழைக்கப்படு கின்றனர்.

1865ம் ஆண்டு இலக்கம் 7 கொண்ட வயது முதிர்ச்சி பற்றிய கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவின்படி 21 வயது பூர்த்தியான ஒருவர் பாலப் பருவத்தைத் தாண்டிய முதிர்ச்சி எய்திய வயது வந்த ஒருவராகக் கருதப்படுகிறார். அரசியல் யாப்பின் 89 (ஆ) பிரிவின்படி 18 வயது பூர்த்தியடையாத ஒருவர் ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல் களின் போதும் ஒரு வேட்பாளராகும் அல்லது ஒரு வாக்காளராகும் தகுதியற்றவர். வயது முதிர்ச்சி தொடர்பான கட்டளைச் சட்டத்தில் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி வயது முதிர்ச்சி 18 வயது வரை குறைக்கப்பட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டு இலக்கம் 2 கொண்ட பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம், 1986ம் ஆண்டு இலக்கம் 48 கொண்ட பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் தொடர்பான (தீங்கினை விளைவிக்கும் வெளியீடுகள்), கட்டளைச் சட்டம் 1978ம் ஆண்டு இலக்கம் 12 கொண்ட வர்த்தக நிலைய மற்றும் அலுவலகப் பணியாளர் பற்றிய சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் 'பிள்ளை' என்பது 14 வயதிற் குறைந்த ஒருவரையும் 'வாலிபர்' என்பது 14 வயது பூர்த்தியடைந்த 16 வயதிலும் குறைந்த ஒரு நபரெனவும் வியாக்கியானஞ் செய்கின்றன.

கல்வி தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் வாயிலாகவும் பிள்ளையின் வயதினை வியாக்கியானஞ் செய்யும் சந்தர்ப்பங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக 1939ம் ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டத்தின் படி 'ஒரு குழந்தை' என்பது 5 வயதைத் தாண்டாத பாலப் பருவத்தவரையே குறிப்பிடும் ஒரு பிள்ளை என்பவர் 5 வயதுக்குக் குறையாத 14 வயதுக்கு மேற்படாத வயதுக்கு வராத ஒருவராவர்.

## பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பாக வழக்கில் உள்ள சட்டம் என்பது யாது?

பிள்ளைகளில் உரிமைகள் தொடர்பான வழக்கில் உள்ள சட்டம் என்பதனால் கருதப்படுவது யாது? இதனை நிச்சயப்படுத்திக் கொள்ள தற்கால அரசியல் யாப்பானது இலங்கையில் அமுலில் உள்ள 'சட்டம்' பற்றிக் கூறியுள்ள பின்வரும் வியாக்கியானம் பயன்தரும்.

1. சட்டம் என்பதனால் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டம், அரசியல் யாப்பு அமுலாகுமுன்னர் எச்சந்தர்ப்பதிலாயினும் யாதேனும் ஒரு நிறைவேற்றுத் துறையால் விதிக்கப்பட்ட ஒரு கட்டளை ஆகியவை கருதப்படுகின்றது. அரசாங்க சபை ஆணையும் அதில் அடங்கும்.

   **(இலங்கை அரசியல் யாப்பின் 170ம் உறுப்புரை)**

2. 'அமுலில் உள்ள சட்டம்' மற்றும் 'அமுலில் உள்ள வரையப்பட்ட சட்டம்' என்ற அடிப்படையில் முறையே அரசியல் யாப்பு அமுலாதல் ஆரம்பமாகும் வரை நடைமுறையில் இருந்ததும் அரசியல் யாப்பின் கீழ் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தபடத் தக்கதுமான யாதேனும் ஒரு சட்டம் மற்றும் வரையப்பட்ட சட்டம் இதனால் கருதப்படுகிறது.

3. வரையப்பட்ட சட்டம் என்பது யாதேனும் ஒரு சட்டம் மற்றும் உப சட்டம் என்ற கருத்தைத் தருகிறது. எந்தவொரு சட்டத்தின் கீழும் கட்டளை, பிரகடனம், விதி, யாப்புத் திருத்தம் மற்றும் ஆணை என்பவற்றை இயற்ற அல்லது பிறப்பிக்க அல்லது அதிகாரம் செலுத்துவதன் மட்டில் யாதேனும் ஒரு சபை அல்லது ஒரு நபரால் ஆக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட ஒரு விதி, பிரகடனம், யாப்புத் திருத்தம், ஆணை என்பன அதில் அடங்கும்.

   **(இலங்கை அரசியல் யாப்பு 170ம் உறுப்புரை)**

## பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக சட்டத் தின் பொறுப்பு

அமுலில் உள்ள சட்டமுறையின் பங்களிப்பு எதுவென்பதைப் பல்வேறு அணுகு முறைகளின் மூலம் விபரிக்கவியலும். பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டம் தொடர்பான இந்நூலின் பகுப்பாய்வின்படி அமுலிலே உள்ள சட்டத்தின் அடிப்படைப் பணியாவது இந் நாட்டில் வாழும் நபர்களுக்கும் குழுக்களுக்கும் இடையே மற்றும் நபர்கள் அல்லது குழுக்கள் என்பவற்றுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே உள்ள தொடர்பைக் கட்டி யெழுப்பவும் தொடர்புகளைச் சிறப்பாக பேணவும் ஆவன செய்தலே என வியாக்கியா னஞ் செய்தல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 6

# பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரசியல் யாப்புச் சட்டத்தின் அம்சங்கள்

வரையப்பட்ட அரசியல் யாப்பு நிலவும் நாடாகிய இலங்கையில் அடிப்படைச் சட்டமாக விளங்குவது அரசியல் யாப்புச் சட்டமாகும். பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான சட்டங்களைப் பற்றிய பகுப்பாய்வின் போது அரசியல் யாப்பில் அடங்கியுள்ள பிள்ளைகளது உரிமைகள் பற்றிய அம்சங்களை இனங் காணல் அவசியமானதாகும்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ளது. 1978ம் ஆண்டின் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியல் யாப்பேயாகும். இவ்வரசியல் யாப்பு இலங்கையின் அடிப்படைச் சட்டமாகவும் நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகவும் விளங்குகிறது.

## பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான அரசின் கொள்கை.

24 அத்தியாயங்களையும் 172 உறுப்புகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பானது, நாட்டின் ஆட்சியின் மட்டிலான அடிப்படைச் சட்டத்தை விளக்குகிறது. இந்த யாப்பின் 6ம் அத்தியாயம் அரசுக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காக 14 கோட்பாடுகளைத் தன்னகத்திலே கொண்டுள்ளது. ஜனாதிபதியும் பாராளுமன்றம், மற்றும் அமைச்சரவை ஆகியவையும் சட்டங்களை இயற்றும் போதும் அமுலாக்கும்போதும் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரசின் கொள்கைகளை கவனத்தில் கொள்வதாக அரசியல் யாப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வித அரசுக் கொள்கை பற்றிய கோட்பாடுகள் 14ல் 27 (13வது விதியில் விபரிக்கப்படும் அரசின் கொள்கை பற்றிய கோட்பாடு, பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான அரசுக் கொள்கைகளை வெளியிடுகிறது.

அவ்விதி பின்வருமாறாகும்!

**பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள், உடல், உள, தார்மீக மத, சமூக, ரீதியில் பூரணத்துவமான விருத்தியை அடையும் பொருட்டு ஆவன செய்யவும், பிறரது நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளல், பாரப்ட்சம் காட்டுதல் போன்றவற்றில் இருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இயலத் தக்கவாறு அவர்களது நலனோம்புவதில் அரசு விசேடமுயற்சி எடுக்க வேண்டும்.**

**அரசியலமைப்பு 27 (13)ம் உறுப்புரை.**

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரசுக் கொள்கையை நேரடியாக விபரிக்கும் கொள்கை பற்றிய கோட்பாடுகளை விடவும் பலவும் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாக்க ஏதுவாகும். வேறு அவரசியலமைப்பு கோட்பாடுகள் பலவும் இவ்வத் தியாயத்திலே இடம் பெறுகின்றன. அவற்றுள் சில வருமாறு:

"அறியாமையை முற்றாக ஒழித்துக் கட்டல், அனைவரும் கல்வியின் அனைத்து வாய்ப்புகளையும் நியாயமாகவும் சமத்துவமாகவும் பெற்றுக் கொள்ளும் உரிமைகளை உறுதிப்படுத்துதல்"

அரசியலமைப்பு 27 (ஊ) உறுப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக் கொள்கைகளை மேற்கொள்ளும் கோட்பாடுகள் பற்றிய சட்டத்தின் முக்கியத்துவம்

ஐக்கிய நாடுகளால் வெளியிடப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்திலும் இலங்கையின் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்திலும் குறிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் பல உரிமைகள் அரசின் கொள்கை அடிப்படைகளாக அரசியல் யாப்பிலே உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது தெளிவான விடயமாகும்.

எனினும் அரசியல் யாப்பிலே இடம்பெற்றுள்ள ஏனைய உறுப்புரைகளோடு ஒப்பிடும்போது மேலே குறிப்பிடப்பட்ட அரசுக்கொள்கை பற்றிய கோட்பாடு மற்றும் அடிப்படைக் கடமைகள் பற்றிக் குறிப்பிடத் தக்க விசேட விடயம் ஒன்றுண்டு. அதாவது வேறு சட்டங்கள் போன்றல்லாது இச் சட்டங்கள் தொடர்பான எவரது உரிமை களையேனும் மற்றொருவரிடம் கையளிக்க முடியாமை, சட்டப்படி எவர் மீதும் கட்டுப்படாமை அந் நிபந்தனைகளை ஒரு நீதிமன்றம் அல்லது நீதி வழங்கக் கூடிய யாதேனும் ஓர் அதிகார சபை மூலம் அமுலாக்க முடியாமை, அந் நிபந்தனைகளோடு உடன்படல் தொடர்பாக எந்தவொரு வினாவையும் எந்தவொரு நீதிமன்றம் அல்லது நீதி வழங்கும் அதிகார சபை முன்பாகச் சமர்ப்பிக்க முடியாமை என்பன அத்தகைய விசேட விடயங்களாகும்.

இவ்வாறாக அரசியல் யாப்பின் வேறு பிரமாணங்கள் போன்று சட்ட பூர்வமான அதிகாரம் இல்லாவிடினும் அதன் அரசுக் கொள்கைகளை மேற்கொள்ளும் கோட்பாடுகள், அரசாங்கத்தின், பிள்ளைகள் தொடர் பான உரிமைகள் பற்றிய கொள்கைகள் மட்டில் அது ஒரு கொள்கைப் பிரகடனமாக முக்கியத்துவம் பெறுகின்றது. அரசின் கொள்கைகளை மேற்கொள்ளும் கோட்பாடுகளில் தங்கியுள்ள அறியாமையை முற்றாகவே ஒழித்துக் கட்டுதல், அனைவரினதும் கல்வி தொடர்பான சகல சந்தர்ப் பங்களின்போது முற்றிலும் நியாயமாகவும் சமத்துவமாகவும் வாய்ப்புக ளைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தல், தேசிய ஒற்றுமையை விருத்திசெய்தல், விசேட சலுகைகள் மற்றும் பாரபட் சங்களை அகற்றுதலின் பொருட்டுக் கற்பித்தலையும் கல்வியையும் வழங்குதல், பிள்ளைகள் உடல், உள, தார்மீக, மத, சமூக ரீதியாகப் பூரண வளர்ச்சியினை அடைவதற்காக ஆவன செய்தல், சுய நலனுக்காகப் பிள்ளைகளைப் பயன்படுத்திக் கொள்வதில் இருந்து அவர்களைக் காத்துக் கொள்ளத் தக்க விதத்தில் பிள்ளைகளின் நலன் தொடர்பாக அரசாங்கம் விசேட முயற்சியை மேற்கொள்ளல் என்பன பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான அரச கொள்கையின் அடிப்படை அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

அரசாங்கம் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இயற்றும் பல்வேறு சட்டங்களுக்காகவும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுக ளுக்காகவும் அடிப்படையாக அமைவது அரசின் மேற்படி கொள்கைத் தொகுப்பேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அரசுக் கொள்கைகள் வாயிலாகப் பிள்ளைகளின் உரிமைகள் மட்டில் பாதிப்பை ஏற்படுத்தும் வேறு சட்டங்களில் போன்று சட்ட ரீதியான உரிமைகள் மற்றும் சட்ட ரீதியான பொறுப்புகள் ஆகியவை சட்டமாக இயற்றப்படாமை காரணமாக அவற்றை நீதிமன்றத்தால் அல்லது வேறு நீதித் துறை அதிகாரம் கொண்ட சபையால் நடைமுறைப்படுத்துதல் கடினமாகும்.

எனினும் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான சட்டம் சார்ந்த யாதேனும் ஒரு பிரச்சினை தலையெடுப்பின் அது தொடர்பான அரசுக் கொள்கை எதுவெனத் தெளிவுபடுத்திக் கொள்ள இவ்வரசுக் கொள்கைகள் பற்றிய கோட்பாடுகள் பயன்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 7

# பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்கள்

இலங்கையின் அரசியல் யாப்பின் 3ம் அத்தியாயத்தில் அடங்கியுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகள், இலங்கைப் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டத் தொகுதியாக மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள பிள்ளைகளின் பல அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க ஏதுவாகும் சட்டபூர்வமான நிபந்தனைகள், இவ்வடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் எனப்படுவன வெறுமனே ஒரு சொற்றொடராக அன்றி சட்டத்தினால் பாதுகாக்கப்படும் சட்ட ரீதியான உரிமைகளாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒரு சட்டத் தொகுப்பாக மிக முக்கியமாக விளங்கும் இவ்வடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகள் என்பன பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

## அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டம் பற்றிய அறிமுகம்

அரசியல் யாப்பின் வாயிலாக ஓர் அரசாங்கம் கொண்டுள்ள வரையறையற்ற அதிகாரம் காரணமாக மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் விசேட நிபந்தனைகள் அடங்கிய ஒரு தொகுப்பு அரசியல் யாப்பில் பல நாடுகளால் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதமாகவே இலங்கையின் 1972ம், 1978ம் ஆண்டுகளின் அரசியல் யாப்புகளிலும் அடிப்படை உரிமைகள் தொடர்பான அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 1972 ன் ஆண்டின் அரசியல் யாப்பில் 18 (1)ம் பிரிவில் உள்ள அனைத்து அடிப்படை உரிமைகளும் ஒருங்கணிக்கப்பட்டுள்ளதோடு 1978ம் ஆண்டின் யாப்பில் முழுமையாக ஓர் அத்தியாயம் அடிப்படை உரிமைகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். அவ்வத்தியாயத்திலே குறிக்கப்பட்டுள்ளவாறு யாதேனும் ஓர் அடிப்படை உரிமை மீறல் நிகழுமேயாயின் உயர் நீதிமன்றம் வாயிலாகப் பரிகாரம் காண அரசியல் யாப்பு ஒழுங்குகளைச் செய்திருக்கிறது.

## 1978ம் ஆண்டின் யாப்பில் அடங்கியுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகள்

அரசியல் யாப்பின் 3ம் அத்தியாயத்திலே இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் சுருக்கமாகப் பின்வருமாறு அமைகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும். (உறுப்புரை 10)

2. ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது. (உறுப்புரை 11)

3. சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள் (உறுப்புரை 12 (1)

4. இனம், மதம், மொழி, சாதி அல்லது அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது (உறுப்புரை 12 (2)

5. சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்கலன்றி, ஆளெவரும் கைது செய்யப்படுதலாகாது. கைது செய்யப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். (உறுப்புரை 13 (1)

6. கட்டுக் காவலில் வைத்திருக்கப்படும், தடுத்து வைத்திருக்கப்படும், அல்லது வேறுவகையில் சொந்தச் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க அண்மையிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு முன்கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய நீதிபதியினால் கட்டளைப்படியன்றியும் அதன் நியதிகளுக் கிணங்கலன்றியும், தொடர்ந்தும் கட்டுக் காவலில் வைத்திருக்கப்படுதலோ, தடுத்துவைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது (உறுப்புரை 13 (2))

7. தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எவரேனுமாள் தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கு உரித்துரையவராதல் வேண்டும். (உறுப்புரை 13 (3))

8. சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்கத் தகுதிவாய்ந்த நீதி மன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி, ஆள் எவரும் மரண தண்டனையினால் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படு தலாகாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைது செய்து வைத்திருத்தல், கட்டுக் காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் தண்டனையாக அமையலாகாது. (உறுப்புரை 13 (4))



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆளொவ்வொருவரும் அவர் குற்றவாளியென எண்பிக்கப்படும் வரை, சுத்தவாளி என ஊகிக்கப்படுதல் வேண்டும். ஆயின் குறிப்பிட்ட நிகழ்வினை எண்பிப்பதற்கான பொறுப்பை குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் மீது சட்டம் சுமத்தலாம் (உறுப்புரை 13 (5))

10. புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாக இருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது என்பதுடன், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டத்தினும் பார்க்கக் கடுமையான தண்டமெதுவும் அத்தகைய ஏதேனும் தவறுக்கு விதிக்கப்படுதலுமாகாது. (உறுப்புரை 13 (6))

11. ஒவ்வொரு பிரசையும் பின்வருவனவற்றிற்கு உரித்துடையவராவர்;.

(அ) வெளியிடுதலுட்படப் பேச்சு சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்

(ஆ) அமைதியான முறையிலே ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்

(இ) ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்

(ஈ) தொழிற்சங்க மொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம்

(உ) தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும் அனுசரிப்பிலும், சாதனையிலும் போதனையிலும் வெளிக் காட்டுவதற்கான சுதந்திரம்.

(ஊ) தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்த தனது சொந்தக் கலா சாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்குமான சுதந்திரம்

(எ) ஏதேனும் சட்டமுறையான முயற்சியில் உயர் தொழிலில் வியாபாரத்தில் தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கான சுதந்திரம்

(ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம்.

(ஐ) இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான சுதந்திரம் (உறுப்புரை 14 (1))



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளது அடிப்படை உரிமைகளும் அடிப்படை உரிமைச் சட்டங்களும்.

இலங்கையில் பிள்ளைகள் உட்பட அனைத்துப் பிரஜைகளுக்கும் உரித்தாகும் சில அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க ஏதுவாக அமைவன அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளேயாகும். அச் சட்டங்கள் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் போன்ற மூலாதாரங்களால் இணக்கங் காணப்பட்ட பிள்ளைகளது உரிமைகளுக்கான சட்டபூர்வமான செல்லுபடியாகுந் தன்மையை அளிக்கின்றன. உதாரணமாகப் பிள்ளைகளது உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தின்படி பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்பட முடியாத உரிமை சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட முடியாத உரிமை, கருத்து வெளிப்பாடு, பிரசுரித்தல், சிந்தித்தல், மனச் சான்று, மத நம்பிக்கை என்பன தொடர்பான சுதந்திரம் சார்ந்த உரிமை போன்ற பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் தொடர் பானவை இடம்பெற்றுள்ளன. எனினும் அவ்வாறான உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்ப்பதற்காக அல்லது அவ்வாறு மீறப்பட்டதால் நிகழ்ந்த தீங்கின் பொருட்டு பரிகாரம் வழங்குவதற்காகச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் விபரிக்கப்படுவதில்லை. ஏனெனில் ஓர் ஒப்பந்தத்திலே இடம்பெற்றுள்ள யாப்பு ரீதியான இணக்கம் அல்லது உடன்பாடு அன்றி அமுலாகும் சட்டமாக இல்லாமையே அதற்கான காரணமாகும்.

எனினும் அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டத்தின் வாயிலாக இவ்வுரிமைகள், சட்டபூர்வமான உரிமைகளாகப் பரிணமிக்கின்றன. அதன் ஊடாக அடிப்படை உரிமைகளை பாதுகாக்க ஏதுவாகும். சட்டபூர்வமான பொறுப்புகள் உரியவாறு நிறைவேற அவசியமான பணியொழுங்குகள் மிக ஆணித்தரமாக விபரிக்கப்படுகின்றன. இவ்வாறு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்டத்தால் பிள்ளைகளது ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சில உடன்பாடுகள் இலங்கையிலே அமுலாகும் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அவ்வாறான அடிப்படை உரிமைகள் இலங்கை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளினும் காணப்படுகின்றன. பின்வரும் சட்டத்தில் அவை

### அடிப்படை உரிமைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் அரசியல் யாப்புச் சட்டம்

| பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் | அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசியல் யாப்பில் குறிக்கப்பட்டுள்ள விதிகள் |
|---|---|
| 2ம் யாப்பு<br>பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்படாமை | 12ம் யாப்பு (2)b<br>பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்படாமை |
| 12ம் மற்றும் 13ம் யாப்பு<br>கருத்துகளை வெளியிடுவதன் மட்டில் உள்ள உரிமைகளும் வெளியீட்டுச் சுதந்திரமும் | 14ம் யாப்பு (அ)<br>பேச்சு சுதந்திரம் மற்றும் வெளியீட்டுச் சுதந்திரம் வெளிப்பாட்டுச் சுதந்திரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 14ம் யாப்பு<br>சிந்திக்கும் சுதந்திரம்,<br>மனச்சாட்சியின் மட்டிலான<br>சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் | 10ம் யாப்பு<br>சிந்திக்கும் சுதந்திரம்,<br>மனச்சாட்சியின் மட்டிலான<br>சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் |
| 15ம் யாப்பு<br>பழகுவதற்கான சுதந்திரம் | 14ம் யாப்பு (இ)<br>தோழமையின் மட்டிலான சுதந்திரம் |
| 36ம் யாப்பு<br>சித்திரவதைகளில் இருந்து<br>பாதுகாத்தல் | 11ம் யாப்பு (இ)<br>சித்திரவதைகளில் ஈடுபடுத்தப்பட<br>முடியாத சுதந்திரம் |

ஒப்பிடப்பட்டுள்ளன)

## பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது சட்ட ரீதியான பரிகாரம் காணல்.

1. ஒரு பிள்ளை தான் உரித்தாகக் கொண்ட ஓர் அடிப்படை உரிமை நிறைவேற்றுத் துறை அல்லது நிருவாகத் துறை சார்ந்த ஒரு செயல் காரணமாக மீறப்பட்டிருப்பின் அது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு ஒரு பரிகாரத்தை அல்லது உதவியைக் கோரலாம்.

2. அத்தகைய அடிப்படை உரிமை மீறல் நிகழ்ந்த ஒரு மாதத்துக்குள் அவ்வாறான முறையீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   (பிரமாணம் 126 (2) )

3. அம் முறையீடு அடிப்படை உரிமை மீறப்பட்ட பிள்ளையின் சார்பாக ஆஜராகும் சட்டபூர்வமான பாதுகாவலரால் அல்லது அவர் சார்பாக ஆஜராகும் சட்டத் தரணியால் ஊடாக அல்லது நடைமுறையில் உள்ள நீதிமன்ற விதிகளுக்கமைய எழுத்து மூலமான ஒரு முறையீட்டின் வாயிலாக உயர் நீதிமன்றத்திலே சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.

   (பிரமாணம் 126 (2) )

4. அத்தகைய ஒரு முறையீடு உயர் நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரு உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குக் குறையாத தொகையினரால் அம் முறையீடு பற்றிய விசாரணையைத் தொடர அனுமதிக்கப்படும். அல்லது நிராகரிக்கப்படும். (பிரமாணம் 126 (2))

## பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக நீதிமன்றத்தில் பரிகாரத்தை அல்லது உதவியை நாடும் போது விசேடமாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

அடிப்படை உரிமைகள் மீறப்படல் அல்லது மீறப்பட அண்மித்திருத்தல் பற்றி உயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தில் எழுத்து மூலமான ஒரு மனுவைச் சமர்ப்பிக்கும் ஒருவர் விசேடமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் சில உண்டு.

1. அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாகப் பரிகாரத்தை அல்லது உதவியை வழங்குவதன் மட்டில் உயர் நீதிமன்றம் மட்டுமே அதிகாரத்தைக் கொண்டுள்ளது. வேறு எந்தவொரு நீதிமன்றத்துககும் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்ப தற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை.

2. அடிப்படை உரிமை மீறப்படல் யாதேனும் ஒரு நிறைவேற்றுத் துறையினால் அல்லது நிருவாகத் துறையினால் ஏதேனும் ஒரு செயலின் ஊடாக நிகழத்தப்பட்டிருப்பின் மட்டுமே உயர் நீதிமன்றமாயினும் ஒரு பரிகாரத்தை அல்லது உதவியை வழங்க முடியும். அத்தகைய செயல் அரசு சார்பற்ற ஒரு நிறுவனத்தால் அல்லது அரச தொடர்பற்ற ஒரு நபரால் நிகழ்த்தப்படின் அதன் பொருட்டு ஒரு பரிகாரத்தை அல்லது உதவியைப் பெறுவதற்காக உயர் நீதிமன்றத்திலே முறையிட முடியாது.

3. ஒரு நீதிமன்றச் செயல் வாயிலாக நிகழ்த்தப்படும் ஓர் அடிப்படை உரிமை மீறல், நிறைவேற்றுத்துறை அல்லது நிருவாகத்துறை சார்ந்ததாகக் கருதப்பட மாட்டாது. (பீற்றர் லியோ பெர்னான்டோ எதிர் சட்டமா அதிபரும் ஏனையோரும் 1985, 2 இலங்கைச் சட்ட அறிக்கை 341ம் பக்கம்)

4. அடிப்படை உரிமை மீறப்படல் அல்லது மீறுவதற்கு எத்தனித்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் எழுத்து மூலமான ஒரு முறையீட்டைச் சமர்ப்பித்தல், அவ்வுரிமை மீறப்பட்டு ஒரு மாதம் முடிவடையும் முன்னர் நிகழ்த்தப்பட வேண்டும்.

   எனினும் ஒரு மாதம் கடந்த பின்னராயினும் முறையீட்டைச் சமர்ப்பிப்பதில் நிகழ்ந்த தாமதத்துக்கான நியாயமான காரணங்கள் குறிக்கப்படின் உயர்நீதிமன்றமானது எழுத்திலான அம் மனு மீது அதன் கவனத்தைச் செலுத்தும்.

   (டெனிசன் எதிரிசூரிய எதிர் வ. நவரத்தினம் 1985, 1 இலங்கைச் சட்ட அறிக்கை 100ம் பக்கம்)

   முறையீட்டாளர் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டதைத் தாம் அறிந்து கொண்ட தினம், உண்மையாகவே அடிப்படை உரிமை மீறப்பட்ட தினத்துக்குப் பின்னரான ஒரு தினமாக இருப்பின் ஒரு மாதம் கடந்தமை தொடர்பான விடயம் அடிப்படை உரிமை மீறப்பட்டமை பற்றி முறையீட்டாளர் அறிந்து கொண்ட தினத்தில் இருந்தே கவனத்தில் கொள்ளப்படும். (சிரிவர்தன எதிர் பிரிகேடியர் ரொட்ரீகோ 1986, 1 இலங்கைச் சட்ட அறிக்கை 384ம் பக்கம்)

5. அடிப்படை உரிமைகள் மீறப்படல் அல்லது மீறுவதற்கு எத்தனித்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் ஒரு பரிகாரத்தை அல்லது உதவியை எதிர்பார்த்துத் தன்னால் அல்லது தமது சார்பாக ஆஜராகும் சட்டத்தரணியால் அல்லது உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் எழுத்து மூலமான முறையீட்டால் பிரதிவாதிகளின் பெயர் விலாசம் என்பன பிழையின்றிக் குறிக்கப்படல் வேண்டும். அவர்களது பதவிப் பெயர்களை மட்டும் குறிப்பிடல் போதுமானதல்ல. சட்டமா அதிபரின் பெயரும் ஒரு பிரதிவாதியாக அதில் குறிப்பிடப்படல் வேண்டும்.

6. எழுத்து மூலமான அம் முறையீடு சத்தியம் மற்றும் வேறு ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தபடல் வேண்டும். எழுத்து மூலமான இம் மனுவின் 7 பிரதிகளும் மற்றும் ஒவ்வொரு பிரதிவாதியின் மட்டில் ஒரு பிரதி வீதமும் நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மனுதாரரால் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டை விசாரணை செய்வதற்கான முன் அனுமதியை மனுதாரர் உயர் நீதி மன்றத்தின் வாயிலாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய அனுமதி உயர் நீதிமன்றத்தால் வழங் கப்பட்ட பின்பு, பிரதிவாதிகள் அது தொடர்பான தம் காரணங்களைச் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் அவர்களுக்கு ஆணையிடும். அப்போது பிரதிவாதிகள் சத்தியக் கடதாசி மூலம் தம் எதிர்ப்பினைச் சமர்ப்பிக்கலாம். பிரதிவாதிகளது எதிர்ப்புகளுக்கு மனுதாரர்,. சத்தியக் கடதாசி மூலம் விடை பகர்வார்.

8. மனுதாரரது அடிப்படை உரிமைகள், மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் முடிவு செய்யும் பட்சத்தில் அவ்வடிப்படை உரிமை மீறல்களைத் தடுக்கவும், நஷ்டஈட்டைப் பெற்றுத் தரவும் உயர்நீதிமன்றம் கட்டளையிடும்.

### பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் பற்றிய நீதிமன்ற நடவடிக்கைகள்

இலங்கையின் அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ள சட்டங்களில் அடிப்படை உரிமைகளோடு தொடர்புட்ட சட்டமானது, சமீப காலமாகப் பலரது கவனத்தை ஈர்த்துள்ளதெனலாம். இச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல்களோடு தொடர்புடைய வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்பட்டது. அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டம் பற்றி வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருந்தது. மேலும் இச் சட்டத்தோடு தொடர்பான விடயங்களில் ஈடுபட்ட நபர்களினதும் இயக்கங்களினதும் எண்ணிக்கை அதிகரிகக்கப்படலாயிற்று. அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டம் மட்டில் தலையெடுத்த சமூகத்தினது அக்கறையைக் கல்வி முறையிலும் காணக் கூடியதாக இருந்தது.

> "வீட்டில் இருந்து அநுலா ஆரம்பப் பாடசாலைக்குத் தூரம் 20 அடிகளே. எனினும் மகளைச் சேர்க்க முடியவில்லை"
>
> " மூத்தவர் 18 புள்ளிகளைப் பெற்றார்; எனினும் இரண்டாமவர் எந்தப் புள்ளிகளையும் பெறவில்லை"
>
> "மனுதாரரது பிள்ளையின் வசிப்பிடம், குறிப்பிடப்பட்டுள்ள தூரத்தில் இல்லை"
>
> "வித்தியாலயத்தின் ஓர் அறையிலே வைத்துத் தாக்கப்பட்ட காரணத்தால் இரண்டு மாதங்கள் மனநோயாளர் ஆஸ்பத்திரியில் தங்கும்படி நேரிட்டது."

இதன்படி இனம், மதம், மொழி, சாதி, பால்வேறுபாடு , அரசியல் கருத்து, பிறந்த இடம் போன்ற காரணங்களால் அல்லது வேறு எக்காரணங்களாலேனும் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டு பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகள் பலவாகும். இதனை விடவும் சித்திரவதைகளுக்கு உள்ளாகாது இருக்கும் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக கூறி உகந்த ஒரு நஷ்டஈட்டையும் பெற்றுத்தருமாறு கோரி மூன்று ஆசிரியர்களுக்கு எதிராக ஒரு மாணவனால் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கும் கவனத்தை ஈர்த்தது. இவ்வழக்குகள் தொடர்பான சுருக்கமான விபரங்கள் கீழே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பாரபட்சத்துக்கு உள்ளாகாது இருக்கும் உரிமை மீறப்பட்டமை தொடர்பான முறையீடுகள்

பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளும்போது நிகழும் நிருவாக அல்லது கட்டளை அல்லது செயல் வாயிலாகத் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படல் அல்லது மீறுவதற்கு எத்தனித்தல் நிகழ்ந்துள்ளதாகக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறையீடுகள் ஏராளம். எல்லாச் சந்தர்ப்பங்களின்போதும் இத் தகைய முறையீடுகள், இளம் பராயத்தினரான பிள்ளைகள் சார்பாக அவர்களது தந்தை அல்லது தாய் அல்லது பாதுகாவலர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தவையேயாகும். அவை அனைத்தும் நியாயமான உரிமைகளின் கீழ் குறிக்கப்பட்டுள்ள "எந்த ஒரு நபரும் இனம், மொழி, மதம், சாதி, பால் வேறுபாடு, அரசியல் கருத்து, பிறந்த இடம் ஆகிய காரணங்களின் மட்டில் அல்லது அவற்றில் எந்தவொரு விடயத்தின் மட்டிலேனும் பாரபட்சத்துக்கு உட்படுத்தப்படலாகாது. என்ற அடிப்படையில் நிறைவேற்றுத்துறை அல்லது நிருவாகத்துறையால் நிகழ்த்தப்பட்ட செயல்களினால் மீறப்பட்டுள்ளன" என்ற காரணத்தின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகளாகும்.

**உதாரணங்கள்:**

**பாத்திமா பதுரியா ஸபரியா எதிர் கொழும்பு றோயல் கல்லூரி அதிபரும் ஏனையோரும் (1993)**
**பீ. பீ. தர்மதாச எதிர் காலி ரிச்மன்ட் வித்தியாலய அதிபரும் ஏனையோரும் (1993)**

**டி. குணசேன டி சில்வா, எதிர் அம்பலாங்கொடை தர்மாசோக வித்தியாலய அதிபரும் ஏனையோரும் (1993)**

**ரி. ஆர். பந்தஜயா, எதிர் கொழும்பு ஆனந்தா வித்தியாலய அதிபரும் ஏனையோரும் (1994)**

**எச். ஜே. ஸ்ரீயானி ஜயசிங்க எதிர் நுகேகொடை அநுலா வித்தியாலய அதிபரும் ஏனையோரும். (1994)**

மேலே குறிப்பிடப்பட்ட முறையீடுகள் பிள்ளைகளை பாடசாலையில் சேர்ந்த்துக் கொள்வதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதை மையமாகக் கொண்டு உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகளோடு தொடர்புடைய முறையீடுகளாகும். மேலும் பாடசாலையிலே மாணவியரின் விளையாட்டுத் தலைவியை நியமித்தலின்போது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றம் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான ஒரு முறையீடும் சமீபத்தில் உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நந்தபால பிலதூவ பரணஹேவா எதிர் கொழும்பு விசாக்கா வித்தியாலய உடற் பயிற்சி ஆலோசகரும் ஏனையோரும் (1994) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கு, மாணவர்களது அடிப்படை உரிமைகள் மீறப்படல் பற்றிய விசேட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழக்கு எனக் குறிப்பிடலாம். தேசிய விருதுபெற்ற தனது மகளை வித்தியாலய விளையாட்டுத் தலைவியாக நியமிக்காது தேசிய விருதுபெறாத அல்லாத ஒரு மாணவியை அப் பதவிக்கு நியமித்ததன் மூலம் தமது மகளது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அவளது தந்தையின் முறையீட்டுக்குக் காரணம் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சித்திரவதைகளுக்கு ஆளாகாது சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான வழக்கு.

பராக்கிரமகே டக்ளஸ் பண்டார எதிர் பத்தரமுல்லை ஸ்ரீ விபூதி மத்திய மகா வித்தியாலயத்தின் உதவியதிபரும் ஏனையோரும் இவ் வழக்கிலே அப் பாடசாலையின் 12ம் ஆண்டு மாணவனொருவன் ஆசிரியர்களான 1 தொடக்கம் 3 வரையான பிரதி வாதிகளால் தாம் சித்திரவதைக்கு உள்ளானமையால் சித்திரவதைக்கு ஆளாகாமல் இருப்பதற்கான தம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக ஒரு தீர்ப்பையும் பொருத்தமான ஒரு நஷ்ட ஈட்டையும் பெற்றுத் தருமாறு உயர் நீதிமன்றத்திலே ஒரு முறையீடு சமர்ப்பிக்கப்பட்டது.

### பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாகச் சட்டரீதியான பரிகாரம் காண்பது தொடர்பான வேறு நடவடிக்கைகள்

மேலே குறிப்பிடப்பட்டவாறு அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் முறையிடல் நீங்கலாக அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக நீதிமன்றமே முன்வந்து செயலாற்றும் சந்தர்ப்பங்கள் 126 (2) பிரமாணத்திலே குறிப்பிடப்படுகின்றன.

அப் பிரமாணத்தின்படி ஹெபியாஸ் கோபஸ், சர்ரியொரார்ரி தடுப்பு ஆணை புரொசிடென்டோ, மண்டாமுஸ்க்வோ வொரண்டோ தன்மையிலான ஒரு ரிட் ஆணையின் பொருட்டு மனுப்பண்ணும் கோரிக்கையின் மட்டில் மேன் முறையீட்டு நீதிமன்றம் அதனை விசாரிக்கும் போது மனுதாரர் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை மீறப்பட்டுள்ளதாக அல்லது மீறப்பட எத்தனிக்கப்பட்டுள்ளதாக தகுந்த சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் அதனைத் தீர்மானிப்பதற்காக அந்நீதிமன்றம், அதனைத் தாமதமின்றி உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரல் வேண்டும்.

அவ்வாறான கவனஞ் செலுத்தலின் போது குறிப்பிட்ட அவ் விடயம் நியாயமானதென உயர் நீதிமன்றத்திலே நிரூபிக்கப்படுமிடத்துப் பரிகாரம் வழங்க அல்லது கட்டளை பிறப்பிக்க உயர் நீதிமன்றத்தால் இயலும். அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை மீறப்படவில்லையென உயர் நீதிமன்றம் கருதுமேயாயின் அவ்விடயத்தை மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைப்பதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றம் வசமுண்டு. (பிரமாணம் 126 (4)

**பாராளுமன்ற ஆணையாளர் அல்லது ஒம்புட்ஸ்மன் அவர்களிடம் விடயங்களைச் சமர்ப்பித்தல்.**

அரசியல் யாப்பின் 156 (1) பிரமாணத்தின்படி நிறுவப்பட்ட பாராளுமன்ற ஆணையாளர் அல்லது ஒம்புட்ஸ்மன் அவர்கள், அரசாங்க உத்தியோகத்தராலும் அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தராலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அத்தகைய வேறு நிறுவனங்களினது உத்தியோகத்தராலும் நிகழ்த்தப்படும் அடிப்படை உரிமை மீறல் மற்றும் வேறு நியாயமற்ற செயல்கள் மட்டிலான முறைப்பாடுகளை அல்லது குற்றச்சாட்டுகளை அச் சட்டத்தின் பிரமாணங்களுக்கேற்பப் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கும் கடமையை கொண்டுள்ளார். ஒம்புட்ஸ்மன் அவர்களது அதிகாரம், கடமை, பொறுப்பு என்பன 1981, 17ம் இலக்கம் கொண்ட பாராளுமன்ற நிருவாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கான ஆணையாளர் என்ற கட்டளையில் விபரிக்கப்படுகின்றது.

அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பாக ஒம்புட்ஸ்மன் அவர்களால் நிறைவேற்றப் படத்தக்க பணிகள் பெரிதும் வரையறைக்கு உட்பட்டவை எனக் குறிப்பிடல் தகும்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பிரச்சனைகளைச் சமர்ப்பித்தல்

**மனித உரிமைகள் ஆணைக்குழு எனப் பெரிதும் அழைக்கப்படும் இந்த இயக்கத்தினது உத்தியோக ரீதியான பெயராவது விசேட சலுகைகள் அல்லது பாரபட்சங்கள் காட்டப்படுவதை அகற்றும் மற்றும் அடிப்படை உரிமைகளை மீளாய்வு செய்யும் ஆணைக்குழு என்பதேயாகும்.**

1973ம் ஆண்டு 31ம் இலக்க இலங்கை மன்றக் கட்டளையின் கீழ் நிறுவப்பட்ட இவ் வியக்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாவது மனித உரிமைகளைக் காப்பதேயாகும். விசேடமாக அடிப்படை உரிமைகளின் பிரமாணம் 12 (2) ன் படி எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால் வேறுபாடு, அரசியல் கருத்து, பிறந்த இடம் போன்ற காரணங்களால் அல்லது எந்தவொரு காரணத்தால் எத்தகைய பாரபட்சத்துக்கு அல்லது விசேட தன்மைக்கு உள்ளாக்கப்படாது சகல நியாயபூர்வமான உரிமை களையும் காப்பதற்காக இவ்வாணைக்குழு முனைந்து பணிபுரியும்.

அடிப்படை உரிமை மீறலுக்கு ஏதுவான பாரபட்சங்களுக்கு அல்லது விசேட தன்மைகளுக்கு ஆளாதல் தொடர்பான விபரங்களைத் தேடிப் பார்த்தல், அதுபற்றி அறிவூட்டல், தகவல்களைத் திரட்டுதல் என்பன இவ்வாணைக்குழுவின் பணிகளாகும். மேலும் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரச்சினைகளின்போது இவ் வாணைக் குழு தலையிட்டு இருசாராருக்குமிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்த முனையும். அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பான முறையீடுகள் உயர்நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இரு சாராரிடமும் அது தொடர்பான விடயங்களை விசாரித்து ஓர் இணக்கத்தை ஏற்படுத்துவதன் பொருட்டு உயர் நீதிமன்றம் அதனை ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டதன் வாயிலாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட போது ஆணைக்குழுவிடம் விடயங்களைச் சமர்ப்பிக்கும் விதம் சுருக்கமாகப் பின்வருமாறாகும்.

i. யாதேனும் ஒரு பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டதன் காரணமாகத் தம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகக் குற்றஞ்சாட்டும் ஒருவர், அவ்வாறான மீறல் இடம்பெற்ற 180 நாட்களுக்குள் ஆணக்குழுவின் பணிப்பாளரிடம் முறையிடல் வேண்டும்.

ii. அம் முறைப்பாட்டில் அவ் வடிப்படை உரிமை மீறல் நிகழ்த்தப்பட்ட காலம், இடம், மற்றும் அது தொடர்பான வேறு விபரங்களும் இடம்பெற வேண்டும்.

iii. அவ்வாறான ஒரு முறைப்பாடு கிடைத்த பின்னர் பணிப்பாளர், அது பற்றி விசாரித்து அவசியமெனக் கருதுவாரெனில் முறைப்பாட்டாளரை அழைத்து மேலும் விடயங்களை அறிந்து கொள்வார்.

iv. முறைப்பாடு நியாயமானதெனக் கருதப்படுமிடத்து முறைப்பாடு கிடைத்த ஆறு வாரங்களுக்குள் சகல தரப்பினரையும் அழைப்பித்து கலந்துரையாடல்கள் வாயிலாக ஒரு தீர்வை வழங்க அல்லது இணக்கத்தை ஏற்படுத்த ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையும். முறைப்பாடு நியாய மற்றதென ஆணைக்குழு கருதுமிடத்து முறைப்பாடு கிடைத்த எட்டு வாரங்களுக்குள் அது பற்றி முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கும்.

V. சம்பந்தப்பட்டவர்களிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்தப் பணிப்பாளரால் முடியாவிடின் அவர் அது பற்றிய ஒரு விரிவான அறிக்கையோடு அம் முறைப் பாட்டை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பார்.

Vi. உயர் நீதிமன்றத்தால் ஆணைக்குழுவிடம் அனுப்பப்பட்ட அடிப்படை உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடு, ஆணைக்குழுவின் தலைவரதும் மற்றும் இரு உறுப்பினர்களதும் ஒரு கமிட்டி வாயிலாக விடயங்களை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்துக்கு ஓர் அறிக்கையாக அனுப்பி வைக்கப்படும்.

மேற்படி அமைப்பு பற்றிய விபரங்களைப் பின்வரும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மனித உரிமைகள் ஆணைக்குழு**
**இலங்கை மன்றம்,**
**27, சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு 7.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 8

# பிள்ளைகளின் உரிமைகளும் குற்றவியற் சட்டமும்

பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு ஏதுவாகும் சட்டத் தொகுப்பாக அரசியல் யாப்பிலே இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய பிரமாணங்கள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன. என்பது கடந்த அத்தியாயத்தின்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. பிள்ளைகளின் உரிமைகள் மீறப்படக் காரணமாக அமையத்தக்க விடயங்களான பிள்ளைகளின் இனம், மதம், மொழி, குலம், பால் பிறந்த இடம் போன்ற காரணிகளால் அவர்கள் பாரபட்சத்துக்கு ஆளாவதைத் தடுக்கும் பொருட்டும் பிள்ளை கள் சித்திரவதைகளுக்கு அல்லது மனிதாபிமானம் அற்ற அவமானங்களுக்கு அல்லது தண்டனைகளுக்கு உள்ளாவதைத் தடுக்கும் நோக்கோடும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரமாணங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் விதம் எடுத்துக்காட்டு களோடு விபரிக்கப்பட்டது.

இவ்விதமாகப் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள பிள்ளைகளின் பல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அடிப்படை உரிமைகள் சட்டத் தின் உதவியை பெற முடியுமெனினும் சில குறிப்பிட்ட வரையறைகள் காரணமாக முழுப் பயனையும் பெற முடிவதில்லை. உதாரணமாக அச் சட்டம், நிறைவேற்றுத்துறை அல்லது நிருவாகத்துறையின் யாதேனும் ஒரு செயலால் பிள்ளைகளது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுகின்றது. அதாவது அமைச்சர்களால் அரசாங்க அல்லது கூட்டுத்தாபன நிர்வாகிகளால் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மீறப்பட்டிருப்பின் மட்டுமேயாகும். அரசாங்க சார்பற்ற ஒரு நிறுவனத்தால் அல்லது அரச தொடர்பற்ற ஒரு நபரால் இழைக்கப்படும் அடிப்படை உரிமை மீறல் மட்டில் இச் சட்டத்தால் ஒரு பரிகாரத்தை அல்லது உதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. மேலும் ஒரு பிள்ளையின் ஓர் அடிப்படை உரிமை மீறப் பட்ட ஒரு மாதத்துக்குள் உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுவைச் சமர்ப்பித்து, ஒரு பரிகாரத்தை அல்லது உதவியை வழங்குமாறு முறையிட வேண்டும். அப்பிள்ளையின் சார்பாக பாதுகாவலர் மனுவைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிள்ளைகளது அடிப்படை உரிமைகள் மீறப்படல் பற்றி விசாரித்துப் பார்த்து பிள்ளைகள் மட்டில் நியாயம் வழங்க அரசாங்கம் அல்லது வேறு ஓர் அமைப்பு முன்வந்து நடவடிக்கை எடுக்க அடிப்படை உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் வாய்ப்புகள் இல்லை. இத்தகைய வரையறைகள் காரணமாகப் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப் பதற்காக அடிப்படை உரிமைகள் சட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளத் தக்க ஒத்தாசை மிகவும் வரையறையானதேயாகும்.

பிள்ளைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களாவன விசேடமாக உடல் ரீதியான சித்திர வதைகள், பாலியல் கொடுமைகள், பிள்ளைகளை விற்பனை செய்தல், பிள்ளைகளைக் கடத்திச் செல்லல். அவர்களைப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுத்திக் கொள்ளல், விபச்சாரத்தில் ஈடுபடுத்திக் கொள்ளல், இது போன்ற வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ளல் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குற்றங்களுக்கு எதிராகப் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வேறு சட்டங்களும் உண்டு. விசேடமாகக் குற்றவியற் சட்டம் (Criminal Law) எனக் குறிப்பிடப்படும் பொதுவான சட்ட ஏற்பாடு, பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மிக வலுவானதும் பரந்துபட்டதுமான பணியை ஆற்ற ஏதுவான சட்ட முறையெனக் குறிப்பிடலாம்.

## பிள்ளைகளது உரிமைகளும் குற்றவியற் சட்டமும்

கொடூரமான சித்திரவதைகளுக்கும் பாலியல் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படுவதால் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் வேதனைகளுக்கு ஆளான பிள்ளைகள் தொடர்பான உதாரணங்கள் சில இந் நூலிலே ஆரம்ப ஆய்வுப் பொருள்களில் விபரிக்கப்பட்டன. வீட்டில், பாதையில், வேறு பல்வேறு இடங்களில் வயது வந்தோரால் பிள்ளைகளுக்கு எதிராக இழக்கப்படும் இம்சைகள், கொடுமைகள், அநியாயங்கள் எண்ணிலடங்கா. பிள்ளைகளின் முதிர்ச்சியின்மை காரணமாக இத்தகைய குற்றங்களுக்கு எதிராகச் செயற்பட முடியாமையால் அனாதரவாகும் பிள்ளைகள் ஏராளம். இவர்கள் எல்லையற்ற உடல், உள வேதனைகளுக்கு ஆளாதல் சர்வ சாதாரண விடயமாகிவிட்டது.

நாகரீகமான சமூகம், பிள்ளைகளுக்கு எதிராக இழைப்படும் இத்தகைய செயல்களைச் சமூக விரோதச் செயல்கள் என வெறுத்தொதுக்குகின்றது. தம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது. எனினும் இது அத்தகைய செயல்களைத் தடுக்க அல்லது பாதிக்கப்பட்டு அனாதரவான பிள்ளைகள் மட்டில் உதவியை வழங்க அனுசரணையாக அமையாது என்பது உண்மையே. மேலும் இங்கு அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டம் போன்ற சட்டங்களால் பெறத்தக்க பயன்களும் சொற்பமேயாகும்.

எனினும் பிள்ளைகளுக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய குற்றங்கள் சட்டத்தால் கொடுமை சார்ந்த குற்றங்கள் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்காகச் சட்டம் பிரமாணங்களை விதிக்கிறது. பிள்ளைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அத்தகைய பாதகங்கள், குற்றங்கள் தொடர்பான சட்டம் குற்றவியற் சட்டம் எனப்படுகிறது. அக்குற்றவியற் சட்ட முறை வாயிலாகப் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் பணியொழுங்கு என்பவற்றை இனங்காண முன்பு குற்றவியற் சட்டத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் பற்றிச் சுருக்கமாகவேனும் விபரித்தல் பயனுடையதாக அமையும்.

## குற்றவியற் சட்டத்தின் தன்மை.

சமூகம் குற்றம் எனக் கருதும் செயல்கள் பல. சட்டம் இக் குற்றங்களை இரு அடிப்படைப் பிரிவுகளாகப் பிரிக்கிறது. பாதகச் செயல்கள் மட்டிலான குற்றம், சிவில் குற்றம் என்பன அவையாகும். கொலை புரிதல் மற்றும் காயம் விளைவித்தல் போன்று மனித உடலோடும் உயிரோடும் தொடர்புட்ட குற்றங்கள் களவு, கொள்ளை, மோசடி போன்ற சொத்துகள் தொடர்பான குற்றங்கள், அரசுக்கு எதிரான குற்றங்கள், மக்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள், அரசாங்க ஊழியர்களால் இழைக்கப்படும் குற்றங்கள், அரசாங்க ஊழியர்கள் தொடர்பான குற்றங்கள், பொதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரப் பாதுகாப்பு, வசதிகள், ஆளடையாளம் ஒழுக்கவியல் தொடர்பான குற்றங்கள் ஆகியவை "கிரிமினல்" (Criminal) குற்றங்களாகும்.

இலங்கையின் சட்டமுறை இத்தகைய குற்றங்களை ஒரு நபருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களாக அதாவது சிவில் குற்றங்களாகக் கருதாது அவை முழுச் சமூகத்துக்குமே மாறாக இழைக்கப்படும் குற்றங்கள் எனக் கருதுகிறது. எனவே இவ்வாறான கிரிமினல் குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. எனவே கிரிமினல் சட்டம், பொதுச் சட்டம் அல்லது மக்கள் சட்டம் என்ற பகுப்பைச் சார்ந்த சட்டமாகக் கருதப்படுகிறது.

### விளக்கம்

அரசாங்க பாடசாலை ஆசிரியையான திருமதி தனவர்தனாவினது வீட்டிலே பணியாளனாக வேலை செய்யும் பத்து வயதுச் சிறுவனான நிமல், திருமதி தனவர்தனாவினாலும் அவரது கணவனாலும் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதுண்டு. பிரம்படிகளாலும் நெருப்பினால் சுடுவதினாலும் அவனில் காயங்களை ஏற்படுத்துவர். பகற் பொழுதிலே அவனை ஒரு சங்கிலியால் பிணைத்து ஓர் அறையிலே தடுத்து வைப்பார்கள். நிமலின் உரிமைகள் தொடர்பாக அக்கறை செலுத்திய அயலில் வசிப்பவரான திரு. குணரத்தின இது பற்றிப் பொலீசில் முறையிட்டார். பொலீசார் விசாரித்துத் திருமதி தனவர்த்னாவுக்கும் அவரது கணவருக்கும் எதிராக நிமல் மீது இழைக்கப்பட்ட அநியாயத்துக்காகக் குற்றஞ்சாட்டி அரசாங்கத்தின் சார்பாக ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். குற்றவியற் சட்டத்தின் 311 வது பிரமாணத்தின்படி நிமல் மீது கடுமையான காயங்களை விளைவித்த குற்றம் காரணமாக வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது. குற்றவியல் சட்டக் கோவை 316வது பிரமாணத்தின்படி நிமல் மீது கடுமையான காயங்களை விளைவித்த குற்றத்துக்காகத் திருமதி தனவர்தனாவும் அவரது கணவனும் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படின் 07 வருட சிறைத் தண்டனையை அவர்கள் மீது விதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. கடுமையான காயங்களுக்கு உள்ளான நிமல் 'ஒரு பிள்ளையாகக் கணிக்கப்படும் பாலிய பருவத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையாக இருப்பின் முன்பு குறிப்பிட்ட தண்டனையை விடவும் மேலதிகமாகக் கசையடிகளால் தண்டிக்கவும் முடியுமென அப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய குற்றம் தொடர்பாக நிமலின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் பெறத்தக்க பரிகாரம் அல்லது உதவி வரையறுக்கப்பட்டதேயாகும். திருமதி தனவர்தனா அரசாங்க சேவையாளரான பாடசாலை ஆசிரியையாக இருப்பினும் நிமலுக்கு எதிராக இழைக்கப்பட்ட 'செயல்' ஓர் அரசாங்க சேவையாளராக நடத்திய நிறைவேற்றுத்துறை அல்லது நிருவாகத்துறை சார்ந்த ஒரு செயலாக இருப்பின் மட்டுமே நிமல், அடிப்படை உரிமைகள், தொடர்பான சட்டத்தால் ஒரு பரிகாரத்தை அல்லது உதவியைப் பெற முடியும். மேலும் தனவர்தனா தம்பதியினர் இழைத்த குற்றம் பற்றி அரசாங்க சார்பாகப் பொலீசாரால் வழக்குத் தொடுக்கப்பட்டதே தவிர அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டத்தின் கீழ் தொடுக்கப்படவில்லை.

பாதகங்கள் தொடர்பாகக் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படும் நபர்கள் மட்டில் குற்றவியற் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஊடாகத் தண்டனை வழங்கக் கூடியதாக இருப்பது அச் சட்டம் தொடர்பான அதி விசேட இயல்பாகும். ஒவ்வொரு குற்றத்தினதும் தன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அக்குற்றத்தின் மட்டில் குற்றவாளிகளாகும் நபர்கள் மீது விதிக்கத்தக்க தண்டனைகள் என்பன குற்றவியல் கோவை எனப்படும் சட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளன.

### காயம் விளைவித்தல்.

310 ஒரு நபர் மீது உடல் ரீதியான வேதனையை, நோயை அல்லது பலவீனத்தை விளைவிக்கும் ஒரு நபர், காயத்தை ஏற்படுத்தியவராகக் கருதப்படுகிறார்.

312 ஒரு நபரில் காயத்தை விளைவிக்கும் நோக்கோடு அல்லது அந்நபரில் காயம் விளைவிக்கப்படலாம் என்ற அறிவோடு யாதேனும் ஒரு செயலைப் புரிந்து, அதன் வாயிலாக அந்த நபரில் காயத்தை விளைவிக்கும் ஒருவர், விருப்புடனேயே காயம் விளைவித்தவராகக் கருதப்படுகிறார்.

313 விளைவிக்கக் கருத்தில் கொண்ட அல்லது விளைவிக்கப்படலாம் என அறிந்து கொண்டிருப்பின் கடுமையான காயங்கள் ஏற்பட்டபோது மற்றும் தம்மால் விளைவிக்கப்பட்ட காயங்கள் கடுமையாக அமையுமிடத்து அவ்வாறு சுயவிருப்போடு காயங்களை விளைவிக்கும் ஒரு நபர், விருப்புடனேயே கடுமையான காயங்களை விளைவித்தவராகக் கருதப்படுகிறார்.

316 கடுமையான காயங்களை விளைவிக்கும் ஒருவருக்கு ஏழு வருட காலம் வரையான இரு முறைகளில் ஒரு முறையிலான சிறைத் தண்டனை வழங்கப்படல் வேண்டும். அத்தகையவர் அபராதத்துக்கும் உட்படுத்தப்படல் வேண்டும். கடுமையான காயத்துக்கு ஆளானவர் ஒரு பெண் அல்லது பிள்ளை எனின் குற்றவாளிக்கு மேலதிக தண்டனை யாகக் கசையடிகளும் வழங்கப்படல் வேண்டும்.

இவ்விதமாக ஒவ்வொரு பாதகத்தினதும் தன்மை மற்றும் அத்தகைய பாதகத்துக்கு வழங்கப்படத் தக்க தண்டனை என்பன தண்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதிமுறைகளும் ஒழுங்குமுறைகளும் கிரிமினல் வழக்கு விதிகளில் அடங்கியுள்ளன.

## குற்றவியற் சட்டத்தில் இடம்பெற்றுள்ள பிள்ளைகளது உரிமைகள் பற்றிய சட்டங்கள்

குற்றவியற் சட்டம், அனைத்துப் பிரஜைகளக்கும் எதிராக நடத்தப்படும் பாதகங்கள் தொடர்பான சட்டமாக இருப்பதோடு அச் சட்டம் இடம்பெற்றுள்ள தண்டக கோவையில் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல சட்டங்கள் இடம் பெற்றுள்ளன. பிள்ளைகளைப் பாலப் பருவத்தினராகக் கருதிக் கொண்டு அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாதகமான குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் சில அடுத்து விபரிக்கப்பட இருக்கின்றன.

### பிள்ளைகளால் இழைக்கப்படும் "குற்றங்கள்" பற்றிய குற்றவியற் சட்டம்.

தண்டக் கோவையின் 75ம் பிரமாணப்படி

"8 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையால் இழைக்கப்படும் எச் செயலும் ஒரு குற்றமாகாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டக் கோவையின் 76ம் பிரமாணப்படி

"ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தமது நடத்தையின் தன்மை மற்றும் அதன் பெறுபேற்றை நிச்சயித்துக் கொள்ளல் மட்டில் போதுமான முதிர்ச்சியடைந்த அறிவைப் பெற்றிராத, 8 வயதுக்குக் கூடிய 12 வயதிலும் குறைந்த ஒரு பிள்ளையால் நிகழ்த்தப்படும் எச் செயலும் குற்றமாகாது"

தண்டக் கோவையின் மேலே காட்டப்பட்ட வியாக்கியானத்தின்படி 1-8 வயதினை யுடைய ஒரு பிள்ளை, "குற்றம்" என்றால் என்னவென விளங்கிக் கொள்ள இயலாத ஒரு பாலப்பருவத்தவரே ஆவார். மேலும் வயது 12 ஆக இருப்பினும் எந்தவொரு பிள்ளையும் தனது நடத்தையின் தன்மையை அல்லது அதன் பெறுபேற்றைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க போதுமான அளவு முதிர்ச்சிபெற்ற அறிவு இல்லாவிடின் அத்தகைய பிள்ளையும் குற்றம் எனப்படுவது எதுவென விளங்கிக் கொள்ள இயலாத ஒரு பாலப் பருவத்தவரே ஆவார்.

### விளக்கம்

5-8 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள் 8-12 வயதுக்கிடைப்பட்டபோதும் போதுமான முதிர்ச்சியான அறிவற்ற பிள்ளைகளும் பாட சாலைகளில் கற்கிறார்கள். இவ்வாறான வயதுப் பிரிவுகளை உடைய பிள்ளைகள் 'குற்றம்' என்றால் என்னவென விளங்கிக் கொள்ள முடியாமையால் அவர்கள் செய் யும் எச் செயலும் குற்றமாகக் கருதப்படமாட்டாது என தண்டக்கோவை குறிப்பிடுகிறது. எனவே இவ் வயதுப் பகுப்புகளைச் சார்ந்த பாடசாலைப் பிள்ளைகள் நிகழ்த்தும் செயல்கள், குற்றம் எனக் கருதி அவர்களுக்கு எளிய அல்லது கடுமையான தண்டனை களை வழங்குதல் நியாயந்தானா என்பதைப் பற்றிச் சிந்திக்க தண்டக்கோவையில் மேலே இடம் பெற்ற பிரமாணம் பயன்படுகிறது.

## பிள்ளைகளது 'விருப்பு' தொடர்பான கிரிமினல் சட்டம்

சில பாதகச் செயல்கள் தொடர்பான குற்றங்களின் போது அத்தகைய குற்றத்துக்குப் பாத்திரமானவரது விருப்பைப் பெற்றுக்கொண்ட பின்னரே அக் குற்றம் நிகழந்ததென நிரூபித்தல் அக்குற்றத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான விடயமாகக் கொள் ளப்படுகிறது.

**தண்டக் கோவையின் 363ம் பிரமாணப்படி** ஒரு பெண்ணுக்கு எதிராகப் பாலியல் குற்றத்தை இழைத்தல் அல்லது பலாத்காரமிழைத்தல் குற்றமாகும். எனினும் அச் செயல், அப் பெண்ணினது விருப்பத்தோடு நிகழ்த்தப்பட்டிருப்பின் அல்லது அப் பெண் அக்குற்றம் தொடர்பாக தனது எதிர்ப்பைத் தெரிவிக்காது இருந்திருப்பின் அது கிரிமினல் குற்றமல்ல.

எனினும் அத்தகைய குற்றத்துக்கு உட்படுத்தப்பட்டவள் 12 வயதிலும் குறைந்த பாலப் பருவத்தினளாக இருப்பின் அவளது விருப்பத்தோடு அல்லது விருப்பின்றி அத்தகைய ஒரு செயலைப் புரிதல் ஒரு குற்றமே என **தண்டக் கோவையின் 363ம் பிரமாணத்தில்** குறிப்பிடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டக்கோவை 363ம் பிரமாணப்படி 12 வயதிலும் குறைந்த பாலப் பருவத்தைச் சேர்ந்த ஒருவர், யாதேனும் ஒரு விடயத்தின் மட்டில் தமது விருப்பைத் தெரிவித்திருப்பினும் அத்தகைய விருப்பம் தண்டக் கோவையில் குறிக்கப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தின் மட்டிலும் ஒரு விருப்பாகக் கருதப்படமாட்டாது.

இவ்விதம் பிள்ளைகளது உடல், உள முதிர்ச்சி இன்மை காரணமாக அவர்கள் மட்டில் விசேட பாதுகாப்பையும் கண்காணிப்பையும் அளித்தல் தொடர்பாகக் குற்றவியற் சட்டம், விசேட விதிகளை விதித்திருக்கிறது. 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் பாலப் பருவத்தினர் எனக் கருதி அவர்களது குற்றங்கள் பற்றியும் அவர்களோடு தொடர்புபட்ட விடயங்களில் பிள்ளைகளது விருப்பு பற்றியும் இவ்வாறான சட்டபூர்வமான விதிகள் பாடசாலைகள் மட்டில் மிகப் பிரதானமானவையாகும். 5-12 வயதுப் பிரிவைச் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்பதால் அவ் வயதைச் சேர்ந்த ஒரு பிள்ளை யாதேனும் ஒரு விடயத்தின் மட்டில் தனது விருப்பைத் தெரிவித்த மாத்திரத்தில் அது சட்ட ரீதியான விருப்பாகாது என்பது இத்தகைய சட்டபூர்வமான விதிகளால் தெளிவாகின்றது). உதாரணமாகப் பாடசாலையால் ஒரு சுற்றுலாவில் சேர்த்துக் கொள்ளப்படும்போது அல்லது கற்கும் ஒரு பாடத்தை மாற்றுதல் போன்ற ஒரு விடயத்தின்போது 12 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையின் விருப்பம் சட்ட ரீதியான விருப்பமாகாது. அது தொடர்பாக பிள்ளையின் பெற்றோரது அல்லது பாதுகாவலரது விருப்பைப் பெற்றுக் கொள்ளல் பொருத்தமானதாகும்.

### பிள்ளைகளுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் குற்றங்கள் இயற்கைக்கு மாறான குற்றங்கள் மற்றும் அநாகரிகமான செயல்கள் தொடர்பான குற்றவியல் சட்டம்.

வயதுவந்தோரால் பல்வேறு பாலியல் கொடுமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு உடல் உள ரீதியான வேதனைகளுக்கு உள்ளான பிள்ளைகள் தொடர்பான சம்பவங்கள் எண்ணிலடங்கா. பெற்றார், சட்டபூர்வமான பாதுகாவலர், பிள்ளைகளது பொறுப்பு கையளிக்கப்பட்ட வேறு நபர்கள் ஆகியோரது பராமரிப்பில் இ,ருக்கும்போதே பாலி யல் ரீதியான சட்ட விரோத, மற்றும் அநியாயங்களில் ஈடுபடுத்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பான சம்பவங்களும் எண்ணற்றவையாகும். வீட்டில், வீதியில் வேறு பல்வேறு இடங்களில் வயதுவந்தோரால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகள் தொடர்பாக பாடசாலை என்ற நிறுவனம் புகலிடமாக அமைய வேண்டியதாக இருப்பினும் அவ்வாறு நிகழ்கின்றதா எனச் சந்தேகிக்கத் தக்கதான சம்பவங்கள் நடைபெறல் பரிதாபத்துக்குரியதே. 'பாடசாலை' எனப்படும் மாட்சிமை நிறைந்த நிறுவனமும் கற்பித்தல் என்ற உத்தம தொழிலும் அபகீர்த்திக்கு உள்ளாகும் இத்தகைய செய்திகள் பொலீஸ் மற்றும் நீதிமன்ற அறிக்கைகளில் அடிக்கடி இடம்பெறுகின்றன.

#### பத்திரிகைச் செய்திகள்

தந்தை தன் மகளைப் பலாத்காரம் பண்ணியிருப்பதாக நன்னடத்தை அறிக்கையில் கூறப்படுகிறது.

பெற்றாரிடம் சிறுமியைக் கையளிக்க மறுக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளைப் பலிகொண்ட தந்தையிடமிருந்து மாதாந்தம் 500 ரூபா வீதம் பிள்ளைகளது அனாதை இல்லத்துக்குக் கட்டணம்.

**பாடசாலை மாணவியர் இருவரது கற்பைச் சூறையாடிய ஆசிரியருக்கு 1500 ரூபா அபராதம்; 7 மாதச் சிறைத் தண்டனை!**

**7 மாணவியரைப் பலாத்காரம் பண்ணியுள்ள அதிபருக்கு மே மாதம் 3ந் திகதி வரை விளக்கமறியல்.**

**ஐம்பத்தொரு வயது நிரம்பிய அதிபர், 14 வயது மாணவியைப் பலாத்காரம் பண்ணினாராம்.**

பிள்ளைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இவ்வாறான பாலியல் கொடுமைகள் மற்றும் வேறு அநியாயங்களில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள உடந்தையாகும் பல சட்டங்கள் குற்றவியல் சட்டத்தில் இடம் பெறுகின்றன. சட்டத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அத்தகைய சில சட்டங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

## பெண்களைக் கற்பழித்தல்

பெண்களைக் கற்பழித்தல் கடுமையான பாதகச் செயலாக இருப்பதோடு அப் பாதகச் செயலுக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணின் விருப்பு, இது தொடர்பான வழக்குகளின் போது பிரதானமான விடயமாக அமைகிறதென்பது முன்னரும் விபரிக்கப்பட்டது. எனினும் குற்றத்துக்குள்ளான அவள் 12 வயதுக்குக் குறைந்த சிறுமியாக இருப்பின் அவளது விருப்போடு அல்லது அவளது விருப்பின்றி அச் செயல் நடைபெற்றிருப்பினும் அது குற்றச் செயலேயாகும்.

தண்டக் கோவையின் 363வது பிரிவின்படி" இத்தகைய ஒரு குற்றத்தின் மட்டில் குற்றவாளியாகும் ஒருவருக்கு வழங்கப்படும் 20 வருட தண்டனை இருவிதமாகும்;. அவற்;றில் ஒரு முறையிலான சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அபராதத்துக்கும் உட்படுத்தப்பட வேண்டும் எனவும் தண்டக்கோவை 368ம் பிரிவில் குறிப்பிடப்படுகிறது.

## சிறுமிகளின் கற்புக்கு ஊறு விளைவித்தல்.

"பன்னிரண்டு வயது அல்லது அதனிலும் கூடிய வயதினையுடைய மற்றும் பதினாலு வயதிலும் குறைந்த ஒரு சிறுமியோடு பாலியல் ரீதியான உடலுறவில் ஈடுபடும் அல்லது ஈடுபட எத்தனிக்கும் ஒருவர் அக்குற்றத்தின் மட்டில் குற்றவாளியாக்கப்பட வேண்டும். அவருக்கு இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலத்தைக் கொண்ட இருமுறைகளில் ஒரு முறையிலான சிறைத்தண்டனை வழங்கப்படல் வேண்டும் அத்தோடு மேலதிக மாகக் கசையடிகளைக் கொண்ட தண்டனையும் அளிக்கப்படலாம்"

## தண்டக் கோவையின் 364ம் பிரிவு

**இயற்கைக்கு முரணான குற்றங்கள்** "ஆணொருவர் ஒரு பெண்ணோடு அல்லது ஒரு விலங்கோடு இயற்கைக்கு முரணாகத் தம் சுயவிருப்போடு பாலியல் ரீதியிலான உடலுறவில் ஈடுபடுவாரேயாயின் அத்தகைய நபருக்குப் பத்து வருட காலம் வரையான இரு முறைகளில் ஒரு முறையிலான சிறைத்தண்டனை வழங்கப்படல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டக் கோவையின் 365ம் பிரிவு

**ஆண்களுக்கிடையே உள்ள பாரதூரமான அருவருப்பான செயல்கள்**

"பகிரங்கமாக அல்லது அந்தரங்கமாக வேறு ஓர் ஆணுடன் பாரதூரமான காமச் செயலில் ஈடுபடும் அல்லது அத்தகைய ஒரு செயலில் மட்டில் பங்குதாரராகும் அல்லது அத்தகைய ஒரு செயலை ஒரு ஆணைக் கொண்டு செய்விக்கும் அல்லது செய்விக்க எத்தனிக்கும் ஓர் ஆண் அச்செயல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படல் வேண்டும். அத்தகையவருக்கு இரண்டு வருடங்களுக்கு மேற்படாத இரு முறைகளில் ஒரு முறையிலான சிறைவாசத்தை அல்லது அபராதத்தை அல்லது அவ்விரு தண்டனைகளையும் விதித்தல் வேண்டும். மேலும் கசையடிகளைக் கொண்ட தண்டனைக்கும் அவர் உட்படுத்தப்படல் வேண்டும்.

**தண்டக் கோவையின் விளக்கம் 365ம் பிரிவு.**

குற்றவியற் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள மேலே கூறப்பட்ட சட்டங்கள் பாடசாலைப் பிள்ளைகளது உரிமைகள் மட்டில் என்ன பங்களிப்பை வகிக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுப் பின்வரும் சில உதாரணங்களின் மீது எமது கவனத்தைச் செலுத்துவோம்.

உதாரணம் இலக்கம்: 1

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஆசிரியர் பிணையில் விடப்பட்டார்.

"உம்மைப் போன்ற நபர்கள் சமூகத்துக்கே விரோதமானவர்கள்;. ஓர் ஆசிரியரான நீர் இதனை அறிய வேண்டாமா? எய்ட்ஸ் போன்ற நோய்கள், இவ்விதமான பாலியல் விபச்சாரத்தால் உண்டாகும் என்பதை நீர் அவறியாதரோ? நீர் பிணையில் செல்ல அனுமதிக்கப்படவும் தகுதியற்றவர். எனினும் பிணையை அனுமதிக்கச் சட்டபூர்வமாக முடியுமெனபதால் உம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்கிறேன்" நீதிபதியால் இவ்விதமாக எச்சரிக்கப்பட்டவர் 10ம் ஆண்டு மாணவன் ஒருவனோடு பாலியல் ரீதியான உறவில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்து ஓர் ஆசிரியரேயாவார்.

பணப் பிணையாக 3500 ரூபாவும் ஆள் பிணையாக ஓர் அரசாங்க சேவையாளரும் தனிப்பட்ட பிணையாகப் 10,000 ரூபாவும் விதித்த நீதிபதி இரு வாரங்களுக்கு ஒரு தடவை ஞாயிற்றுக் கிழமைகளில் முற்பகல் 9-12 இடையில் பொலீசில் சமூகமளிக்கம்படியும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கட்டளையிட்டார்.

(திவயின 14-01-1993)

உதாரணம் இலக்கம்: 2

வித்தியாசமான ஒரு பாடத்தைக் கற்பித்த ஆசிரியர் விளக்கமறியலில்

மாலைப் பொழுதினில் பாடசாலை மாணவருக்கு மேலதிக வகுப்புகளை நடத்தும் ஓர் ஆசிரியர் கற்பித்தல் முடிவடைந்த பின்னர் ஏனைய மாணவர்களை அவர்களது இல்லங்களுக்கு அனுப்பிவிட்டு ஒரு மாணவனுக்கு வித்தியாசமான வேறு ஒரு பாடத்தைக் கற்பிக்க எத்தனித்த சம்பவம் தொடர்பாகப் பொலீசாரால் சந்தேகத் தின்பேரில் கைதானார் எனத் தகவல் கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராகப் பெற்றார் பொலீசில் செய்த முறைப்பாட்டுக்கிணங்க அது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்துக்குள்ளாகிய மாணவனின் வயது சுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 எனவும் காயங்களுக்கு ஆளான சிறுவன் தற்போது கொழும்பு தெற்குப் பெரியாஸ பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சிகிச்சையளிக்கப்படுவதாகவும் பொலீசார் கூறுகின்றனர். சந்தேக நபரான ஆசிரியர் முன்னரும் ஒரு மாணவனுக்கு இவ்விதமான ஒரு பாடத்தை கற்பிக்க எத்தனித்துப் பொலீசாரிடம் மாட்டிக் கொண்டதாகப் பொலீஸ் விசாரணகளின்போது தெரிய வந்துள்ளது.

(திவயின 10.02.1993)

உதாரணம் இலக்கம்: 3

**ஆசிரியர் மாணவியைக் கற்பழித்தமை காரணமாக எதிர்ப்புக் கோசம்.**

ஐந்தாம் ஆண்டு வகுப்பிலே கற்கும் பத்து வயதுடைய பாடசாலை மாணவியைக் கற்பழித்ததாகக் கூறப்படும் ஆசிரியரை எதிர்த்து...... கல்வி வட்டாரத்தைச் சோந்த ஒரு வித்தியாலய மாண மாணவியர் சுமார் ஆயிரம்பேர் வரை நேற்றைய முன்தினம் தொடக்கம் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வித்தியாலய வளவில் ஆர்ப்பாட்ட இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். கொடுமைக்கு ஆளான சிறுமியை விசாரித்தபோது அனைத்தும் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. பாடசாலையின் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தைக் கூட்டுதல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை விடப் பட்ட பின்னர் வீடு நோக்கிச் செல்லும்போது இக் கொடுமை நடத்தப்பட்டதாகவும் சம்பவம் தொடர்பாக மாகாணக் கல்வி அலுவலகத்தில் விசாரணையை மேற்கொண்ட கல்வி அதிகாரி கூறுகிறார்.

(லங்காதீப, 16. 09. 1993)

பெற்றார் அல்லது பாதுகாவலர் பிள்ளைகளை விட்டுச் செல்லல் மற்றும் திக்கற்ற நிலைக்கு ஆளாக்குதல் தொடர்பான சட்டம்.

எவரேனும் ஒருவர், 12 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையின் தந்தையாக அல்லது தாயாக அல்லது பாதுகாவலராக இருக்கும் பட்சத்தில் அப்பிள்ளையை முழுமையாகவே கைவிட்டுவிடும் நோக்குடன் யாதேனும் ஓர் இடத்தில் விட்டு விடுவாரேயாயின் அல்லது கைவிட்டுச் செல்வாரேயாயின் அவர் மட்டில் 7 வருடங்கள் வரையான காலத்தைக் கொண்ட, இரு முறைகளில் ஒரு முறையிலான சிறை வாசத்தை அல்லது அபராதத்தை அல்லது அவ் விரு தண்டனைகளையும் விதித்தல் வேண்டும். அவ்வாறு கைவிடப்படுவதன் காரண மாகப் பிள்ளையின் மரணம் சம்பவிக்குமேயாயின் கொலைக் குற்றத்தின்பேரில் அல்லது கைமோசக் கொலையின் பேரில் குற்றஞ் சாட்டப்பட்டவர் மீது வழக்குத் தொடரலாம்.

**தண்டக் கோவை 308 பிரிவு**

குற்றச் செயல்கள் ஊடாக நிகழத்தக்க குற்றங்களில் இருந்து பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை அமுலாக்குதல்.

குற்றவியற் சட்டத்தை பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான காரணியாக மிக வலுவுள்ளதாகப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு அச் சட்டத்தையும் அச் சட்டத்தை அமுலாக்கும் நடைமுறைகளையும் சம்பந்தப்பட்டவர்களில் அறிவூட்டல் அவசியமே. மேலும் சட்டத்தை அமுலாக்கும் பொலீஸ், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் பிள்ளைகளுக்கான நீதிமன்றம் ஆகிய இயக்கங் களின் நடைமுறைகள் தொடர்பாக அறிவூட்டப்படல் அவசியமாகும். பிள்ளைகள் தொடர்பான அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சம்பந்தப்பட்ட நிறுவனங்க ளோடும் வேறு இயக்கங்களோடும் ஒத்துழைப்போடு பணியாற்றல் அவசியம். இந்நூலின் இறுதி ஆய்வுப் பொருளில் பொலீஸ், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம், பிள்ளைகளுக்கான நீதிமன்றம் போன்ற நிறுவனங்கள் மற்றும் அவற்றின் நடைமுறைகள் என்பன சுருக்கமாக விபரிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 9

# பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான சட்டங்கள்

பெற்றோர், ஆசிரியர்கள், வயது வந்தோர் ஆகியோர் பல்வேறு காரணங்களுக்காக பாலப் பருவத்தினரான சிறுவர் சிறுமியரைப் பல்வேறு விதமாகத் தண்டிக்கிறார்கள். கண்டித்தல் போன்ற சிறு தண்டனைகளை விடக் கடுமையான காயங்கள் ஏற்படத்தக்க தண்டனைகள், இம்சித்தல், முறையற்ற தடுத்துவைத்தல் போன்ற குற்றங்களாகக் கருதத் தக்க தண்டனைகளும் அவற்றினிடையே காணப்படுகின்றன. பிள்ளைக ளைத் தண்டித்தல் பிள்ளைகளின் நன்மைக்காகவே எனச் சில பெற்றோர் வாதாடுகின்றனர். பெரும்பாலும் தண்டனை வழங்கப்படுவதன் காரணமாகப் பிள்ளைகள் மனமுறிவு களுக்கும் அவமதிப்புகளுக்கும் கொடூரமான சித்திரவதைகளுக்கும் ஆளாகும் சந்தர்ப்பங்களோ ஏராளம். எனவே தண்டித்தலின் குறிக்கோள் எதுவாக இருப்பினும் பெரும்பாலான தண்டனைகள் வாயிலாக வயது வந்தோர் பிள்ளைகளது உரிமைகளை மீறுகிறார்கள் அல்லது பிள்ளைகளது உரிமைகளை அபகரித்துக் கொள்கிறார்கள்.

எனவே பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்டத்தின் மூலம் பெறத்தக்க உதவி பற்றிய ஆய்வின்போது பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பாக சட்டத்தின் தன்மை என்னவென ஆராய்தல் பயனுடையதாகும்.

## பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான வழக்குகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளும் நீதிபதிகளின் கருத்துகளும்

பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர் பான விடயங்களில் சட்டத்தின் நிலைப்பாடு எதுவென இனம் காணுகையில் அவ் விடயத்தோடு தொடர்புபட்ட வழக்குகளின்போது நீதிமன்றம் செயலாற்றிய விதம் மற்றும் நீதிபதிகளது கருத்துக்கள் என்பவற்றை ஆராய்தல் பயனுடையதாகும்.

பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான சம்பவங்களளை மையமாகக் கொண்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உள்ளான பல வழக்குகள் பற்றிய தகவல்களை இலங் கையிலும் பெற்றுக்கொள்ளத் தக்கதாக இருப்பினும் இவ்வாறன வழக்குகளோடு சம்பந்தப்பட்ட சட்ட அறிக்கைகளை மற்றும் எழுத்து மூலமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் சிரமமாக இருக்கிறது.

எனவே இத்தகைய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் தீர்ப்பளிக்கப்பட்ட சில வழக்குகளோடு தொடர்புபட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் நீதிபதிகளால் வெளியிடப்பட்ட கருத்துகள் என்பன மட்டும் இங்கே இடம்பெற்றுள்ளன.

### பாடசாலையில் ஒழுக்கத்தைப் பேணும் பொருட்டு மாணவர்களைத் தண்டித்தல்.

ஐக்கிய இராச்சியத்திலே சொப்ஷயரில் நியுசெட் ஆரம்பப் பாடசாலையின் ஒரு மாணவன் அப் பாடசாலைத் தலைமையாசிரியரால் உடல் ரீதியான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டதைக் காரணங் காட்டி அம்மாணவனது தந்தையால் தலைமையாசிரி யருக்கு எதிராகத் தொடரப்பட்ட அவ் வழக்கைப் பற்றிய விபரம் வருமாறு:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைத் தவணைக்குள் பாடசாலையில் அல்லது பொது இடங்களில் மாணவர்களின் புகைத்தலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் பிற்பகல் வேளையில் பாடசாலை விடப்பட்ட பின்பு, இரு மாணவர்கள் புகைபிடித்துக் கொண்டு வீதியில் உலாவுவதைக் கண்ட மாணவ தலைவர்கள் அதனைத் தலைமையாசிரியரிடம் முறையிட்டனர். அம் மாணவர்கள் இருவரும் பாடசாலைச் சட்டத்தை மீறிய குற்றத் துக்காக அவர்களுக்குத் தண்டனையாகப் பிரம்படிகளை வழங்கத் தலைமையாசிரியர் முடிவு செய்தார்.

அவ்விருவரில் ஒரு மாணவன் 'பெருந்தன்மையோடு' தண்டனையை கீழ்ப்படிவாக ஏற்றுக் கொண்டான் எனினும் மற்றைய மாணவன் அத் தண்டனையை எதிர்த்தான். தனது தந்தை தனக்குப் புகைப்பதற்கான அனுமதியை வழங்கியிருப்பதாகவும் தந்தை தனக்குத் தந்த அதிகாரத்தையும் மீறிச் செல்லத் தக்கதாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்குத் தன்னால் கீழ்ப்படிய முடியாதெனவும் இதனடிப்படையில் தன்னைத் தண்டிக்கத் தலைமையாசிரியருக்குச் சட்ட ரீதியான உரிமை இல்லையெனவும் அம் மாணவன் வாதிட்டான். மேலும் தான் பாடசாலைக்கு வெளியே பாடசாலை நேரத்தின் பின்பே புகைபிடித்ததாகவும் அவன் கூறினான். மாணவனது விரோதத்தைக் கவனத்தில் கொள்ளாத தலைமையாசிரியர், அவனைப் பிடித்துக் கொள்ளுமாறு இரு ஆசிரியர்களைப் பணித்து அவனைப் பிரம்பினால் அடித்துத் தண்டித்தார்.

தமது பிள்ளைக்கு உடல் ரீதியான தண்டனை வழங்கியதாகக் குற்றஞ் சாட்டி அம் மாணவனது தந்தையால் தலைமையாசிரியருக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அத் தீர்ப்புக்கு மாறாக அவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரணை செய்த நீதியரசர் சர்ஹேவட் அவர்கள் தமது தீர்ப்பின்போது குறிப்பிட்ட கருத்துகள் வருமாறு.

பாடசாலைத் தவணைக்குள் பாடசாலையில் அல்லது பொது இடங்களில் பாடசாலை மாணவர்கள் புகைத்தலைத் தடைசெய்தல் பாடசாலையால் விதிக்கப்பட்ட சட்டமாக உள்ளது. அச்சட்டத்தை அறிந்திருந்த இம் மாணவன் வேண்டுமென்றே அதனை மீறியதன் மூலம் ஒரு குற்றம் புரிந்துள்ளான். அக் குற்றத்துக்கான தண்டனையாகத் தலைமையாசிரியர் பிரம்படிகளை வழங்கியுள்ளார். பாடசாலைச் சட்டத்தை மீறியமைக்காக விதிக்கப்பட்ட நியாயமான தண்டனையே அது. எனவே நீதிமன்றம், மாணவனது தந்தையால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டைத் தள்ளுபடி செய்கிறது.

(அரசாங்கம் எதிர் நியுபோட் சொப்ஷயரில் ரைட் (1929) 2 கே பி 416)

### தண்டித்தல் தொடர்பாக ஆசிரியர்களுக்குள்ள சட்டபூர்வமான உரிமைகள்

1950ல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஸ்பயர்ஸ் எதிர் வொரிங்டன் கூட்டுத் தாபனம் என்ற வழக்கோடு தொடர்புபட்ட வழக்கில் நீதிமன்றம் பின்பற்றிய நடைமுறைகள் பின்வருமாறு

வொரிங்டன் இடைநிலைப் பாடசாலை மாணவியாகிய பதின்மூன்று வயதுடைய ஈவா ஸ்பயர்ஸ் அப்பாடசாலைத் தலைமையாசிரியையால் அங்கீகரிக்கப்பட்ட சீருடைக்குப் பதிலாக வேறு ஓர் உடையை அணிந்து பாடசாலைக்கு வந்தாள். அவள் ஒரு ஜீன்ஸ் காற்சட்டையையே அணிந்திருந்தாள். மாணவியரது சீருடை தொடர்பாகப் பாடசாலை யால் அனுமதிக்கப்பட்டிருந்த விதிமுறை நடைமுறையில் இருந்தபோதும் ஈவா அவ்வாறான உடையோடு பாடசாலைக்கு வந்ததால் பாடசாலையின் ஒழுக்கக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டை மீறினாள். தமது மகள் இரத்தக் கொதிப்புக் காய்ச்சலால் பீடிக்கப் பட்டுள்ளதாகவும் வைத்தியர் அவளது சிறுநீரகங்களை உஷ்ணமாக வைத்திருக்கு மாறு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் எனவே பாடசாலையால் அங்கீகரிக்கப்பட்ட சீருடைக்குப் பதிலாக ஜீன்ஸ் காற்சட்டை அணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப் பதாகவும் அவளது தாய், அச் செயலை நியாயப்படுத்தக் கூறினாள். அது தொடர்பாக ஒரு வைத்திய அத்தாட்சியைச் சமர்ப்பிக்குமாறு தலைமையாசிரியை கூறியபோதும் அத்தகைய ஒரு சான்றிதழைச் சமர்ப்பிக்க அவளது தாய் முன்வரவில்லை. பாடசாலை யால் நடத்தப்படும் வைத்தியப் பரிசோதனைக்குத் தோற்றவும் அவள் இணங்காது நழுவிக் கொண்டாள்.

இது தொடர்பாக மற்றொரு நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்த தலைமை யாசிரியை, ஈவா, ஜீன்ஸ் அணிந்து பாடசாலைக்குச் சமுகமளிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவளை நோக்கிப் பின்வருமாறு கூறினார். "நல்ல பிள்ளையாக வீட்டுக்குப் போய்ப் பொருத்தமான உடையோடு வாரும் அவ்வாறு முடிந்தால் மட்டுமே நீர் பாடசாலைக்கு வர முடியும்." இவ்வாறு கூறும் போது அம் மாணவி, மீண்டும் வீட்டுக்குச் சென்று பிற்பகலிலே மறுபடியும் பாடசாலைக்கு வருவதுண்டு. தலைமை யாசிரியை வழமைபோல் எச்சரித்து, மீண்டும் அவளை வீட்டுக்கு அனுப்பிவிடுவார். இவ்வாறாகத் தொடர்ந்து சில மாதங்களாக நடைபெற்றது. மகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய சட்டபூர்வமான தம் கடமையை மீறியது தொடர்பாக வொரிங்டன் கவுன்ரி கவுன்சில் மாணவியின் தந்தைக்கு எதிராக ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது. விசாரணையின் பின்பு குற்றவாளியாக்கப்பட்ட அவருக்கு நீதிமன்றம், பத்து சிலிங் அபராதமாக விதித்தது.

மாணவியின் தந்தை நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு முறையீட்டைச் சமர்ப்பித்தார். தாம் தமது மகளைத் தொடர்ந்து பாடசாலைக்கு அனுப்பியதாகவும் தலைமையாசிரியையின் பிடிவாதமானதும் கடுமையானதுமான போக்குக் காரணமாக மகளது பாடசாலைக்குச் சமூகமளித்தல் தடைப்பட்டதாகவும் கற்றலுக்கான வாய்ப்பை அவள் இழந்ததாகவும் தந்தை குறிப்பிட்டார். இது தொடர்பாகத் தொடர்ந்தும் விசாரணையை மேற்கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம், முன்னைய நீதிமன்றத் தீர்ப்பினை அங்கீகரித்துத் தீர்ப்பளித்தது. அத் தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் கொடாட் பிரபு, இவ்வாறு குறிப்பிட்டார். "அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களின்படி ஒரு தலைமையாசிரியர் ஒரு பாடசாலையின் உள்விவகாரத்தை ஒழுங்குபடுத்தல், முகாமைத்துவம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருக்கிறார். இதனடிப்படையில் ஒரு பாடசாலையின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான உரிமையும் அதிகாரமும் தெளிவாக ஒரு தலைமையாசியரிலேயே தங்கியுள்ளன. ஒரு பாடசாலையிலே ஒழுக்கத்தைக் காத்தல், நிச்சயமாகவே தலைமையாசிரியராலே நிறைவேற்றப்பட வேண்டிய பணியாகும். இதன்படி அம் மாணவியைப் பாடசாலையிலே அனுமதிக்க மறுக்கும் உரிமை தலைமையாசிரியருக்கு உண்டா என்பதே அடிப்படை வினாவாக அமைகிறது. இத் தலைமையாசிரியை அது பற்றிய உரிமையைக் கொண்டவராகவே விளங்குகிறார். அந்த அடிப்படையிலேயே அவர் செயற்பட்டிருக்கிறார் எனவும் அவர் தமது கடமையைச் செவ்வனே நிறைவேற்றி யிருக்கிறார் எனவும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். அத்தகைய ஓர் உடையை அணிந்து செல்பவரைப் பாடசாலை அனுமதிக்காது என்பதைத் தெரிந்திருந்தும் அச் செயலைப் புரிந்த பெற்றோர் குற்றவாளிகளே ஆவர்"

(ஸ்பர்ஸ் எதிர் வொரிங்டன் கவுன்ரி கவுன்சில் 1945)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வழங்கப்படும் தண்டனைகள் நியாயமானவையாக இருத்தல் வேண்டும்.

ஓர் ஆசிரியரால் தடியினாலும் தடித்த கயிற்றினாலும் 2 1/2 மணித்தியாலங்களாத் தாக்கப்பட்ட காரணத்தால் மரணித்த ஒரு பாடசாலை மாணவன் தொடர்பான ஒரு வழக்கின்போது பிரதம நீதியரசர் கொக்பான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கோபம் அல்லது பகைமை காரணமாக உடல் ரீதியான தண்டனை வழங்கல் அல்லது அத்தகைய தண்டனைகள் சாதாரண தன்மைகளையும் மீறிச் செல்லத்தக்கவாறு கடுமையாக அமைதல் அல்லது அத்தகைய தண்டனை பிள்ளையால் தாங்கிக் கொள்ள இயலாதவாறு கடுமையாக அமைதல் அல்லது தண்டிப்பதற்காகக் கையாளும் உபகரணங்கள் அல்லது தண்டனையின் அளவு வரையறையை மீறிச் செல்வதன் காரணமாகப் பிள்ளையின் ஓர் உறுப்பில் அல்லது உயிரில் சேதம் நிகழல் போன்ற விடயங்கள் தொடர்பாக தண்டிப்பவர், சட்டத்தின் முன்பாகக் குற்றமிழைக்கிறார். அத்தகைய குற்றம் காரணமாக மரணம் சம்பவிக்குமேயாயின் அது மனிதக் கொலை என்ற குற்றமேயாகும். இவ்வழக்கிலே ஆசிரியர் மனிதக் கொலை என்னும் குற்றத்தின் மீது குற்றவாளியாகிறார்"

(அரசு எதிர் ஹொப்லி 1860)

பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான மேலே இடம்பெற்ற வழக்குகளில் போன்று வேறு வழக்குகளிலும் நீதிமன்றம் செயற்பட்ட விதம், நீதிபதிகளால் குறிப்பிடப்பட்ட கருத்துகள் என்பவற்றை நோக்கும்போது பிள்ளைகளைத் தண்டித்தல் தொடர்பான சட்டத்துக்கு அடிப்படையாகும் கோட்பாடுகளை இவ்வாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

பிள்ளைகள் நலன் கருதி பெற்றோர், பாதுகாவலர் ஆகியோர் பிள்ளைகளைத் தண்டிப்பதற்கான சட்டபூர்வமான உரித்துடையோர் ஆவர்.

வீட்டிலே பிள்ளைகள் மட்டில் பெற்றார் கொண்டுள்ள பெற்றாரின் அதிகாரம் மற்றும் பெற்றாரின் பொறுப்புகள் என்பன பாடசாலையிலே ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் பெற்றோரைப் போன்று (Loco Parentis) பிள்ளைகளது நலன் கருதி நடவடிக்கை எடுக்க சட்டத்தால் அதிகாரமும் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

ஆசிரியர்கள் தாம் உரித்தாக்கிக் கொண்டுள்ள இச் சட்டபூர்வமான அதிகாரத்தின்படி பிள்ளைகளது நலனைக் குறிக்கோளாகக் கொண்டு பிள்ளைகளைத் தண்டிப்பதற்கான சட்டபூர்வமான உரிமை உடையவர்களேயாவர்.

எனினும் பிள்ளைகள் மீது வழங்கப்படும் தண்டனைகளோ எப்போதும் நியாயமான தண்டனைகளாக இருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட வரையறை மீறிப் பிள்ளைகளைத் தண்டிக்கப் பெற்றாரைப் போன்றே ஆசிரியர்களுக்கும் சட்டபூர்வமான உரிமை இல்லை.

### பிள்ளைகளுக்கு உடல் ரீதியான தண்டனைகளை (Corporal Punishment) வழங்குதல் பற்றிய சட்டம்

பிள்ளைகளது நடத்தையில் விருத்தி மற்றும் ஒழுக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக அவர்களது நலனைக் கருத்தில் கொண்டு தண்டனை வழங்கப் பெற்றார், ஆசிரியர், சட்டபூர்வமான பாதுகாவலர் ஆகியோருக்குச் சட்டப்படி உரிமை இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான தண்டனைகள் நியாயபூர்வமாக இருக்க வேண்டியதோடு பொதுவாக வழக்கிலுள்ள சட்டத்தின் வரையறைகளை மீறிச் செல்லாதிருக்க வேண்டும் என்பது தெளிவான விடயமாகும். பாடசாலை மாணவர்களுக்கு தண்டனை வழங்குகையில் ஆசிரியர்கள் கொண்டுள்ள சட்டபூர்வமான அதிகாரமும் அவ்வதிகாரத்தைக் கையாளும் விதமும் மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்படுகின்றன.

எனவே அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலைகளில் கற்கும் மாணவ மாணவியர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்கும்போது மிகுந்த கவனத்தோடு செயற்படல் அவசியம். அதிபர்களும் ஆசிரியர்களும் தம் மாணவ மாணவியர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்க ஏதுவாகும் காரணிகள் எவையெனவும் அத்தகைய தண்டனைகளை வழங்கும் முறைகள் எவையெனவும் நிலவும் கருத்துகள், நடைமுறைகள் என்பன நாட்டுக்கு நாடு வேறுபடுவதோடு ஒரே நாட்டிலாயினும் காலத்துக்குக் காலம் வேறுபடுவதுமுண்டு.

எனவே உடல்ரீதியான தண்டனைகளை வழங்குதல் தொடர்பாக வழக்கிலுள்ள சட்டபூர்வமான ஆதாரங்களை நோக்கும்போது செல்லுபடியாகும் சட்டம், மற்றும் இவ்விடயம் தொடர்பாக சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள வேறு பிரமாணங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளல் அவசியமே.

## உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் தொடர்பான குற்றவியற் சட்டம்

எக்காரணத்தின் பொருட்டேனும் பிள்ளைகளுக்கு எத்தகைய உடல் ரீதியான இம்சைகளைப் புரிய எவருக்கேனும் உரிமையில்லை. அத்தகைய இம்சைகள் காரணமாக ஒரு பிள்ளையில் கடுமையான காயம் அல்லது சிறுகாயம் அல்லது பிள்ளையின் மரணம் சம்பவித்தால் அவ்வாறு தண்டித்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் குற்றவியற் சட்டம் உரிய விதிகளை விதித்தள்ளது.

ஒரு பிள்ளைக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதன் மூலம் விருப்பத்தின் பேரில் காயங்களை விளைவிக்கும் குற்றத்தை நிகழ்த்தியிருப்பின் அவ்வாறு குற்றமிழைத்தவருக்கு எதிராக வழக்குத் தொடரலாம் என முன்னர் குறிப்பிடப்பட்டது. காயத்துக்கு உள்ளான நபர் ஒரு பிள்ளையாக இருப்பின் காயத்தை விளைவித்த குற்றத்துக்காக அமுலில் உள்ள பொதுவான தண்டனைகளை விடவும் மேலதிகமாகக் கசையடிகளை வழங்கவும் குற்றவியற் சட்டத்தில் பிரமாணங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

## பிள்ளைகள் மீது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் தொடர்பான விசேட சட்டங்கள்

பிள்ளைகள் மீது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குகையில் விசேட கவனத்தோடு செயற்படவேண்டும் என்பதை உணர்த்தும் வேறு சில சட்டங்களும் கட்டளைகளும் பின்வருமாறு:

1. 1939ம் ஆண்டின் 43ஆம் இலக்கம் கொண்ட பிள்ளைகள் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 29 (1) ம் பிரமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளை அல்லது 14-16 இடைப்பட்ட வயதினையுடைய ஒரு இளைஞர் புரிந்த எந்தவொரு குற்றத்தின் மீது நீதிமன்றம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்க நேரிடினும் அப் பருவத்தையுடைய ஒருவர் மீது உடல் ரீதியான தண்டனை விதித்தல் சட்ட விதிகளுக்கமைய நிகழ வேண்டும். அப்பிரமாணங்களுக்கமைய குற்றவாளியாக்கப்பட்ட அப் பருவத்தைச் சேர்ந்தவர் ஓர் ஆணாக இருப்பின் விதிக்கப்படும் உடல் ரீதியான தண்டனையானது ஒரு பிரம்பினால் அல்லது தடியினால் அளிக்கப்படும் 6 அடிகளால் வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அத்தகைய தண்டனை கூட நீதிமன்றத்தின் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும். வயதுக்கு வராத ஒருவரது பெற்றார் அச்சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்திலே சமூமளிக்க விரும்புவாராயின் குறிப்பிட்ட அத்தண்டனை அப்பெற்றார் முன்னிலையில் அளிக்கப்பட வேண்டும்.

2. 1939ம் ஆண்டின் 51ம் இலக்கம் கொண்ட உடல் ரீதியிலான தண்டனைகள் பற்றிய கட்டளைச் சட்டம்.

பிள்ளைகளுக்கு உடல் ரீதியிலான தண்டனைகளை வழங்கும்போது விசேட கவனத்தோடு செயல்புரிய வேண்டியதன் முக்கியத்துவம், உடல் ரீதியிலான தண்டனைகள் பற்றிய கட்டளைச் சட்டத்தாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சில கடுமையான குற்றங்கள் தொடர்பாக கசையடிகளை வழங்குவதால் தண்டிப்பதாயின் சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் மட்டில் ஒரு சிறிய பிரம்பினால் அல்லது தடியினால் 6 அடிகளுக்குக் குறைந்த எண்ணிக்கையான அடிகளை அளிக்க வேண்டும் என இக் கட்டளையின் 2ம் 3ம் பிரமாணங்களில் குறிக்கப்பட்டுள்ளது. வயது வந்தவர் மீது எனின் அளிக்கப்பட வேண்டிய அடிகளின் எண்ணிக்கை 24 ஆகும். சிறைச்சாலைச் சட்டதிட்டதிட்டங்களை மீறும் குற்றவாளியான 14-16 வயதினையுடைய ஒரு பிள்ளைக்கு 12க்கு மேற்படாத அடிகளைத் தண்டனையாக அளிக்க வேண்டும். அதே குற்றத்தை இழைத்த வயதுவந்தவர் எனின் அவருக்கு 24 அடிகளை அளிக்கச் சட்டம் அனுமதிக்கிறது.

3. 1929ம் ஆண்டின் அரசாங்கப் பாடசாலைகள் தொடர்பான யாப்பின் 23வது பிரமாணம்

மாணவர் மீது உடல் ரீதியான தண்டனை தலைமையாசிரியரால் மட்டுமே வழங்கப்பட வேண்டும். எனினும் ஒரு கலவன் பாடசாலையாயின் மாணவிகளுக்கு தண்டனை வழங்கல், ஆண் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது.

உடல் ரீதியான தண்டனை வழங்கப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் என்ன குற்றத்துக்காக அத் தண்டனை வழங்கப்பட்டது என்பது பற்றியும் தண்டனையாக அளிக்கப்பட்ட பிரம்படிகளின் எண்ணிக்கை பற்றியும் ஓர் அறிக்கையைத் தயாரித்து வைக்க வேண்டும்.

எந்தவொரு குற்றத்துக்காகவும் அளிக்கப்படும பிரம்படிகளின் எண்ணிக்கை நான்குக்கு மேற்படாது இருக்க வேண்டும். உள்ளங்கையில் மட்டுமே அவ்வாறான பிரம்படிகள் இடம் பெறல் வேண்டும். தண்டனை அறிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே பிரம்பு வெளியே எடுக்கப்படல் வேண்டும். அப் பிரம்பு, ஆசிரியரது மேசை மீது அடிக்கடி வைக்கப்படல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உடல் ரீதியான தண்டனை வழங்கப்படல் தொடர்பாகத் தற்போது அமுலில் உள்ள சுற்றுநிருபம் பின்வருமாறாகும்.

**1961ம் ஆண்டின் 26ம் இலக்கச் சுற்றுநிருபம்**

எனது இலக்கம்: என். எஸ். ஏ.
ஏ. / 158
21. ஜூலை 1961,
கல்வித் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு - 02

அரசாங்க மற்றும் பணிப்பாளர்களது நிருவாகத்துக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கு

**பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்கல்.**

உங்களது ஆசிரியர் குழாத்தின் அனைவரிடையேயும் விநியோகிப்பதற்காக உடல் ரீதியான தண்டனை வழங்கல் தொடர்பான ஈ. 36ம் இலக்கம் மற்றும் 21. 12.1927ம் திகதி கொண்ட சுற்று நிருபத்தில் இருந்து பெற்றுக் கொண்ட ஒரு பகுதி இத்தோடு அனுப்பபட்டுள்ளது.

டீ. ஜீ. குலதுங்க
கல்விப் பணிப்பாளருக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் ரீதியான தண்டனைகள் தொடர்பான ஈ. 36,ம் இலக்கம் கொண்ட 21. 12.1927 திகதி சுற்றுநிருபத்தில் இருந்து பெறப்பட்ட பகுதி.

உடல் ரீதியான தண்டனைகளைக் கைக்கொள்ளாது ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணுவதற்கு முடியாமை ஓர் ஆசிரியரது திறமையின்மையைத் தெட்டத் தெளிவாகக் காட்டும் அடையாளமே என்பதை ஆசிரியரிடம் நினைவூட்ட விரும்புகிறேன். தற்போது கூட கல்வியானது தமக்கு நூதனமானதெனக் கருதும் தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் விசேடமாகப் பொருத்தமற்றதேயாகும்.

மாணவரது பாடசாலை வரவைத் தவிர்க்கத் தக்கதான அல்லது பாடசாலை மட்டில் பெற்றார் கொண்ட நல்லபிப்பிராயத்தில் பங்கம் விளைவிக்கத் தக்கதான உடல் ரீதியான தண்டனைகளைப் பாடசாலைகளில் வழங்காதீர்கள்.

உடல் ரீதியலான தண்டனைகள் தொடர்பான பின்வரும் கட்டளைகளகளை கவனமாகப் பின்பற்றல் வேண்டும்.

(அ) பின்வரும் விடயங்கள் மட்டில் அல்லாதவிடத்து உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் கூடாது.

(1) பாரதூரமான தகாத நடத்தை.

(11) வேறு தண்டனைகளை வழங்கிய போதும் எப்பெறுபேற்றையும் பெற இயலாதவாறு தொடர்ந்தும் சோம்பலோடு காலங்கழித்தல், கற்றலின் மட்டில் கவனஞ் செலுத்தாமை போன்ற பொதுவான விடயங்களுக்காக உடல் ரீதியான தண்டனை அளித்தல் கூடாது. தலைமையாசிரியர் மட்டுமே உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் வேண்டும்.

(ஆ) எனினும் கலவன் பாடசாலைகளில் கற்கும் மாணவியர்களுக்கு உதவி ஆசிரியைகள் மட்டுமே உடல் ரீதியான தண்டனைகளை அளித்தல் வேண்டும். ஆண் ஆசிரியர்கள் மாணவிகள் மீது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் முற்றாகவே தடைசெய்யப்படுகிறது.

(இ) உடல் ரீதியிலான தண்டனைகள் வழங்கப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதன் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளும் விசேடமான புத்தகத்தில் பிள்ளையால் செய்யப்பட்ட குற்றம் மற்றும் அளிக்கப்பட்ட அடிகளின் எண்ணிக்கை என்பவற்றைக் குறித்தல் வேண்டும்.

(ஈ) மாணவ மாணவியரது உள்ளங் கைகளில் பிரம்பினால் உடல் ரீதியிலான தண்டனை அளிக்கப்பட வேண்டும். அவ்வாறான அடிகளின் எண்ணிக்கை எவ்வகையிலேனும் 4க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். மிகச் சிறிய பாலருக்கும் நலிவான மெலிந்த உடலுள்ள மாண மாணவியருக்கும் உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் கூடாது. மாணவ மாணவியரை ஒருபோதும் கைகளால் தாக்குதல் கூடாது. அவர்களைக் கட்டி வைத்தல் ஆகாது.

(உ) பிரம்பைப் பாடசாலை மேசையின்மீது வைத்திருத்தல் கூடாது. அது ஆசிரியரது அறையிலே வைக்கப்படுவதோடு தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்தத் தக்கவாறு வெளியே எடுக்கப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் – 10

# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய தீங்கியல் சட்டம் LAW OF DELICT

குற்றச் செயல்கள் எனக் குறிப்பிடப்படுவன காரணமாகப் பிள்ளைகளைப் போன்றே வேறு நபர்களுக்கும் ஏற்படக்கூடிய அநியாயங்களைத் தவிர்த்துக் கொள்ள உதவும் குற்றவியற் சட்டம் பற்றிய கடந்த அத்தியாயத்திலே விளக்கப்பட்டது. அச்சட்டத்தினால் பெரும்பாலும் கிரிமினல் குற்றமாகக் கருதப்படுவது திட்டமிட்டு நடத்தும் செயலேயாகும். குற்றவியற் சட்டத்தின் அடிப்படைப் பணியாவது அவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட நபர்களுக்குத் தண்டனை வழங்குதலேயாகும்.

குற்றங்கள் எனக் கருதப்படாத வேறு தவறுகள் காரணமாகவும் நபர்களுக்கு தீங்குகள் விளைவிக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு சமூகத்தில் வாழும் நபர்கள் என்ற வகையில் நாம் அச் சமூகத்தில் வாழும் ஏனைய நபர்கள் மட்டில் கவனஞ் செலுத்த நேரிடும். அது விழுமிய ரீதியானதும் சட்டபூர்வமானதுமான கடமையாக உள்ளது. யாதேனும் ஒன்றைச் செய்தல் அல்லது செய்ய வேண்டிய எதனையேனும் செய்யா திருத்தல் காரணமாக இச் சட்டபூர்வமான கடமை மீறப்படலாம். அது குற்றமேயாகும். சட்டம் அதனைக் குற்றமாக அல்லாது தீங்கு (Delict) அல்லது (Tort) எனக் குறிப்பிடு கிறது.

குற்றங்களின் காரணமாக மட்டுமல்லாது தவறுகள் காரணமாகவும் உடலுக்கு சொத்துக்கு அல்லது கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படலாம்.

உதாரணம்:

1. ஓர் ஆசிரியரால் கடுமையாகத் தாக்கப்பட்டதன் காரணமாக சரத் என்ற மாணவன் பலத்த காயங்களுக்கு ஆளாகிறான். அவ்வாசிரியர் காயங்களை விளைவிக்கும் எண்ணத்தோடு வேண்டுமென்றே அம் மாணவனைத் தாக்கியதாகத் தெரிய வருகிறது.

2. ஓர் ஆசிரியையால் பாடசாலைக் கூரை மீது ஏற்றப்பட்ட 8 வயதுடைய நிமல் கூரை யில் இருந்து விழுந்து பலத்த காயங்களுக்கு உள்ளாகிறான். நிமலில் காயங்களை விளைவிக்கும் எண்ணம் அல்லது விருப்பு ஆசிரியையில் இல்லையாயினும் பிள்ளை யின் மீது கவனஞ் செலுத்தும் கடமையை மீறல் அல்லது கவனஞ் செலுத்தாமல் விடல் காரணமாக நிமல் பலத்த காயங்களுக்கு ஆளானமை புலனாகிறது.

   ஆசிரியர் சரத் மீது கடுமையான காயங்களை விளைவித்த செயல் குற்றமாகும். அவ்வாறான குற்றங்கள் தனி நபருக்கெதிரான குற்றமல்லாது முழுச் சமூகத் துக்கே எதிரான பொதுவான குற்றமாகவே கருதப்படுகிறது. அத்தகைய குற்றங்களின்போது அரசாங்கம் தலையிட்டு தண்டனைக் கோவை சட்டங் களையும் விதிகளையும் பயன்படுத்திக் கொண்டு பாதகச் செயலைப் புரிந்த நபரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யும் நீதிமன்றம் வழக்கு விசாரணையின் பின்னர், குறிப்பிட்ட நபர் அக் குற்றத்தின் மட்டில் குற்றவாளி எனக் காணுமிடத்துக் குற்றவியற் சட்டத்தின்படி உரிய தண்டனையை விதிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையின் கவனயீனம் காரணமாக நிமலுக்கு நிகழ்ந்த தீங்கு (Delict) ஆகும். அல்லது (Tort) எனப்படும் அத்தகைய தீங்கியல் குற்றங்கள் பாதகம் சார்ந்த குற்றங்கள் போன்று சமூகத்துக்கு மாறாக இழைக்கப்படும் குற்றங்களாகக் கருதப்படாது நபர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களாகக் கருதப்படுகின்றன. எனவே அவ்வாறான குற்றங்களுக்கு உள்ளாகும் நபர்கள் தனிப்பட்ட முறையில் முன்வந்து அக் குற்றம் காரணமாகத் தமக்கு ஏற்பட்ட தீங்கை அல்லது நட்டத்தை ஈடு செய்வதற்கான ஒரு நஷ்டஈட்டைக் குற்றவாளியிடம் பெற்றுக் கொள்வதற்காகச் சட்டத்தின் துணையைப் பெறலாம். ஆசிரியையின் அசட்டை காரணமாக நிமலுக்குத் தீங்கு நேரிட்டதென்பதை நிரூபிப்பதற்காக நிமல் சார்பாக அவனது தந்தை அல்லது சட்ட பூர்வமான பாதுகாவலர் நட்டஈட்டைக் கோருவதற்கான சட்டபூர்வமான உரிமையுடையவராவார். இது தொடர்பாக தீங்கியல் சட்டத்தின்படி சிவில் வழக்குகள் தொடர்பான விதிகளின் அடிப்படையிலே ஒரு சிவில் நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட வேண்டும். பெண் வைத்தியரது அசட்டை காரணமாகத் தம் குழந்தைக்கு நேர்ந்த தீங்கு தொடர்பாக அக் குழந்தையின் தந்தையால் தொடரப்பட்ட வழக்கு பற்றி ஒரு நாளிதழில் இடம் பெற்ற செய்தியின் தலைப்பு பின்வருமாறு அமைந்தது.

> **விசேட வைத்தியர்கள் மனித உயிர்கள் தொடர்பாக மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.**
>
> **50 இலட்சம் செலுத்துமாறு பேராசிரியருக்கு உத்தரவு.**
>
> **கவனயீனம் சாட்சிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது - மாவட்ட நீதிபதி.**

## தீங்கியல் சட்டம் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள்

வயது வந்தோரால் பிள்ளைகளுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட பூர்வமான கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் அதன் ஊடாகப் பிள்ளைகளது சட்ட பூர்வமான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் உடந்தையாகும் ஒரு சட்டமுறையாக (Delict) சட்டம் பிரதான பங்கு வகிக்கிறது. விசேடமாக ஏனையோர் மட்டில் கவனஞ் செலுத்துதல் சட்டபூர்வமான கடமையாகும். அச் சட்டபூர்வமான கடமைகளை மீறுதல் சட்டத்தை மீறுதலே என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தீங்கியல் சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களும் நிபந்தனைகளும் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதன் நிமித்தம் மிகப் பயன் உள்ளவையாகும்.

சமூகத்தில் வாழும் ஏனைய பிரஜைகள் மீது கவனஞ் செலுத்தல் எம்மில் ஒப்படைக்கப்பட்டுள்ள விழுமியஞ் சார்ந்த மற்றும் சட்டபூர்வமான கடமையாக அமைவதோடு பிள்ளைகள் மட்டில் விசேட கவனத்தோடு செயற்பட வேண்டிய சட்டபூர்வமான கடமையை வயது வந்தோர் கொண்டுள்ளனர். பிள்ளைகளது உடல் ரீதியான மற்றும் உள ரீதியான முதிர்ச்சியின்மை காரணமாக வீட்டில், பாடசாலையில் மற்றும் வேறு இடங்களில் அவர்கள் தொடர்பாகக் கவனம் எடுக்கும் பொறுப்பு (Duty of Care) வயதுவந்தோரில் தங்கியுள்ளது.

எனினும் இப்பொறுப்பு வயதுவந்தோரால் வேண்டுமென்றே அல்லது கவன மின்மையால் மீறப்படும் சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்கா. இவ்வாறு வயது வந்தோரது அசட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகப் பிள்ளைகள் உடல், உளத் தீங்குகளுக்கு ஆளான சந்தர்ப்பங்களுக்கு அளவேயில்லை. சில வேளைகளில் பிள்ளைகள் மரணத்துக்கும் ஆளாகியதுண்டு.

வீட்டிலே பெற்றார்களான இயற்கைப் பாதுகாவலர்களது அசட்டை காரணமாக அவர்களது பிள்ளைகள் இத்தகைய தீங்குகளுக்கு ஆளாவரேயாயின் அதன் வாயிலாக நிகழும் நட்டத்தை அவர்கள் தாங்கிக் கொள்ள நேரிடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றார் கூட கண்டனங்களுக்கு ஆளாவதுண்டு.

வசிப்பிடங்களில் குழந்தைப் பருவத்தினரான பிள்ளைகள் மீது கவனஞ் செலுத்துதல் பெற்றாரான இயற்கைப் பாதுகாவலர்களது பொறுப்பாக இருப்பதைப் போன்று பாடசாலைகள் மற்றும் வேறு இடங்களில் பிள்ளைகள் மீது கவனஞ் செலுத்தும் கடமை அல்லது கவனஞ் செலுத்தும் பொறுப்பு அத்தகைய இடங்களோடு தொடர்புபட்ட பொறுப்புவாய்ந்தோர் மீது சுமத்தப்படுகிறது.

## பாடசாலையில் மாணவர்கள் மட்டில் கவனஞ் செலுத்துதல் தொடர்பாகப் பாடசாலைத் தலைவர்களினதும் ஆசிரியர்களினதும் சட்டபூர்வமான பொறுப்புகள்

தீங்கியல் சட்டம் விசேடமாக செல்வாக்குச் செலுத்தும் இடம் பாடசாலையே ஆகும். எப்பாடசாலையிலாயினும் கல்:வி கற்கும் பாலப் பருவத்தினரான பிள்ளைகள் அவர்களது வயது மற்றும் முதிர்ச்சியின்மை என்பன காரணமாக வயதுவந்தோரால் விசேட கவனத்தோடு பராமரிக்கப்பட வேண்டிய கூட்டத்தாராவர். பெற்றார் வீட்டில் பிள்ளை களைப் பராமரிக்கின்றனர். அவர்கள் தம் பிள்ளைகளைப் பாடசாலையில் பொறுப்பளித் தலோடு அப்பிள்ளைகளைக் கவனமாகப் பராமரிக்கும் பொறுப்பைப் பாடசாலையிடம் ஒப்படைக்கிறார்கள்.

பாடசாலை இவ்வாறாகத் தாம் பொறுப்பேற்ற பிள்ளைகளைப் பெற்றாரைப் போன்று கவனமாகப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கிறது. அது விழுமியஞ் சார்ந்த கடமை மட்டுமல்ல, சட்டபூர்வமான கடமையுமாகும். சட்ட பூர்வமான கடமையை மீறுதல் என்பது சட்டத்தை மீறுதலேயாகும்.

தம் பிள்ளைகள் மீது கவனஞ் செலுத்தும் கடமையைப் பெற்றார். பாடசாலையிடம் ஒப்படைத்த பின்பு பாடசாலைத் தலைவரும் மற்றும் ஆசிரியர்களும் பெற்றாரைப் போன்று பாடசாலைப் பிள்ளைகளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என தீங்கியல் சட்டத்தோடு தொடர்புபட்ட பல வழக்குகளின் வாயிலாக நிறுவப்பட்டுள்ளமை 3ம்ஆய்வுப் பொருளில் குறிப்பிடப்பட்டது. பாடசாலைப் பிள்ளைகள் மட்டில் கவனஞ் செலுத்துதல் தொடர்பாகப் பாடசாலைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அச் சட்டபூர்வமான பொறுப்பு பெற்றார் போன்ற (Loco Parentis) என்ற கோட்பாட்டின் மீது தங்கியுள்ளமை இவ் வழக்குகளின் போது நிறுவப்பட்டது. அவ் வழக்குகளின் போது கற்றிந்த நீதிபதிகள் குறிப்பிட்ட கருத்துகளாலும் வலியுறுத்தப்பட்டமை அந்த ஆய்வுப்பொருளின்போது உதாரணங்களோடு விபரிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மீதான அவதானம் அல்லது கவனம் கொள்ளும் பொறுப்பு என்ற வகையில் பாடசாலைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வசம் கையளிக் கப்பட்டுள்ள சட்டபூர்வமான கடமைகளின் தன்மைகளையும் வரையறைகளையும் சிறப்பாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு இவை தொடர்பான பிரச்சினைகளின்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட கருத்துகளையும் வேலைத் திட்டங்களையும் ஆராய்தல் அவசியமாகும்.

எனினும் இலங்கையில் இவை தொடர்பாக மூலாதாரங்களாக கொள்ளத்தக்க அத்தகைய விடயங்கள் பற்றிப் பதிவான நீதிமன்றத் தீர்ப்புகள் மிகக் குறைவேயாகும். இலங்கை இவ்வாறான பிரச்சினைகள் தோன்றாத நாடு என்பது இதன் கருத்தல்ல. இலங்கையில் பாடசாலைகளில் போன்று பாடசாலைகளுக்கு வெளியேயும் பாடசாலைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தம் சட்டபூர்வமான கடமைகளை மீறியதன் காரணமாக மாணவர்கள் உடல் ரீதியான தீங்குகளுக்கு உட்பட்ட சம்பவங்கள் பலவாகும். சிலவேளைகளில் உயிர்ச்சேதம் வரை நிலைமை பாரதூரமாக அமைந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

எனினும் இவ்வாறான சம்பவங்கள் காரணமாகத் தீங்குகள் நிகழ்த்தப்பட்ட மாணவர்கள் நட்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளைச் சட்டம் வழங்கியிருப்பினும் சட்டத்தின் துணையைப் பெற்றுக் கொள்ளத் தேவையான விளக்கமோ அல்லது பொருளாதார வல்லமையோ இல்லாத காரணத்தால் அவர்களது பெற்றார்கள் அல்லது பாதுகாவலர்கள் நீதிமன்றத்தை நாடுவது மிகவும் குறைவே எனலாம்.

இலங்கையிலே நிலைமை இவ்வாறாக இருப்பினும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் நிலைமை, முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது. பாடசாலைத் தலைவர்களும் மற்றும் ஆசிரியர்களும் தமது மாணவர்கள் மட்டில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை மீறியமை தொடர்பான சட்டப்படியான நிலைமையைத் தெளிவாக்கிக் கொள்ளத் தக்கதாக மூலாதாரமாகக் கொள்ளக்கூடிய நீதிமன்றத் தீர்ப்புகள் அந் நாடுகளில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவ்வாறான நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் மாண வர்களது சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் பாடசாலைத் தலைவர்களதும் ஆசிரியர் களதும் சட்டபூர்வமான கடமைகளின் தன்மை, வரையறை என்பன மிகச் சிறப்பாக வியாக்கியானம் செய்யப்படுகின்றன. அத்தகைய சில நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றிய விபரங்கள் அடுத்து இடம்பெறுகின்றன.

## (அ) பாடசாலை ஆரம்பமாக முன்னர் மாணவர்களது பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை ஏற்க வேண்டிய பொறுப்புகள்

13 வயதுப் பாடசாலை மாணவனொருவன், ஒரு கொழுக்கிக் கம்பியை றப்பர் துண்டில் வைத்து 9 வயதான ஒரு மாணவன் மீது எய்த காரணத்தால் அவனில் கடுமையான காயம் உண்டாயிற்று. பாடசாலை ஆரம்பிக்கப்படும் நேரம் மு. ப. 8.15 ஆக இருந்ததோடு மு. ப. 8. 30க்கு அனைத்து மாணவர்களும் வகுப்பிலே சமுகமளித்திருத்தல் வேண்டும். அதிபர் தினமும் மு. ப. 8.00 மணிக்கே பாடசாலையை வந்தடைகிறார். வழமையாக அவர் பாடசாலையை அடையும்போது ஏற்கனவே அங்கு ஒரு சில மாணவர்கள் சமூகமளித்திருப்பதுண்டு. குறிப்பிட்டவிபத்து நடைபெற்றபோது நேரம் அண்ணளவாக 8.05 ஆகும். தம் பிள்ளை மீது நிகழ்த்தப்பட்ட அனர்த்தத்துக்காக நட்ட ஈட்டைக் கோரி அவனது தந்தை, குறிப்பிட்ட இம்சையைப் புரிந்த மாணவனையும் அதிபரையும் மாவட்டக் கல்வி ஆணையாளரையும் எதிர்த்து ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். இதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் அதிபர் கவனயீனமாக இருந்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டு பின்வருமாறு கூறியது:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிபர் தம் பாடசாலைப் பிள்ளைகளை ஒருங்கு சேர்த்து, மாணவர்கள் வகுப்பறைகளில் பிரவேசிக்கும் முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தைகள் தொடர்பான சட்ட திட்டங்கள் எதனையும் குறிப்பிடவில்லை. அவர் எல்லாப் பொறுப்புகளையும் தாமே தாங்கிக் கொண்டாரேயல்லாமல் மாணவர்களது பாதுகாப்பு விடயங்களோடு தொடர்புபட்ட எத்தகைய பொறுப்புகளையும் ஏனைய ஆசிரியர்களிடமோ அல்லது பாடசாலையோடு சம்பந்தப்பட்ட நபர்களிடமோ கையளிக்கவில்லை. நேரத்தோடு சமூகமளிக்கும் மாணவர்கள் மட்டில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பாடசாலைக் கட்டிடத்தைச் சுற்றியும் குறுக்கே கிழக்கை நோக்கியும் மேற்கை நோக்கியும் உலாவுதல் மட்டுமே அவர் செய்த பணியாக இருக்கிறது. முரட்டுத் தனமான இம் மாணவன் ஏனைய மாணவனைக் கீழே புரட்டித் தாக்கும்போது கூடப் பாடசாலையிலே எந்தவொரு அவதானிப்பாளரேனும் இருந்ததாகத் தெரியவில்லை."

(டைட்டஸ் எதிர் லின்ட்பர்க் (1967) எனப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாட்டு நீதிமன்றத் தீர்ப்பையொட்டிய வழக்கு)

### (ஆ) வகுப்பறையில் அல்லது விஞ்ஞான ஆய்வுகூடத்தில் நிகழக்கூடிய விபத்துக்களால் அல்லது மாணவர்களிடையே ஏற்படக்கூடிய மோதல்களால் பாடசாலை மாணவர்களுக்கு தீங்கு விளைவிக்கப்படல்.

பாடசாலை மாணவர்கள் எனப்படுவோர், அவர்களது வயது அல்லது முதிர்ச்சியின்மை காரணமாக அடிக்கடி குழப்பங்களில் ஈடுபடும், அகப்படும் எதனையும் ஆராயும் மனப்பான்மையோடு துருவும் பாலப்பருவத்தினராகையால் ஆபத்தானவற்றில் இருந்தும் அவர்களிடையே நிகழத்தக்க மோதல்களில் நின்றும் தீங்குகள் நேராத வண்ணம் தவிர்ப்பதற்கு அவதானமாக இருக்க வேண்டிய சட்டபூர்வமான கடமை ஆசிரியர் களைச் சாரும். இக் கடமை அவர்களது கடமைகளில் ஒரு பகுதியேயாகும். இக் கருத்து, பல வழக்குத் தீர்ப்புகள் வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.

1. "ஒரு மனையியல் பாடத்தில் ஈடுபட்ட செய்முறைச் செயற்பாட்டின் போது ஒரு 12 வயது மாணவி காஸ் அடுப்புத் தீயினால் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளானாள். கவனயீனத்துக்காக ஆசிரியை குற்றவாளியாகக் காணப்படாவிடினும் மாணவியரது பாவனைக்காக மூடப்படாத காஸ் அடுப்பை வழங்கிய பாடசாலையின் அதிகார சபையினர் கவனம் எடுத்தல் தொடர்பான சட்டபூர்வமான கடமையை மீறிய குற்றத்துக்காகக் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்"

   (பெயர் எதிர் செல்பேட் கூட்டுத்தாபனம் (1987) ஐக்கிய இராச்சியத்திலே தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கு)

2. விஞ்ஞான ஆய்வுகூடத்திலே பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்த ஒரு பொஸ்பரஸ் பாத்திரம் வீசப்பட்டதனால் ஒரு மாணவனுக்கு ஏற்பட்ட விபத்துக் காரணமாக அவனது கண்ணிலே பலத்த காயம் ஏற்பட்டது. உரிய முறையில் மாணவர் மீது கவனஞ் செலுத்தப்படாமை மற்றும் ஆபத்தான பண்டங்களைத் தீண்ட இடமளித்தல் போன்ற காரணங்களின் பேரில் ஆசிரியர் தம் சட்டபூர்வமான கடமைகளை மீறியுள்ளார் என நீதிமன்றம் முடிவு செய்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகள் எத்தகையோர் எனத் தெரிந்திருந்தும் அவர்கள் தீண்டத் தக்க இடத்தில் பொஸ்பரஸ் பாத்திரத்தை விட்டுச் செல்லல் கவனயீனத்துக்கான ஒரு சாட்சியாகாதா?" நீதிபதி ஈஸர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(வில்லியம் எதிர் ஈட் (1893) ஐக்கிய இராச்சியத்திலே தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கு)

## (இ) விளையாட்டு மைதானத்தில் மற்றும் பாடசாலை வளவில் மாணவர்கள் மீது கவனஞ் செலுத்த வேண்டிய சட்டபூர்வமான கடமை.

15 வயதுடைய ஒரு பாடசாலை மாணவி, விளையாட்டறையிலே இருந்து விளையாட்டு மைதானத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும்போது கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வந்திருந்த ஒரு லொறியிலே மோதிப் பலத்த காயங்களுக்கு ஆளாகிறாள். கழிவுகளை ஏற்றிச் சென்ற லொறி விபத்து நிகழ்ந்த போது மணிக்கு 25 மைல்கள் வேகத்தில் செலுத்தப்பட்டதாகத் தெரியவந்தது. இவ்விதமாக மாணவர்கள் விளை யாட்டறையில் இருந்து வழியிலே குறுக்காக விளையாட்டு மைதானத்தை நோக்கிச் செல்வதும் அத்தோடு பாடசாலையின் பல்வேறு விடயங்களுக்காக வாகனங்களின் வருகையும் நடைபெறல் வழமை. அதிபர் இது பற்றித்தெரிந்திருந்தும் மாணவர்களது பாதுகாப்புக் கருதி எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளாதிருந்தமை கவனஞ் செலுத்தல் மட்டிலான கடமையை மீறியதாகவே அமைகிறது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(டெலர், எதிர் ஒக்லன்ட் கழிவுப் பொருட் கூட்டுத்தாபனம் (1941) என்ற ஐக்கிய அமெரிக்காவில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கு)

## (ஈ) பாடசாலை இடைவேளையின்போதும் பாடசாலை அலுவல்கள் முடிவடைந்த பின்னரும் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது சட்டபூர்வமான கடமைகள்.

கல்வியின் மட்டிலான தீங்கியல் சடடத்தோடு தொடர்புடைய மிக முக்கியமான வழக்காக அமைந்த சம்பவம் பின்வருமாறு: சறே என்ற நகரிலே ஒரு இடைநிலைப் பாடசாலையில் காலை இடைவேளை 18 நிமிடங்களாகும். இடைவேளை நேரத்தின் போது மாணவர்கள் மீது கவனஞ் செலுத்த இரண்டு ஆசிரியர்களும் 4 மாணவர் தலைவர்களும் 4 வகுப்புத் தலைவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இடைவேளையில் மாணவர்கள் விளையாட்டுத் திடலை அடைய முன்னர் அத்திடலைச் சுத்தி கரிக்கும் பொறுப்பு இரு ஆசிரியர்கள் மீது ஒப்படைக்கப்பட்டிருந்தது. சம்பவம் நடைபெற்ற தினம் சுத்திகரிக்கும் பணிக்காக அதிகநேரம் செலவிடப்பட்டது. இடைவேளை நேரமும் ஓரளவு நீடித்தது. விளையாட்டு மைதானத்தை அடைந்த சில மாணவர்கள், அங்கே கழிவுப் பொருட்கள் இடப்பட்டிருந்த கூடையில் இருந்த றப்பர் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து, ஒருவர் மீது ஒருவர் எய்தனர். ஒரு மாணவனது கண்ணிலே ஒரு றப்பர் துண்டு பட்ட காரணத்தால் அவனது கண் குருடாயிற்று. ஆசிரியர்களது அசட்டை காரணமாகத் தம் பிள்ளையில் நிகழ்த்தப்பட்ட தீங்குக்காக நட்ட ஈட்டைக் கோரிப் பாதிக்கப்பட்ட பிள்ளையின் தந்தை ஒரு வழக்கைத் தொடர்ந்தார். அவ்வாறான விபத்துகளைத் தவிர்க்கப் பாடசாலையின் அதிகார சபை தவறிவிட்டதாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மட்டில் கவனஞ் செலுத்தும் பொறுப்பை அவர்கள் மீறியிறிருப்பதாகவும் நீதிமன்றம் முடிவு செய்தது.

(பியூமன்ட் எதிர் சறே கவுன்ட் கௌன்சில் (1968) ஐக்கிய இராச்சியத்திலே தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கு)

**பாடசாலைத் தலைவர்கள்/ஆசிரியர்கள் மீது ஒப்படைக்கப்பட்டுள்ள கவனஞ் செலுத்துதல் தொடர்பான சட்டபூர்வமான பொறுப்பின் தன்மை.**

பாடசாலைத் தலைவர்களாலும் ஆசிரியர்களாலும் நிகழ்த்தப்படும் எல்லாக் கவனயீனமான செயல்களும் அல்லது கவலையீனங்களாலும் சட்டரீதியான கடமை மீறல்களாகக் கருதப்படா. எந்தவொரு நபராலும் நிகழ்த்தப்படுவது போன்று அவர் களாலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய கடமை மீறப்படலாம். எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாடசாலை மாணவர்களில் அல்லது ஆசிரியர்களில் சேதம் நிகழலாம்.

அத்தகைய கவனஞ் செலுத்துதல் தொடர்பான கடமை மீறப்படல் சட்டபூர்வமான கடமை மீறலாக அமைய வேண்டுமாயின் அவர்களது பொறுப்பு வாய்ந்த கவனயீனம் என்ற குற்றம், பின்வரும்அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என தீங்கியல் சட்டம் வலியுறுத்துகிறது.

(அ) ஏனையோர் மீது கவனஞ் செலுத்துதல் என்ற சட்டபூர்வமான பொறுப்பு, அவரது கடமையில் ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.

(ஆ) அச் சட்டபூர்வமான கடமை வேண்டுமென்றே மீறப்பட்டிருக்க வேண்டும்.

(இ) குறிப்பிட்ட அந்தச் சட்டபூர்வமான கடமை மீறல் காரணமாக மற்றுமொருவரில் ஒரு சேதம் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட வழக்குகள் வாயிலாக தெளிவாக்கப்படுவதாவது பெற்றாரால் பாடசாலைகளில் ஒப்படைக்கப்படும் பிள்ளைகள், பாடசாலை மாணவர்களாகப் பரிணமிக்கப்படுவதோடு அப்பிள்ளைகள் மட்டில் கவனங்கொள்ள வேண்டிய பெற் றாருக்குரிய கடமைகள் பாடசாலைத் தலைவர் மீதும் ஆசிரியர்கள் மீதும் ஒப்படைக்கப் படுகின்றன என்பதேயாகும். அக் கடமைகளின்படி மாணவர்கள் மீது கவனஞ் செலுத்துதல் ஒரு பாடசாலையின் வகுப்பறையில் மற்றும் பாடசாலை வளவில் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்ட கடமையை நிறைவேற்றும் பொறுப்பு பாடசாலைத் தலைவர் களிடமும் ஆசிரியர்களிடமும் அளிக்கப்படும் சந்தர்ப்பங்கள் பலவாகும். பாடசாலை ஆரம்பமாக முன்னர், பாடசாலை ஆரம்பமான பின்பு, வகுப்பறையில், விஞ்ஞான ஆய்வு கூடத்தில் விளையாட்டு மைதானத்தில், பாடசாலை இடைவேளையில், பாடசாலையில் கற்றல் நடைபெற்ற பின்னர் மாணவர்களை வெளியே அனுப்புகையில் பாடசாலையின் பொறுப்பில் வெளிவாரியான நடவடிக்கைகளில் மாவணர்களைப் பங்குபற்றச் செய்கையில் என்பன அத்தகைய சந்தர்ப்பங்களாகும். மாணவர்கள் மீது கவனஞ் செலுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்ட ஒரு பாடசாலைத் தலைவர் அல்லது ஒரு ஆசிரியர் அப் பொறுப்பினை அசட்டையாக நழுவ விடும் பட்சத்தில் அவ்வாறு நழுவ விடுவதன் காரணமாக ஒரு மாணவனில் அல்லது ஆசிரியரில் அல்லது பிறிதொரு நபரில் சேதம் அல்லது நட்டம் ஏற்படின் அது தொடர்பாக ஒரு நட்டஈட்டைச் செலுத்த நேரிடத் தக்க நிலை உருவாதல் இதன் பெறுபேறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைத் தலைவர்களதும் ஆசிரியர்களதும் சட்டபூர்வமான பொறுப்புகளின் வரையறைகள்

மேலே குறிப்பிடப்பட்டவை பாடசாலை நேரத்தில் மாணவர்கள் மீது கவனஞ் செலுத்தும் பொறுப்பு மீறப்பட்டமை நிரூபிக்கப்பட்ட வழக்குகளின்போது நீதிமன்றம் செயற்பட்ட விதம் பற்றிய எடுத்துக் காட்டுகள் சிலவாகும். பாடசாலைக்கு வெளியே கல்விச் சுற்றுலா மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் மாணவர்கள் பங்களிப்புச் செய்யும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிப் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாறாகத் தொடரப்பட்ட வழக்குகளோ ஏராளம். குற்றச் செயல் ஆசிரியரால் நிகழ்த்தப்பட்ட போதும் குற்றம் தொடர்பான பொறுப்பு ஆசிரியர், பாடசாலைத் தலைவர், பிரதேசக் கல்வி அதிகாரசபை போன்ற பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்பது இவ் வழக்குகளால் வலியுறுத்தப்படுகிறது.

தீங்கியல் சட்டத்தின்படி பணியாளன் தனது எஜமான் சார்பாக செய்யும் ஒரு கடமையின்போது ஏற்படக்கூடிய சேதத்தின் பொறுப்பு எஜமான் மீதும் சுமத்தப்படுவதன் காரணமாக எஜமானாகப் பாடசாலைத் தலைவர் அல்லது பிரதேசக் கல்வி அதிகாரி பொறுப்பேற்க வேண்டும் என்பது இதற்கான காரணமாகும். இப் பொறுப்பு பிரதிப் பொறுப்பு (Vicarious liability) எனக் குறிப்பிடப்படுகிறது.

எனினும் ஆசிரியர்களது பொறுப்பிலே உள்ள மாணவர்களில்; நிகழும் எல்லாத் தீங்குகள் மட்டிலும் ஆசிரியர்களோ அன்றிப் பாடசாலைத் தலைவர்களோ பொறுப்பாளிகள் அல்லர் என்பதும் பல நீதிமன்றத் தீர்ப்புகள் தெளிவுபடுத்திய விடயமாகும். எதிர்வு கூற முடியாத ஒரு செயல் ஊடாக நிகழக்கூடிய ஒரு சில சேதங்களுக்கு மட்டில் அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர். மேலும் உரியவாறு கவனஞ் செலுத்தும் பொறுப்புக் கைக்கொள்ளப்படும்போது கூட மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் மட்டில் ஆசிரியர்கள் பொறுப்பேற்றல் இயலாதென்பது நீதிமன்றத் தீர்ப்புகள் வாயிலாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

உதாரணம்:

ஒரு கல்விச் சுற்றுலாவின்போது ஒரு மாணவன் நீரில் மூழ்கி இறந்து விட்டான். கவனயீனம் காரணமாக விபத்து நிகழ்ந்ததெனக் காரணங் காட்டப்பட்டு ஆசிரியர், பயிற்சியாளர், அதிபர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. சுற்றுலா மேற்கொள்ளப்பட முன்னர் நிகழக்கூடிய விபத்துகள் பற்றி உகந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு நீந்தும்போது மாணவர்கள் தம் உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டு அவசியமான நடவடிக்கைகள் மட்டில் தாமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. கவனஞ் செலுத்துதல் பற்றிய கடமை உரியவாறு நிறை வேற்றப் பட்டிருந்த காரணத்தால் அதிபரால் கவனயீனம் நடைபெறவில்லையென நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(கொக்ஸ் எதிர் பர்ன்ஸ் (1971) ஐக்கிய அமெரிக்காவில் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கு.)

மேலே காட்டப்பட்டவாறு ஒரு பாடசாலையின் மாணவர்கள் மீது ஆசிரியர்களும் பாடசாலைத் தலைவரும் செலுத்தவேண்டிய கவனமாவது, எந்தவொரு நபரும் தம் அயலார் மீது கவனஞ் செலுத்தும் பொறுப்புக்குச் சமமானதேயாகும். தீங்கியல் சட்டத்தோடு தொடர்புபட்ட மிகப் பிரபல்யமான வழக்கொன்றாகிய டொனொக்ஹியு எதிர் ஸடீவன்சன்ஸ் (1932) நீதிபதி அட்கின் பிரபு அவர்கள், பிரஜைகள் என்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஏற்க வேண்டிய அத்தகைய பொறுப்பினை இவ்வாறு விபரிக்கிறார்.

"ஏதேனும் ஒரு செயலால் அல்லது யாதேனும் ஒன்றைச் செய்யாது விடுவதால் அல்லது உங்களது அயலார் மீது ஒரு தீங்கு விளைவிக்கப்படலாம் என நியாயபூர்வமாக முன்கூட்டியே நீங்கள் ஊகிக்க முடியுமாயின் அச்செயலைப் புரிவதை அல்லது புரியாமல் விடுவதைத் தவிர்த்துக்கொள்ள ஆவன செய்தல் வேண்டும். எனது அயலார் எனச் சட்டத்தால் கருதப்படுபவர் யார்? எனது செயல்களால் நேரடியாக அல்லது மறை முகமாகப் பாதிப்பு நிகழ்த்தப்படும் நபரே அவர் என்பது அதற்கான விடையாகும். அவரில் பாதிப்புகளை விளைவிக்கத்தக்க செயல்கள் மற்றும் செய்யப்படாமல் விடும் செயல்கள் பற்றிய ஒரு பிரச்சினையின்போது அவர் மீது அவதானமாக இருத்தல் வேண்டும்"

(டொனொான்ஹியு எதிர் ஸ்டீவன்சன்; (1932) ஏ, சி. 562)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 11

# குடும்பச் சட்டமும் வேறு சட்டங்களும் - 1

இலங்கையின் சட்ட முறைக்குரிய பொதுவான மற்றும் தனிப்பட்ட பல சட்டங்களில் அடங்கியுள்ள பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான அம்சங்கள் கடந்த அத்தியாயங்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இச்சட்டங்களை விட வேறு பொதுவான மற்றும் தனிப்பட்ட பல சட்டங்களிலும் பிள்ளைகளது உரிமைகள் பற்றிய அம்சங்கள் இடம் பெறுகின்றன.

பிள்ளைகளது நலனைக் குறிக்கோளாகக் கொண்டு விதிக்கப்படாவிடினும் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான சட்டங்களையும் விதிகளையும் உள்ளடக்கிய அம்சங்களும் அச் சட்டங்களிலே காணப்படுகின்றன. உதாரணமாகக் குடும்பச் சட்டம், பாதுகாவலர் சட்டம், வர்த்தக நிலைய மற்றும் அலுவலகப் பணியாளர் தொடர்பான கட்டளைச் சட்டம், பிள்ளைகள் மற்றும் இளவயதினர் தொடர்பான (ஆபாசப் பிரசுரங்கள்) கட்டளைச் சட்டம் போன்ற பிள்ளைகளது உரிமைகள் மீது நேரடியாகவே ஆதிக்கஞ் செலுத்தும் சட்டங்களும் உண்டு.

இவ்வத்தியாயத்திலே அச் சட்டங்கள் பற்றிய விபரமான கலந்துரையாடல் நடைபெறாவிடினும் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பாக விசேடமாக ஆதிக்கஞ் செலுத்தும் சில சட்டங்கள் பற்றிய சுருக்கமான விபரங்கள் காணப்படுகின்றன.

## பிள்ளைகளது உரிமைகள் மீது ஆதிக்கஞ் செலுத்தும் சட்டங்கள்.

### குடும்பச் சட்டம்

அறிமுகம் 'குடும்பத்தை' சமூகத்தின் அடிப்படையான ஓர் அலகாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அதனைக் காக்க வேண்டும். என இலங்கையின் அரசியல் யாப்பிலே அரசுக் கொள்கைகளை மேற்கொள்ளும் கோட்பாடுகளிலும் மற்றும் அடிப்படைக் கடமைகள் பற்றிய பிரமாணத்திலும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறாகச் சமூக அமைப்பிலே அடிப்படை அலகாக அரசியல் யாப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள குடும்பம் என்ற சமூக நிறுவனத்தின் உரிய நிலைப்பாட்டைக் காக்கும் குறிக்கோளுடன் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் பலவாகும். இச் சட்டத் தொகுப்பை அறிமுகப் படுத்துவதற்காகக் குடும்பச் சட்டம் (Family Law) என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் இதன் பொருட்டு தனியாள் சட்டம் (Law of Persons) என்பதும் கையாளப்படுகிறது.

குடும்பச் சட்டமானது குற்றவியற் சட்டத்தைப் போன்று தண்டக் கோவை போன்ற சட்டத்தினால் பகுப்பாய்வு செய்யப்படும் ஒரு சட்டமல்ல. திருமணச் சட்டம், தாபரிப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம், விவாகரத்துச் சட்டம், பிள்ளைகளைப் பராமரித்து வளர்க்கும் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் வாயிலாகக் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தின் சட்டபூர்வமான தன்மையை உறுதிப்படுத்தவும் குடும்ப உறுப்பினர்களது பரஸ்பர பொறுப்புகள் உரிமைகள் என்பனவற்றைப் பாதுகாக்கவும் ஏதுவாகும். பல்வேறு சட்டங்களையும் நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

## குடும்பச் சட்டமும் பிள்ளைகளது உரிமைகளும்.

குடும்பச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள பலசட்டங்கள் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இச் சட்டங்களில் பிள்ளைகளது கல்வியின் மீது அல்லது பாடசாலை யின் மீது ஆதிக்கஞ் செலுத்தும் குடும்பச் சட்டங்களும் பலவுண்டு.

குடும்பம் என்ற நிறுவனத்துக்கும் பாடசாலை என்ற அமைப்புக்கும் இடையே காணப்படும் பரஸ்பர தொடர்பு மிகவும் நெருக்கமானதாகும். அத் தொடர்பின் சட்டபூர்வமான தன்மையை இவ்வாறு விபரிக்கலாம்.

ஒரு குடும்பத்தில் பிள்ளைகளது தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பது, பெற்றார் கொண்டுள்ள சட்டபூர்வமான கடமையேயெனக் குடும்பச் சட்டம் வலியுறுத்துகிறது. தேவைகளைப் பூர்த்தி செய்தலாவது உணவு, உடை, உறைவிடம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றைப் பிள்ளைகளுக்கு வழங்கலாகும். இக் கருத்து, குடும்பச் சட்டத்தோடு தொடர்புபட்ட சட்ட நூல்களிலும் அச் சட்டத்தை முதன்மையாகக் கொண்ட வழக்குத் தீர்ப்புகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திலே பெற்றார் தம் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கையில் தம்மீது சுமத்தப்பட்டுள்ள சட்டபூர்வமான ஒரு கடமையான பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் பணியை நிறைவேற்றிக் கொள்வதற்காக உகந்த கல்வி முறையோடும் அதனோடு தொடர்புடைய முக்கியமான நிறுவனமான பாடசாலையோடும் தொடர்பு கொள்கின்றனர். இத்தொடர்புகளின் பெறுபேறாகப் பிள்ளைகளது கல்வியோடு சம்பந்தப்பட்ட சட்டபூர்வமான பொறுப்புகளை நிறைவேற்றல் பொற்றாருக்கும பாடசாலைக்கம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளாகும். பெற்றாரைப் பிள்ளைகளது இயற்கையான பாதுகாவலர்களாகவும் (Natural Guardian) பாடசாலையின் அதிபரையும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் பெற்றாரை ஒத்த (Loco -Parentis) பாதுகாவலர் களாவும், சட்டம் குறிப்பிடுகிறது. எனவே அவர்கள் பல்வேறு சட்டபூர்வமான பொறுப்புகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார்கள். அப்பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பொருட்டுப் பெற்றார். குடும்பத்திலே தம் பிள்ளைகள் மட்டில் பெற்றார் அதிகாரத்தையும் அதிபரையும் ஆசிரியர்களையும் பாடசாலையிலே தம் பிள்ளைகள் மட்டில் பெற்றாரை ஒத்த அதிகாரத்தையும் அதாவது உரிமையையும் கொண்டுள்ளார்கள். இவ்வதிகாரங்கள் பிள்ளைகளின் நலனுக்கு ஏதுவாகும் வகையில் அவர்களால் பயன்படுத்தப்படும் எனச் சட்டம் எதிர்ப்பார்க்கிறது.

## குடும்பச் சட்டத்தை முதன்மையாகக் கொண்டு தீர்வுகளைக் காணலும் பிள்ளைகளது உரிமைகளோடு தொடர்புபட்ட பிரச்சினைகளும்

குடும்பம், பாடசாலை என்பற்றுக்கிடையே நிலவும் தொடர்புகள் காரணமாகப் பிள்ளைகளது கல்வி சார்ந்த சட்டபூர்வமான கடமைகள் மற்றும் சட்டபூர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானஉரிமைகள் என்பன காரணமாகப் பாடசாலை, பெற்றார் என்ற இரு சாராருக்கும் இடையே பிரச்சினைகள் தலை யெடுப்பதுண்டு. பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் கூட பிரச்சினைகள் எழுவதுண்டு. பெற்றார் மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கும் பாடசாலைக்கும் இடையேயும் பிரச்சினைகள் தோன்றுவதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் குடும்பச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு தீர்வு காணக்கூடிய பிரச்சினைகள் ஏராளம். அவ்வாறான தீர்வுகளைக் காணும் பொருட்டுப் பெற்றாரைப் போலவே பிள்ளைகளின் கல்வியோடு தொடர்புடைய அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோரும் குடும்பச் சட்டம் பற்றிய அடிப்படை விடயங்களையேனும் அறிந்துகொள்ளல் அவசியமாகும்.

குடும்பச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு தீர்வு காணத் தக்கதும் பிள்ளைகளது கல்வியோடு தொடர்புடையதுமான பிரச்சினைகள் அல்லது வேறு விதமாகக் கூறுவதாயின் பிள்ளை, குடும்பம், பாடசாலை என்பன தொடர்பான பிரச்சினைகள் எவ்விதமான பிரச்சினைகள் எனத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுப் பின்வரும் கற்பனையான சில சம்பவங்கள் மீது உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

### விடய ஆய்வு 1

சுமதி தனது 7 வயது மகன் குமாரைத் தன் வீட்டுக்கு அண்மையில் உள்ள விஜயபுரம் கனிஷ்ட வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளக் கோரி ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறார். குமார் தொடர்பான பின்வரும் பிரச்சினைகள் தோன்றியிருப்பதால் அவனை முதலாம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளும் விடயத்தில் விஜயபுரம் கனிஷ்ட வித்தியாலய அதிபர் உங்கள்து ஆலோசனையை எதிர்பார்க்கிறார்.

அ. குமாரின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் அவனது தந்தையின் பெயர் குறிப் பிடப்படவில்லை. குமார் சட்டபூர்வமான விவாகம் அல்லாத முறையிலே பிறந்த ஒரு பிள்ளையாகையால் அவனைப் பாடசாலையிலே சேர்க்க முடியுமா?

ஆ. 7 வயது நிரம்பிய குமார் ஒருபோதும் பாடசாலைக்குச் செல்லாத மாணவனாக இருப்பினும் முதலாம் ஆண்டில் அவன் சேர்க்கப்படும்போது குறிப்பிட்ட ஆகக் குறைந்த வயதான 5 வயதை அவன் கடந்துள்ள படியால் அவனை அவ் வகுப்பிலே சேர்த்துக் கொள்ள இயலுமா?

### விடய ஆய்வு 2

சுந்தரம், கமலா ஆகிய இருவரது சட்டபூர்வமான திருமணத்தால் பிறந்த ஒரே பிள்ளையான வசந்தன் மணற்பிட்டி மகாவித்தியாலயத்திலே 6ம் ஆண்டில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறான். அவனைப் பாடசாலையிலே சேர்த்த சட்ட பூர்வமான பாதுகாவலராகப் பாடசாலைக் குறிப்பேடுகளில் வசந்தனின் தாயாரான கமலாவின் பெயரே குறிக்கப்பட்டிருக்கிறது. அவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஓர் உறுப்பினரும் ஆவார். தம்பதியர் இடையே ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாகச் சுந்தரமும் கமலாவும் பிரிந்து வாழ்கிறார்கள். வசந்தன் தாயார் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வருகிறான்.

அ) பிள்ளையின் தந்தையாகிய சுந்தரம், பாடசாலையை அடைந்து தமது பிள்ளையை வேறொரு பாடசாலைக்கு அனுப்பத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் அவன் பாடசாலையில் இருந்து விலகியதற்கான அத்தாட்சிப் பத்திரத்தைத் தமக்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். பாலப் பருவத்தவனான பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலர் தாமே எனவும் பிள்ளையைப் பாடசாலையில் இருந்து விலக்க வேண்டா மெனவும் அவனது விலகல் அத்தாட்சியைத் தந்தையிடம் கையளிக்க வேண்டாமெனவும் அவனது தாயார் கூறுகிறார். தாம் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என மணற்பிட்டி மகா வித்தியாலய அதிபர் உங்களிடம் ஆலோசனை கோருகிறார்.

### விடய ஆய்வு 3

முத்துசாமி, மார்கரட் ஆகியோரது பிள்ளைகள் மூவரும் தாமரைக் குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர். பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்தபோது பாடசாலையிலே அவர்களுக்குக் கிறிஸ்தவ சமயமே கற்பிக்கப்பட வேண்டும் என மாகரட் கேட்டிருந்தார். எனவே பிள்ளைகள் சமய பாடமாகக் கிறிஸ்தவ சமயத்தையே கற்கிறார்கள். சமீபத்தில் முத்துசாமியும் மார்கரட்டும் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்கிறார்கள். பிள்ளைகள் முத்துசாமியின் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வருகிறார்கள். இனிமேல் பிள்ளைகளுக்குத் தமது சமயமான இந்து சமயமே கற்பிக்கப்பட வேண்டும் என முத்துசாமி பாடசாலைக்கு அறிவிக்கிறார்.

அ. பிள்ளைகள் மூவரினதும் சமய பாடத்தை மாற்றுதல் தொடர்பாக அதிபர் என்ற வகையில் தாம் எடுக்கத் தக்க நடவடிக்கை பற்றித் தாமரைக் குளம் மகா வித்தியாலயத்தின் அதிபர் உங்களிடம் ஆலோசனை கேட்கிறார்.

### விடய ஆய்வு 4

பன்னிரண்டு வயது நிரம்பிய மாணவி மாலா பூங்காவனம் மகாவித்தியாலயத்தில் 8ம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறாள். கற்றலில் மிகத் திறமைசாலியான மாலா சமீபகாலமாகப் பாடசாலை விடயங்களில் உற்சாகம் குன்றியவளாகக் காணப்படுவதோடு அவளது பாடசாலை வரவும் மோசமாக இருப்பதைக் கண்ட அதிபர், அது பற்றி விசாரித்தபோது பின்வரும் தகவல்களை அறிந்து கொண்டார்.

i குடிப்பழக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்த மாலாவின் தந்தை, தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது அவர்களை வீடுகளில் வேலைக்கு அனுப்பி அதன் மூலம் பணத்தைத் தேடிக் கொள்கிறார்.

ii. குடும்பத்தை விட்டுச் சென்ற மாலாவின் தாய் விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

iii. தந்தையோடு சேர்ந்து மது அருந்த வரும் அவரது குடிகார நண்பர்களால் தனக்கு அடிக்கடி தொந்தரவு விளைவிக்கப்படுவதாக மாலா கூறுகிறாள்.

iv. மாலாவின் கல்விக்கும் நல் வாழ்வுக்கும் பொருத்தமான ஒரு குடும்பச் சுற்றாடல் இல்லை.

அ. பாடசாலை அதிபர் என்ற வகையில் மாலாவின் நலனுக்கு ஏதுவாகத் தக்க சட்டபூர்வமான ஒரு நடடிவக்கையை மேற்கொள்ளத் தமக்கு உதவ முடியுமா வெனப் பூங்காவனம் மகா வித்தியாலய அதிபர் உங்களிடம் வினவுகிறார்.

### விடய ஆய்வு 5

8 வயதான அருண், முன்னர் போல் கல்வியில் ஆர்வங் காட்டுவதில்லை என்பதைக் கண்டுகொண்ட வகுப்பாசிரியை திருமதி யோகேஸ்வரன் அதற்கான காரணங்களைத் தேடிப்பார்த்தார். அப்போது கிடைத்த தகவலின்படி தனவந்தரான அருணின் தந்தை சட்டபூர்வமான தம் குடும்பத்தைக் கைவிட்டுச் சென்றுள்ளார் எனவும் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைப் பராமரிக்கத் தக்க வசதியிருந்தும் அவர் வேண்டுமென்றே அக் கடமையைத் தட்டிக் கழிக்கிறார் எனவும் தெரியவந்தது.

அ. அருண் தொடர்பாக எடுக்கத் தக்க சட்டபூர்வமான நடவடிக்கை பற்றி திருமதி யோகேஸ்வரன் உங்களிடம் ஆலோசனை கேட்கிறார்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு குடும்பம் என்ற சமூக நிறுவனத்தில் தோன்றக்கூடிய பிரச்சினைகள் பலவாகும். இத்தகைய சில பிரச்சினைகள் குடும்பத்தின் பாலப் பருவ உறுப்பினரான பிள்ளைகளது கல்வியோடு தொடர்புபட்டவையாகும். இவ்வா றான பிரச்சினைகளில் சிக்கும் பகுதியாரில் மிக மோசமாகப் பாதிக்கப்படுவோர் பிள்ளைகளேயாவர். இத்தகைய பிரச்சினைகள் காரணமாகப் பிள்ளைகள் தம் பாலப் பருவத்திலே உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய பாதுகாப்பை அவர்கள் இழந்து விடுகிறார்கள். அவர்கள் மட்டிலான தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதில்லை. இதன் காரணமாக அவர்கள் தமக்கேயுரிய உரிமைகளை அனுபவிக்க இயலாதவாறு அவற்றை இழந்து விடுகிறார்கள். எனவே,. இவ்வாறான பிரச்சினைகள் நேராத வண்ணம் அல்லது நேர்ந்த பிரச்சினைகளைப் பிள்ளைகளது நன்மைக்கு ஏதுவாகும் வண்ணம் தீர்த்துக் கொள்ளல் அவசியமாகும்.

ஒரு பாடசாலையில் அதிபரும் ஆசிரியர்களும் தம் விடயப் பரப்பில் இவ்வாறான பிரச்சினைகள் மட்டில் தீர்வுகாண்பதற்கான அதிகாரத்தைக் குறைவாகவே பெற்றுள் ளார்கள். இத்தகைய பெரும்பாலான பிரச்சினைகள் சட்ட ரீதியான காரணங்களை மையமாகக் கொண்டே தோன்றுவதால் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொலீஸ் போன்ற சமாதான உத்தியோத்தர்களும் நீதிபதிகள் ஆகியோருமே முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனினும் இத்தகைய பிரச்சினைகளைச் சந்திக்கும் பிள்ளை களின் நலன் கருதி அதிபர்களும் ஆசியர்களும் ஒரு பாரிய பணியில் ஈடுபடலாம் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகக் குடும்பச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளத்தக விதம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சாராரை அறிவூட்டல், பிள்ளைகளது நலன் கருதி நடைமுறைப்படுத்தப்படும் குடும்பச் சட்டத்தினது சட்டங்களையும் விதிகளையும் பற்றித் தாம் விளக்கத்தைப் பெற்றிருத்தல் என்பன அப் பணிகளாகும். இதன் பொருட்டுக் குடும்பச் சட்டம், பிள்ளைகளது உரிமைகள் என்பன பற்றிய அடிப்படை விடயங்கள் தொடர்பாகவேனும் அவர்கள் அறிவூட்டப்பட்டிருத்தல் அவசியமே.

## பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உதவும் குடும்பச் சட்டத்தில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்கள்.

சட்ட ரீதியான அல்லது சட்டரீதியற்ற ஒரு விவாகத்தில் 'குடும்பம்' என்ற சமூக நிறுவனம் ஆரம்பமாகிறது. ஒரு குடும்பத்தில் சட்டரீதியான விவாகத்தால் பிறக்கும் பிள்ளைகள் சட்டரீதியான **(Legitimate)** பிள்ளைகள் எனவும் சட்டரீதியற்ற விவாகத் தால் பிறக்கும் பிள்ளைகள், சட்டரீதியற்ற **(Illegitimate)** பிள்ளைகள் எனவும் அழைக் கப்படுகின்றனர். சட்டரீதியாக விவாகமான தம்பதியின் பிள்ளையினது இயற்கையான பாதுகாலவர்கள் அப்பிள்ளையின் பெற்றோரேயாவர். தாயும் தந்தையும் உயிரோடில்லா விடின் பாதுகாவலர் நியமிக்கப்பட வேண்டும். சட்டபூர்வமான விவாகத்துக்குப் புறம்பாக பிறக்கும் ஒரு பிள்ளையினதும் அதன் தாயினதும் தொடர்பைச் சட்டம் 'தாயார் என்றுமே நிச்சயிக்கப்பட்டவரே' (mater sempter creta est) என்ற சித்தாந்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் குடும்பச் சட்டம் வியாக்கியானம் செய்யப்படும் நூல்களில் குறிப்பிடப்படுகிறது. இதன்படி தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள தொடர்பு சட்டரீதியான விவாகத்தால் பிறக்கும் பிள்ளையின் மட்டிலேயே சட்டத்தால் ஏற்கப்படுகிறது. சட்டரீதியான விவாகத்துக்குப் புறம்பாகப் பிறக்கும் பிள்ளையின் தந்தைமையை ஒரு சில சட்ட பூர்வமான அலுவல்களின் பொருட்டு நிரூபிக்க முடியுமெனினும் பொதுவாக அத் தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள தொடர்பைச் சட்டம் ஏற்காது.

இந்த அடிப்படையில் சட்ட ரீதியான விவாகத்தின் மூலம் பிறக்கும் பிள்ளையின் இயற்கைப் பாதுகாவலர்கள் தாயும் தந்தையமேயாவர். விவாகமாகாத தாயின் பிள்ளையினது இயற்கையான பாதுகாவலர் அத்தாயேயாவார். மேலும்; இயற்கைப் பாதுகாவலர்கள் அற்ற அல்லது சட்டபூர்வமாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் மட்டில் நீதிமன்றமே பாதுகாவலர்களை நியமிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

ஒரு பிள்ளையின் பாலப் பருவத்திலே அப்பிள்ளையின் இயற்கைப் பாதுகாவலரால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டபூர்வமான பொறுப்புகள் பலவாகும். அச் சட்டபூர்வமான பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பொருட்டுப் பெற்றாரது அதிகாரம் என அழைக்கப்படும் சட்ட பூர்வமான அதிகாரமும் இயற்கைப் பாதுகாவலருக்கு சட்டத்தால் உரித்தாக்கப்படுகிறது.

**பிள்ளைகளது நலனுக்காக நீதிமன்றம் உயர்மட்ட பாதுகாவலராக விளங்குதல்**

பாலப் பருவப் பிள்ளைகளது உயர்மட்ட பாதுகாவலர் நீதிமன்றமே என்பதை உரோம ஒல்லாந்தச் சட்டத்தைப் போன்று இலங்கையின் தற்போதைய சட்ட முறையும் ஏற்றுக்கொள்கிறது. பாலப் பருவப் பிள்ளைகள் தொடர்பான இச் சட்ட அதிகாரம் இலங்கைச் சட்டத்தால் மாவட்ட நீதிமன்றங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ் வதிகாரத்தின் கீழ் ஒரு பிள்ளையின் வாழ்வு, உடல்நலம், நடத்தை என்பன தொடர்பாக ஓர் ஆபத்து ஏற்படும் விடயம் காரணமாகத் தந்தை ஒருவரது பெற்றார் அதிகாரத்தை நீதிமன்றத்தால் இரத்துச் செய்ய முடியும் என்பது "காலிட்டஸ்" என்ற பிரபல்யமான தென்னாபிரிக்க வழக்கின்போது தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனடிப் படையில் தந்தையின் கண்காணிப்பு பிள்ளைகளின் நலனுக்குத் தடையென நிரூபிக் கப்படுமேயாயின் அத்தகைய சந்தர்ப்பங்களில் தந்தையின் பெற்றார் அதிகாரம் நீதி மன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டுப் பிள்ளையின் பராமரிப்பு தாயிடம் கையளிக் கப்பட்டதற்கான உதாரணங்கள் அடங்கிய வழக்குத் தீர்ப்புகள் பல இலங்கையில் உண்டு. மேலும் நீதிமன்றம் உயர்மட்ட பாதுகாவலாகச் செயற்பட்டுத் தாயின் பராமரிக்கும் உரிமையை இரத்துச் செய்ததை உறுதிப்படுத்தும் வழக்குகளும் உண்டு. இவ்விதமாக ஒரு பாலப்பருவத்தவரின் உயர்மட்ட பாதுகாவலராக நீதிமன்றம் தம் பிள்ளைகளின் மட்டில் பெற்றாருக்குள்ள உரிமைகளை இரத்துச் செய்வதற்கான காரணம் பிள்ளையின் நலனில் அல்லது நடத்தையில் நிகழத்தக்க தீங்குகளைத் தவிர்க்கும் பொருட்டே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**பிள்ளைகளது நலனை முதன்மையாகக் கொண்டு தீர்வுகளைச் செய்தல்.**

ஒரு குடும்பத்தில் தோன்றும் பல்வேறு பிரச்சினைகள் பிள்ளைகளது நலனுக்குத் தடைகளாக அமையும். முன்னர் குறிப்பிட்ட கற்பனை நிகழ்வுகளைக் கொண்ட உதாரணங்களால் அது தெளிவாயிற்று. இப்பிரச்சினைகளைப் பிள்ளையின் நலன் கருதித் தீர்ப்பதற்குக் குடும்பச் சட்டத்தின் சட்டங்களும் விதிகளும் அனுசரணையாகின்றன என முன்னரும் விபரிக்கப்பட்டது. எனினும் இத்தகைய பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணல் பெரும்பாலும் அதிபர்களதும் ஆசிரியர் களதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயப் பரப்பைச் சார்ந்ததாக இல்லையென்பதையும் கற்பனை உதாரணங் களால் கண்டு கொண்டோம்.

உதாரணமாகக் கற்பனை நிகழ்வு 2ல் குறிப்பிடப்பட்ட சுந்தரம் தம்பதிகளது குடும்ப வாழ்வில் சீர்குலைவு, 3ம் கற்பனை நிகழ்வில் குறிப்பிட்டவாறு ஒரு பிள்ளையின் சமயம் பற்றித் தீர்மானமெடுத்தல், 5ம் கற்பனைச் சம்பவத்திலே அருண் பொருட்டுத் தந்தையின் பொறுப்புகளை நிறைவேற்றிக் கொள்ளல் போன்ற பிரச்சினைகள் பொலீஸ் போன்ற சமாதான உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்றம் போன்ற நியாயம் வழங்குநர்கள் ஆகியோரால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகும். எனினும் ஒரு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் குடும்பச் சட்டம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருப்பாரேயாயின் இத்தகைய பிரச்சினைகள் மட்டில் பிள்ளைகளின் நன்மைக்குக் காரணமாகும் பணிகளை நிறைவேற்றவியலும். சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டில் வழிகாட்டுதல் அத்தகைய ஒரு பணியாகும். சட்டத்துக்கமைய விவகாரங்களைப் புரிதல் மற்றும் அவ்வாறு செய்வதற்காக ஏனையோரைத் தூண்டுதல் என்பன ஏனைய பணிகளாகும்.

## விளக்கம்

### விடய ஆய்வு

இலக்கம் 1ன்படி விஜயபுரம் கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர், குடும்பச் சட்டம் பற்றிய அறிவைப் பெற்றவராக இருந்திருப்பின் குமாரின் பிறப்பு, சட்டரீதியான விவாகம் காரணமாக இருப்பினும் அல்லாவிடினும் அவனைப் பாடசாலை யில் சேர்ப்பதில் அது எவ்விதப் பாதிப்பையும் நிகழ்த்தாது என்பதை அறிந்து விவகாரத்தில் ஈடுபடுவார் என்பதில் ஐயமிலை. குடும்பச் சட்டத்தோடு தொடர்புபடாததும் கல்வியோடு தொடர்புபடுவதுமான சுற்றுநிருபங்கள் போன்ற விதிகளை உரியவாறு தெரிந்தவராக இருந்திருப்பின் ஒரு பிள்ளையைப் பாடசாலையில் 1ம் ஆண்டிலே சேர்த்துக் கொள்ளும் போது பிள்ளையின் வயது 5க்குக் குறைவாக இருந்தாலேயன்றி கூடிய வயது பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு எத்தடையையும் ஏற்படுத்தாது என்பதை அறிந்திருப்பார்.

2ம் விடய ஆய்வில் இடம்பெற்ற சுந்தர் கமலா ஆகிய தம்பதிகள் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழல் சட்ட ரீதியான பிரிவா என்பதை நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும். இருவர் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிந்து தனித்து வாழுதல் பிரிவு என எமது சட்டமுறை கருதாது. எனவே நீதிமன்றம் சட்டரீதியாக விவகாரத்தை அங்கீகரித்த பின்பு பிள்ளை களின் பாதுகாப்பு பற்றி நீதிமன்றம் முடிவினை எடுக்கும். இவ் விடயம் மணற்பிட்டி மகாவித்தியாலய அதிபரது விடயப் பரப்பைத் தாண்டும் அதே நேரத்தில் நீதிமன்றத்தால் தீர்க்கப்படவேண்டிய ஒரு விடயமுமாகும். தற்போது எழுந்துள்ள பிரச்சினை மணற்பிட்டி மகாவித்தியாலயத்தில் சேர்க்கப்பட்ட வசந்தன் என்ற பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்தவரைத் தவிர மற்றொருவர் பாடசாலையில் இருந்து விலக்கிக் கொள்வதற்காக விண்ணப்பித்திருப்பதாகும். வசந்தன் என்ற மாணவனின் தாயார் சட்ட ரீதியான பாதுகாவலராகத் தஸ்தாவேஜுகளில் குறிக்கப்பட்டுள்ளபடியால் அதிபர் அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3ம்விடய ஆய்வில் 'பிள்ளையின் சமயம்' பற்றிய சட்டரீதியான நிலையைப் பகுப்பாய்வு செய்யக் குடும்பச் சட்டத்தைப் போன்று 1939ம் ஆண்டுக் கல்வி கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்களும் பயன்படுகின்றன. அக் கல்விக் சட்டத்தின்படி ஒரு மாணவனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சிறந்த நினைவாற்றல் மற்றும் விவேகத்தோடு தமது சமயம் பற்றிய ஒரு வெளியீட்டைச் செய்வாரேயாயின் அம் மாணவனது பெற்றாரது சமயம் அச் சமயமே எனக் கூறுகிறது. எனினும் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தில் பிள்ளையின் சமயம் தொடர்பான பிரச்சினை, நீதிமன்றம் போன்ற உயர்ந்த ஓர் அதிகார சபையால் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

விடய ஆய்வு இலக்கம் 4ல் 12 வயதுடைய மாலாவின் இயற்கைப் பாதுகாவலர்களான அவளது பெற்றோர் தமது மகளது நன்மைக்கு உதவாத விடயங்களில் ஈடுபடுவதால் பிள்ளையின் நன்மையின் பொருட்டு மூன்றாம் தரப்பினர் முன்வருதல் அவசியமாகிறது. பொலீஸ் போன்ற சமாதான உத்தியோகத்தர் ஊடாக மாலாவின் நன்மையின் பொருட்டுப் பெற்றாருக்கு எதிராக ஒரு முறைப்பாட்டை நீதிமன்றத்திலே சமர்ப்பித்தல் வேண்டும். நீதிமன்றம் அதனை விசாரித்துப் பிள்ளையைப் பெற்றாரின் பொறுப்பில் இருந்து விடுவிப்பதற்கு பிள்ளையின் உயர்மட்ட பாதுகாவலரான நீதிமன்றத்துக்கு உரிமை உண்டு. இவ்வாறாக நீதிமன்றம் பிள்ளைகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, அவர்களை வேறு பாதுகாவலர்களிடம் அல்லது பிள்ளைகளுக்கான இல்லங்களிடம் பொறுப்பளித்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு.

## பிள்ளைகளது உரிமைகளில் செல்வாக்கு செலுத்தும் வேறு சட்டங்கள்.

குடும்பம் தொடர்பான சட்டங்கள், கட்டளைகள் போன்று பிளளைகளது உரிமைகள் தொடர்பாக ஆதிக்கஞ் செலுத்தும் சட்டங்கள் உள்ளடக்கப்பட்ட வேறு சட்ட மூலா தாரங்களும் பலவுண்டு. அத்தகைய சில சட்ட மூலாதாரங்களையும் அவற்றில் அடங்கியுள்ள பிள்ளைகளது உரிமைகள் பற்றிய அம்சங்களையும் சுருக்கமாக நோக்குவோம்.

### பிள்ளைகள் மற்றும் பாலப் பருவத்தினர் பற்றிய கட்டளைச் சட்டம்.

1939ம் ஆண்டில் சட்டமாக்கப்பட்ட இக் கட்டளைச் சட்டம் இடையிடையே திருத் தத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலே பிள்ளைகள் மற்றும் பாலப் பருவத்தினர் ஆகியோர் தொடர்பான விதிகள் அடங்கிய ஒரு சட்ட மூலாதாரமாக இதனைக் குறிப் பிடலாம். பிள்ளைகளாலும் பாலப் பருவத்தினராலும் இழைக்கப்படும் குற்றங்கள் பற்றியும் பிள்ளைகள் மற்றும் பாலப் பருவத்தினருக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்கள் பற்றியும் அமுல்படுத்தப்படும் சட்டத்தையும் விதிகளையும் விபரிக்கும் இக்கட்டளைச் சட்டம் பிரதானமான 6 பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தற்போது இக் கட்டளையின் 4ம், 5ம் பகுதிகள் செயற்படாதிருப்பதுடன் 5ம் பகுதியின் 76ம் பிரமாணம் மட்டுமே அமுலாக்கப்படுகிறது. அக் கட்டளைச் சட்டத்தின் அடிப்படைப் பகுதிகள் மற்றும் அப் பகுதிகளில் அடங்கியுள்ள பிள்ளைகளது உரிமைகள் பற்றிய விதிகள் என்பன தொடர்பான சுருக்கமான விபரம் பின்வருமாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் பகுதி – பிள்ளைகளுக்கான நீதிமன்றங்களைத் தாபித்தல் மற்றும் அந் நீதிமன்றங்களினது அதிகாரங்களும் பணிகளும்.

இக் கட்டளையின்படி 14 வயதுக்குக் குறைந்த நபர்கள் பிள்ளைகள் எனவும் 14–16 வயதுப் பிரிவினர் இளம் பராயத்தைச் சேர்ந்த நபர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். இவ் வயதுகளை உடைய பிள்ளைகளினதும்; பாலப் பருவத்தினரதும் நலனுக்காக இச் சட்டத்தின் மூலம் பல்வேறு சட்டங்களும் விதிகளும் இயற்றப்பட்டுள்ளன. பிள்ளைக ளுக்கும் இளம் பராயத்தவருக்கும் எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பாக நடிவடிக்கை எடுக்கும் பொருட்டுப் பிள்ளைகளுக்கான விசேட நீதிமன்றம் தாபிக்கப்படல் அத்தகைய ஒரு விசேடமான விதியாகும்.பிள்ளைகளுக்கான இந்த நீதிமன்றம் வழமையான வழக்கு விசாரணைக்கான கட்டிடத்தில் அல்லாமல் வேற ஒரு கட்டிடத்தில் அல்லது அறையில் அமைக்கப்படல் வேண்டும். கொலை, கொலை எத்தனிப்பு, கைமோசக்கொலை போன்ற கடுமையான குற்றச் செயல்கள் நீங்கலாகப் பிள்ளை களாலும் இளம் பிராயத்தினராலும் இழைக்கப்படும் ஏனைய எத்தகைய குற்றச் செயலாக இருப்பினும் அது பற்றிய வழக்கு விசாரணை பிள்ளைகளுக்கான இந்த நீதிமன்றத்திலேயே நடைபெறும். பிள்ளைகளுக்கான நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும் ஒரு பிள்ளை அல்லது இளம்பராயத்தவர் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கையின்போது அவனில் அல்லது அவளது நலனிலே அக்கறை கொள்ளல் இந் நீதிமன்றத்தின் அடிப்படையான எதிர்பார்ப்பாகும். அவசியமேற்படும் சந்தாப்பங்களில் பொருத்தமற்ற சூழலில் இருந்து அவனை அகற்றிக் கொள்ளல், கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றை அளிக்க ஊக்குவித்தல் போன்ற செயல்கள் மூலம் அவர்கள் நலனைக் காக்க வகை செய்யப் பிள்ளைகளுக்கான இந் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும். பிள்ளை அல்லது இளம்பராய நபர் பிள்ளைகளுக்கான நீதிமன்றத்தில் சமூகமளிக்க முன்பு அது தொடர்பாகப் பொலீசார் பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை விவகாரங் களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும். பிள்ளைகளும் இளம் பராயத்தினரும் பொலீசாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது நீதிமன்றத்திலே அவர்கள் ஆஜராக்கப்பட முன்னர் அல்லது பின்னர் அல்லது ஒரு நீதிமன்றத்தில் ஆஜராக்கக் கொண்டு செல்கையில் அல்லது கூட்டாக ஏனைய பிரதிவாதியோடு அல்லாதவிடத்து வேறும் வயதுவந்த பிரதிவாதிகளோடு பழகவிடாது அவர்களைத் தவிர்த்துகொள்ளல் வேண்டும். ஒரு பெண்பிள்ளை எனின் ஒரு பெண் பாதுகாவலர் பொறுப்பில் விடப்பட வேண்டும். இந் நீதிமன்றத்திலே விசாரிக்கப்படும் வழக்குகள் பற்றிய அறிக்கைகள் பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படல் ஆகாது. பிள்ளைகளது நலனையே கருத்தில் கொண்ட சஞ்சிகைகளில் அல்லது வெளியீடுகளில் அவை பிரசுரமாக அனுமதி இருப்பினும் அத்தகைய சந்தர்ப்பங்களில் கூடப் பிள்ளையின் அல்லது இளம் பராயத்தினரின் ஆளடையாளம் காணப்படத்தக்கவாறு விபரங்கள் வெளியிடப்பட அனுமதிக்கப்படா.

## 2ம் பகுதி – பிள்ளைகள் இளம் பராயத்தினர் பற்றிய குற்றங்களை விசாரணை செய்யும் அனைத்து நீதிமன்றங்கள் தொடர்பான விசேட நடைமுறைகள்

பிள்ளைகள் மற்றும் இளம் பராயத்தினர் தொடர்பான சட்ட விவகாரங்களின்போது அவர்களது நலனில் விசேட கவனங் கொண்டு செயற்படல் எந்த நீதிமன்றத்திலாயினும் அவர்கள் பற்றிய நடிவடிக்கைகளின்போது பின்பற்றவேண்டிய விசேட நடைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகும். இக் கட்டளைச் சட்டம் அதனையே அறிமுகஞ் செய்கிறது. ஒரு பிள்ளையினது நன்மையைக் கருத்திற்கொண்டு விதிக்கப்பட்டுள்ள அவ்வாறான சட்டங்களும் விதிகளும் பின்வருமாறு:

1. பொலீசில், நீதிமன்றத்தில், அல்லது வேறு இடங்களில் பிள்ளைகளையும் இளம் பராயத்தினரையும் ஏனைய வயதுவந்த குற்றஞ்சாட்டப்பட்டவரிலிருந்து தனித்து வைத்தல்.

2. பிணையில் விடுவிக்கத் தக்க குற்றங்கள் தொடர்பாக பிள்ளைகள் இளம் பராயத்தினர் சார்பில் பெற்றார் அல்லது பாதுகாவலர்கள் பிணை நின்றால் அவர்களைப் பிணையில் செல்ல விடல்.

3. பிணையில் விடுவிக்க முடியாதசந்தர்ப்பங்களில் பிள்ளைகளையும் இளம்பராயத்தினரையும் சிறைச்சாலைக்கு அனுப்பாது தடுத்துவைக்கும் ஓர் இல்லத்துக்கு அல்லது பொருத்தமான ஒரு நபருக்குப் பொறுப்பளித்தல்.

4. வழக்கு சம்பந்தமான சகல சந்தர்ப்பங்களிலும் பெற்றாரை அல்லது பாதுகாவலரை பிள்ளையின் சார்பாக நீதிமன்றத்தில் தரித்திருக்க அனுமதித்தல்

5. நீதிமன்றத்திலே ஆஜர் செய்யப்பட்ட பிள்ளை / இளம் பராயத்தவர் தொடர்பாகப் பாதுகாப்பு அவசியப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தவருக்கு அறிவித்தல்.

6. மற்றொருவர் சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது ஒரு கைப்பிள்ளை அல்லது எவ்வயதைச் சேர்ந்த ஒரு பிள்ளையாயினும் நீதிமன்றத்திலே தரித்திருத்தல் தடைசெய்யப்படுதல்.

7. ஒரு பிள்ளை நீதிமன்றத்திலே சாட்சியளிக்கும் சந்தர்ப்பத்தில் வழக்கோடு நேரடியாகத் தொடர்புட்ட கட்சியாளரைத் தவிர ஏனைய அனைவரும் நீதிமன்றில் இருந்து வெளியேற்றப்படல்

8. பிள்ளைகளோடு/ இளம் பராயத்தவரோடு நீதிமன்ற அறிக்கைகள் பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகைகளில் பிரசுரித்தல் தடைசெய்யப்படல்.

9. ஒரு பிள்ளை/ இளம்பிராயத்தினன் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படும்போது அது வேறு எந்தவொரு விடயத்தின் மட்டிலும் தகுதியைப் பாதிக்கும் ஒரு விடயமாகக் கருதப்படாதிருத்தல்.

10. குற்றவாளிகளாகும் பிள்ளைகள் அல்லது பாலப் பருவத்தினன் மட்டில் தண்டனை வழங்கும்போது அவர்களது நலனுக்கு ஏதுவாகத் தக்க தண்டனைகளை வழங்குதல், அவ்வாறு தண்டிக்கப்படுவோரை அத்தாட்சிப்படுததப்பட்ட பாடசாலைகளுக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்புதல்.

11. குற்றத்துக்கு தண்டனையாக அபராதம் விதிக்கப்படுமிடத்துப் பிள்ளை/ இளம்பராயத்தவர் சார்பாகப் பெற்றார் அபராதம் செலுத்தும்படி விதிக்க ஆவன செய்தல்.

12. உடல் ரீதியான தண்டனை விதிக்கப்படுமிடத்து ஒரு பிள்ளையின் மட்டில் அல்லது இளம் பராயத்தினர் மட்டில் வழங்கப்படும் அத் தண்டனை இலேசான ஒரு பிரம்பினாலான 6 அடிகளுக்கு வரையறுக்கப்படுவதோடு அத் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது / அவளது பெற்றார் முன்னிலையிலே வழங்கப்படல்.

13. பிள்ளைகள் / இளம் பராயத்தவர்கள் மட்டில் குற்றவாளி, வழக்குத் தீர்ப்பு போன்ற பதங்களுக்குப் பதிலாக முறையே குற்றமிழைத்திருப்பதாக் கருதுதல் அத்தகைய கருதுதலின் அடிப்படையில் கட்டளையிடல் போன்ற பதங்களைப் பிரயோகித்தல்.

## 3ம் பகுதி- குற்றவாளிகளாகும் பிள்ளைகள், இளம்பராயத்தினர் ஆகியோரது பாதுகாப்புக்கான தடுப்பு இல்லங்கள், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள், அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தொடர்பான விதிகள்

குற்றத்துக்குத் தண்டனை என்பது சட்டத்தின் அடிப்படை அம்சமாகும். தண்டனைகள் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு விதமாக விதிக்கப்படு கின்றன. பிள்ளைகள் மற்றும் இளம்பராயத்தினர் தொடர்பான கட்டளையின் கீழ் பிள்ளைகள் மற்றும் இளம் பராயத்தினர் மட்டில் விதிக்கப்படும் தண்டனைகள் அவர்களது நலனைக் கருத்திற்கொண்டு வழங்கும் பொருட்டுத் தாபிக்கப்பட்ட பல நிறுவனங்களும் அமுலாக்கப்படும் பல விதிகளும் உள்ளன. அக் கட்டளையின் 3ம் பிரிவில் இடம்பெறும் அத்தகைய நிறுவனங்கள் பற்றிய சுருக்கமான விபரம் வருமாறு: (பின்வரும் விபரங்கள் மனித உரிமைகள் தொடர்பான நிலையத்தால் வெளியிடப்பட்ட மிக விசேடமான ரீதியில் கடினமான நிலையின் கீழ் வாழும் பிள்ளைகளும் சட்டமும் என்ற வெளியீட்டில் இருந்து பெறப்பட்டதாகும்)

### தடுத்துவைக்கப்படும் இல்லங்கள்

தடுத்து வைக்கும் இல்லங்கள் பிள்ளைகள் மற்றும் இளம் பராயத்தினர் தொடர்பான ஆணையை அமுலாக்கும் பொறுப்பினைத் தாங்கும் அமைச்சரால் தாபிக்கப்படுகின்றன. இந்த இல்லங்கள் அரசினர் நிறுவனங்களாக இருக்கலாம். அல்லது தொண்டர் நிறுவனங்களால் நிருவகிக்கப்படும் நிறுவனங்களாக இருக்கலாம். அல்லது ஒரு தனி நபரது இல்லமாக இருக்கலாம். ஓர் அரசாங்க நிறுவனமாயின் நன்னடத்தை மற்றும் ஓர் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும். ஒரு தடுத்துவைக்கும் இல்லத்தில் பின்வரும் 5 சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தடுத்து வைக்கப்படலாம்.

(1) நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காகத் தடுத்துவைத்தல்

(2) நீதிமன்றத்தால் தீர் மானிக்கப்படும்வரை தடுத்து வைத்தல்.

(3) அத்தாட்சிப் படுத்தப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் கட் டளை நிறைவேற்றப்படும் வரை தடுத்து வைத்தல்.

(4) சிறைவாசத்துக்குப் பதிலீடாக (ஒரு மாதத்துக்கு மேற்படாத ) தடுத்துவைத்தல்.

(5) மரண தண்டனைக்குப் பதிலாக (ஜனாதிபதியினால் விடுவிப்புக் கட்டளை விதிக்கப்படும் வரை ) தடுத்து வைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைகளும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளும்.

இப்பாடசாலைகள் பிள்ளைகள் மற்றும் இளம் பராயத்தினர் தொடர்பான ஆணையை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அமைச்சரால் தாபிக்கப்படும். அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலை என்பது ஓர் அரசாங்க நிறுவனமாகும்.

இக்கட்டளையை அமுலாக்கு முன்னர் இதனை ஒத்த ஒரு நிறுவனம் இருந்தபோதும் அது சமய ரீதியான ஓர் அமைப்பினால் நிருவகிக்கப்பட்டது. அந் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை என அழைக்கப்பட்டது. பிள்ளையை வீட்டுச் சுற்றாடலில் இருந்து அகற்றி ஒழுக்க நெறிக்கு உட்படுத்தி நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்தல் இத்தகைய பாடசாலைகளின் பணிகளாகும். பாடசாலைக் கல்வியோடு தொழிற் கல்வியும் இவற் றினால் வழங்கப்படும்.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பாடசாலை, ஒரு கட்டளையை விதிப்பதாயின் பிள்ளை 12 வயதினைத் தாண்டி இருத்தல் வேண்டும். அத்தகைய கட்டளை பிறப்பிக்கபடுமிடத்துத் தடுத்துவைக்கும் காலம் மூன்று வருடங்களாகும். எனினும் நன்நடத்தையோடு காலங்கழிப்பதற்கான வாக்குறுதியின் அடிப்படையில் அனுமதிப் பத்திரத்தோடு விடுவிக்கலாம். அவ் வாக்குறுதி மீறப்படுமிடத்து மீண்டும் பாடசாலைக்கு அழைக்கப்படு வார். ஒரு வருடத்தில் 14 நாட்களுக்கு மேற்படாத ஒரு விடுமுறைக்கான அனுமதி அதிபரால் அளிக்கப்படும். இவ்விடுமுறையை அவர் வீட்டிலே கழிக்கலாம். கல்வி போன்ற விவகாரங்களுக்காக அதனிலும் கூடுதலான ஒரு நீண்ட விடுமுறையை நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்புக்கான ஆணையாளர் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம். (கண்காணிப்பு அல்லது பாதுகாப்புத் தேவைப்படுமிடத்து அது பற்றிய விபரங்களை நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.)

## புனர்வாழ்வு இல்லம்

கட்டுப்பாடு இன்றி உலவுவோர் தொடர்பாக எந்த ஒரு நீதிமன்றம் முன்னிலையிலும் ஆஜர் செய்யப்பட்டுக் குற்றவாளி என நிரூபிக்கப்படுபவர் புனர்வாழ்வு இல்ல ஆணையின் கீழ் அவரை ஒரு புனர்வாழ்வு இல்லத்துக்கு அனுப்புதல் இயலும். பொதுவிடங்களில் காரணமின்றி நடமாடுவோர், உரிய வசிப்பிடமற்ற அல்லது தொழில் வசதியற்ற நபர்கள் கட்டுப்பாடு இன்றி உலவுவோர் தொடர்பான கட்டளையின் கீழ் குறிக்கப்படுவோர் ஆவர். இவ்விரு கட்டளைகளும் பிள்ளைகள், இளம்பராயத்தினர் ஆகியோர் மீது மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. இவை வயது வந்தோர் மட்டிலும் செல்லுபடியாகின்றன. இக்கட்டளைக்கு காலவரையறை இல்லாத காரணத்தினால் அமைச்சரூடாக அதிகாரம் படைத்தோரால் விடுவிக்கப்படலாம். அரசாங்க நிறுவனங்களான இவை சமூக சேவைத் திணைக் களத்தினால் நிருவகிக்கப்படுகின்றன.

## அனாதை இல்லங்களும் பிள்ளைகளுக்கான இல்லங்களும்

அனாதை இல்லங்கள் தொடர்பான கட்டளையின் கீழ் இல்லங்கள், 'அனாதை இல்லம்', 'பிள்ளைகளது இல்லம்' என இருவகைப்படும். அனாதை இல்லம் தற்போது சுதந்திர பிள்ளைகள் இல்லம் என அழைக்கப்படுகிறது. இவை ஒரு தொண்டர் இயக்கத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபிக்கப்பட்டவை. கட்டளைச் சட்டத்தின் கீழ் புனர்வாழ்வுக்கான அனைத்து இல்லங்களும் அனாதை இல்லங் களினது பதிவாளர் (தற்போது நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாள்) மூலம் பதிவு செய்யப்படல் வேண்டும். இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 'பிள்ளைகளது இல்லம்' தற்போது அரசினர் பொறுப்பேற்கும் பிள்ளைகளது இல்லம் என அழைக்கப்படுகிறது. இவை அரசினர் நிறுவனங்களாகும். ஆஸ்பத்திரி போன்ற பொது இடங்களில் கைவிட்டுச் செல்லப்படும் பிள்ளைகளின் பொருட்டே அரசினர் பொறுப்பேற்கும் பிள்ளைகளது இல்லம் தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் பதிவு இரத்துச் செய்யப்பட்ட (செல்லுபடியாகாத) ஓர் அனாதை இல்லத்தினது பிள்ளைகளையும் இங்கு (அரசினர் பொறுப்பேற்கும் பிள்ளைகளது இல்லத்தில்) சேர்க்கலாம்.

### 4ம் பகுதி – பிள்ளைகளையும் இளம் பராயத்தினரையும் தொழில்களில் ஈடுபடுத்துதல் தொடர்பான நடைமுறைகள்

கட்டளைச் சட்டத்தின் இப்பிரிவு செயலிழந்து காணப்படுகிறது. அதன் பொருட்டுச் சட்டத்தின் மூலம் பிள்ளைகளதும் இளம் பராயத்தினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆவன செய்யப்பட்டிருந்த சட்டங்களை உள்ளடக்கி ஒரு கட்டளைச் சட்டமாக்கப்பட்டுள்ளது.

### 5ம் பகுதி – பிள்ளைகள் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாதலையும் ஒழுக்கம் சார்ந்த மற்றும் உடலளவிலான விபத்துக்களுக்கு உள்ளாதலையும் தவிர்த்தல்.

கட்டளைச் சட்டத்திலே இப்பகுதி தற்போது செயலிழந்து காணப்படுவதுடன் இப் பகுதியின் 76வது பிரமாணம் மட்டும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப் பிரமாணத் தின்படி 16 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளைக்குப் புகையிலை, புகைபிடிக்கப் பயன்படும் வேறு பொருட்கள் மற்றும் சிகரட் போன்றவற்றை விற்பனை செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

செல்லுபடியாகும். 75ம் பிரமாணத்தைவிட ஏனைய பிரமாணங்கள் பிள்ளைகள் கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாதல் ஒழுக்கம் தொடர்பான மற்றும் உடல் ரீதியான கொடுமைகளுக்கு உள்ளாதல் என்பவற்றைத் தவிர்ப்பதற்காக விதிக் கப்பட்டிருந்த சட்டங்கள் பெண்கள்/ பிள்ளைகள் சேவையில் ஈடுபடுத்தப்படல் மற்றும் தொழிற்சாலைகள், மாடிகள் அலுவலகங்கள் போன்றவற்றின் பணியாளர் சட்டம், பிள்ளைகள் இளம்பராயத்தினர் சம்பந்தப்பட்ட தகாத பிரசுரங்கள், மற்றும் கட்டுப்பாடற்று உலவுவோர் தொடர்பான கட்டளைச் சட்டம் போன்ற வேறு கட்டளைகளும் விதிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் மற்றும் இளம் பராயத்தவர் தொடர்பான (தீமை பயக்கும் பிரசுரங்கள்) 1956ம் ஆண்டு 48ம் இலக்கச் சட்டம்.

இச்சட்டத்தின் இரண்டாம் பிரமாணப்படி பிள்ளைகள், இளம்பராயத்தினர் ஆகியோரை அடையத்தக்க பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்ற தீமை பயக்கும் வெளியீடுகளைப் பிரசுரித்தல், விற்பனை செய்தல் என்பன குற்றமாகும். பிள்ளைகள், இளம்பராயத்தவர்கள் மட்டில் தீமை பயக்கும் வெளியீடுகளாகக் கருதப்படுவன எவை? அத்தகைய வெளியீடுகளை அவர்களிடம் விநியோகிக்கும் குற்றங்கள் மற்றும் அக்குற்றங்களுக்கான தண்டனைகள் என்பன இக் கட்டளையால் விபரிக்கப்படு கின்றன. பிள்ளைகளுக்குத் தீங்கு பயக்கும் வெளியீடுகள் பற்றிய சட்டம் தொடர்பான பகுப்பாய்வின் போது 1927ம் ஆண்டு ஆபாச வெளியீடுகள் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின் விதிகளும் பிரதானமானவையே.

## பெண்கள் இளம் பராயத்தினர் ஆகியோரைச் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பான 1973ம் ஆண்டு 28ம் இலக்க சட்டம்.

பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதினையுடைய பிள்ளைகளை வேலையில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ள இளம் பராயத்தினரின் நலன் கருத்தி தொழில் வழங்குனர்கள் விசேட சலுகைகளையும் பாதுகாப்பையும் வழங்கு தலைக் கட்டாயமாக்கல் போன்ற விடயங்களோடு தொடர்புபட்ட பல சட்டங்கள் இக்கட்டளையில் குறிக்கப்பட்டுள்ளன.

## வர்த்தக நிறுவனங்களில், அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர் தொடர்பான 1977ம் ஆண்டு 12ம் இலக்கச் சட்டம்

இச்சட்டத்தின் 10ம் பிரமாணப்படி 14 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையை ஒரு வர்த்தக நிலையத்தில் அல்லது அலுவலகத்தில் வேலையில் ஈடுபடுத்தல் தடைசெய்யப் பட்டுள்ளது. கட்டளையின் 10 (2) ம் பிரமாணப்படி ஒரு வர்த்தக நிலையத்தில் அல்லது அலுவலகத்தில் சேவையில் உள்ள 14-16 வயது இளம்பராயத்தவரை வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய சட்டபூர்வமான விதிகள் அதில் விபரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பொருள் - 12

# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்களை அமுலாக்கல்

பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாக்க ஏதுவாகும் சட்டங்களையும் விதிகளையும் உள்ளடக்கிய சட்டமூலாதாரங்கள் பல முந்திய ஆய்வுப் பொருள்களில் விளக்கப்பட்டன. அவ்வாறான பல சட்டங்கள் நடைமுறையில் இருப்பினும் பிள்ளைகளுக்கு எதிராகக் குற்றங்கள் இழைக்கப்படல், உடல் உள ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாதல், பிள்ளைப் பருவத்திலே அனுபவிக்க உரித்துடைய அடிப்படைத் தேவைகளையும் பாதுகாப்பையும் இழத்தல் போன்ற செயல்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

பிள்ளைகளது உரிமைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இத்தகைய அநியாயங்களைத் தவிர்த்துக்கொள்ள தற்போது அமுலில் உள்ள சட்டங்களும் விதிகளும் போதுமானவை அல்ல. தற்போது வழக்கிலுள்ள சட்டங்கள் பற்றி மக்கள் அறிவூட்டப்படாதிருத்தல் மற்றும் சில சட்டங்கள் செயற்படாதிருத்தல் என்பன இவ்வாறான நிலைமை உருவாகக் காரணிகளாக அமைகின்றன. எனவே பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதன் பொருட்டுச் சட்ட முறையினால் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க நடைமுறைகளை உரியவாறு பூர்த்தி செய்து கொள்ளப் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான சட்ட முறையை வலுப்படுத்துதல் அவசியம். மேலும் அச் சட்டங்களைப் பற்றி மக்களை அறிவூட்டுதல் அவசியமாகும். சட்டத்தை அமுலாக்கும் நபர்களுக்கும் இயக்கங் களுக்கும் உதவுதலும் அவசியமேயாகும்.

இவ்விடயத்தில் பிள்ளைகளது கல்வியோடு தொடர்புடைய அதிபர்களாலும் ஆசிரியர் களாலும் பொறுப்பு மிக்க பணிகள் பலவற்றை ஆற்ற முடியும்.

## பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் தொடர்பாக மக்களை அறிவூட்டல்.

பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் அவை தொடர்பான சட்டங்கள் என்பன பற்றிப் பிள்ளைகளது பெற்றாரை உள்ளடக்கியதாக மக்களை அறிவூட்டுவதற்கு பாடசாலை என்ற இயக்கம் பரந்துபட்ட ஒரு பணியை ஆற்றலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கக் கூட்டங்கள், சமூகத் தொடர்பு மற்றும் மக்களோடு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சி நிரல்கள் என்பன இதன் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளத் தக்கவையாகும்.

## பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான சட்டங்களை அமுலாக்கும் அமைப்புகளுக்கு உதவுதல்

பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பொலிஸ் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்புத் திணைக்களம் என்பன பரந்த ஒரு பணியினை நிறைவேற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் திணைக்களம்

பிள்ளைகளுக்கு மாறாக இழைக்கப்படும் குற்றங்களினின்றும் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக செயற்படும் பிரதானமான நிறுவனமான பொலீசாரோடு தொடர்புகொள்வதாலும் பொலீசாருக்கு உதவுவதாலும் ஒரு பாடசாலை முக்கியமான ஒரு பணியினைப் புரியலாம்.

1978ல் மாதர் மற்றும் சிறார் பணிப் பிரிவு, என்ற பெயரால் பெண்களினதும் பிள்ளைகளினதும் நலன் பொருட்டான ஒரு விசேட கூறு பொலீஸ் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைமைச் செயலகம் கொழும்பு பொரளையில் பொலீஸ் நிலையத்தை அடுத்து அமைந்துள்ளது. பிள்ளைகளுக்கு மாறாக இழைக்கப்படும் குற்றங்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பான வேறு குற்றங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள இத் தலைமைச் செயலகத்தில் அல்லது சகல பொலீஸ் நிலையங்களிலும் செயற்படும் மாதர் மற்றும் சிறார் பணிப்பிரிவு அலகுகளில் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிள்ளைகளுக்கு எதிராகக் குடும்பத்தில் அல்லது வெளியில் செயயப்படக்கூடிய குற்றங்களில் நின்றும் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக உதவும் அதிபர்களும் ஆசிரியர்களும் தேவைப்படின் இரகசியத்தைக் காத்துக் கொண்டு பிள்ளைகளது நலன் பொருட்டுப்ப பொலீசாருக்கு உதவலாம்.

### சிறார் நன்னடத்தை மற்றும் பாதுகாப்புத் திணைக்களம்

1956 வரை சிறைச்சாலை மற்றும் நன்னடத்தை திணைக்களம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட இவ்வியக்கம் 1956 தொடக்கம் சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. தற்போது கொழும்பிலே அமைந்திருக்கும் தலைமைக் காரியாலயத்தின் தேசிய அமைப்புக்கு ஒரு ஆணையாளரும் மாகாணங்களில் மாகாண நன்னடத்தை ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து நீதிமன்றத் தொகுதிகளுக்காகவும் நன்னடத்தை கூறுகளை நிறுவலாம். தற்போது நீதிமன்றத் தொகுதிகள் 70 இருப்பினும் 43 தொகுதிகளுக்கு மட்டுமே நன்னடத்தை கூறுகள் தாபிகப்பட்டுள்ளன. சில நன்னடத்தை கூறுகள் இரண்டு அல்லது மூன்று நீதிமன்றத் தொகுதிகளில் பணியாற்றுவதுண்டு.

பிள்ளைகளது நலனைக் கருத்திற்கொண்டு சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் பல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றது. கொடுங் குற்றங்கள் அல்லது வேறு குற்றங்கள் மட்டில் குற்றவாளிகளாகக் காணப்படும் பிள்ளைகளையும் இளம் பராயத்தவரையும் நல்வழிப்படுத்தும்பொருட்டு நீதிமன்ற விதிகளுக்கேற்ப அப்பிள்ளைகள் தொடர்பான நீதிமன்றம் நிருவாகம், ஆலோசனை, உதவி வழங்குதல் என்பன நன்னடத்தை திணைக்களத்தினால் நடத்தப்படும். பிள்ளைகளை வளர்ப்புப் பிள்ளைகளாகச் சுவீகரித்துக்கொண்டு வளர்க்கும் சந்தர்பபங்களில் அப்பிள்ளைகளது நன்மைக்கு உதவுவதும் இத் திணைக்களத்தினது பொறுப்பேயாகும்.

தீங்கான குடும்பச் சுற்றாடல் காரணமாக அல்லது வயதுவந்தோரது தகாத செயல்கள் காரணமாகத் துன்புறும் பிள்ளைகளது நன்மைக்காக சட்டபூர்வமான நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தினது பல்வேறு உதவிகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளலாம். இத் திணைக்களத்தினது விலாசம் வருமாறு:

**சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்புத் திணைக்களம்**
**95, சேர், சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 2.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள் உரிமைகள் மீதான சட்ட மூலங்கள்

Adaptation of Children Act No. 38 of 1979
Age of Majority, Ordinance No. 7 of 1865
Children And Young Persons, Act No. 2 of 1978
Children And Young persons (Harmful publications). Act No. 40 of 1956
Civil Procedure Code No. 53 of 1980
Code of Criminal Procedure , Act No: 15 of 1979
Corporal Punishment, Act No. 51 of 1939
Educational Ordinance , No. 31 of 1939
Employment of Young persons, Women and children, Act No 28 of 1973
Penal code
Legitimacy, Act No 3 of 1970
Obscene publications, Ordinance No; 4 of 1927
Marriages (General)
Probation of Offenders. Act No. of 1946 (Profane Publications, Act No: 41 of 1958)
Public Servants (liabilities) Act No: 10 of 1951
Shop & Office Employees. Act No. 12 of 1978
State (Liability in Delict) Act No. 22 of 1969
The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, 1978
Trust, Act No. 30 of 1971
Widows' & Orphans' Pension fund, Act No: 1 of 1957
Youthful Offenders (Training School) Act No: 42 of 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org